# அமுது

அමුද

தமிழுக்கும் அமுதென்று பேர்

AMUDHU

ஊற்று 2
துளி 11
AUGUST 2000



இலங்கையின் மாதாந்த குடும்ப சஞ்சிகை - ஆகஸ்ட் 2000 -30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினகரன்

திනකරන් වාරමන්ජරි | வாரமஞ்சரி | THINAKARAN VAARAMANJARI

உங்கள் வாரமஞ்சரி பல்வேறு பயன்மிக்க அம்சங்களைத்
தாங்கி வெளிவருகின்றன.
அதிகளவு செய்திகள், சமகால விடயதானங்கள்,
அர்த்தபுஷ்டியான கட்டுரைகள்...
தமிழ் பேசும் தேசியக் குரலான தினகரன் வாரமஞ்சரி வாசகர்களுக்குப்
புதிய தரிசனங்களைத் தருவதில் தொடர்ந்தும் முன்னணியில் நிற்கின்றது.
வாசிப்புக் கலாசாரத்தை வளர்த்தெடுப்போம்!
நிறைவுபெற்ற மனிதர்களாக வாழ்ந்திடுவோம்!!
வாழ்வதற்காகவே வாசிப்போம்!!!
கற்பவை கற்று களிப்புடன் வாழ்வோம்
தினகரன் வாரமஞ்சரி சுமந்து வரும் இனிமையான இலக்கியக் கட்டுரைகள்,
அதிரடி அரசியல் அலசல்கள், சிந்தைக் கவரும்
சிறுகதைகள், தொடர்கதைகள்,
முண்டியடித்து வரும் சினிச் செய்திகள். வைத்திய ஆலோசனைகள்,
ராசிபலன் மற்றும் மங்கையர், சிறார்களுக்குரிய அனைத்து அம்சங்களும்
தேசிய ரீதியாக பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கின்றன
என்பது ஒரு மைல்கல் சாதனையே!

## செந்தூரம்

தினகரன் வாரமஞ்சரியின் இலவச இணைப்பிதழ்
வயது, பால் வித்தியாசமின்றி உளமறிந்து சகலரையும் அரவணைத்துச்
செல்லும் தொலைக்காட்சி கையெடுடனான ஒரு பல்சுவை விருந்து
சகல லேக்ஹவுஸ் முகவர்களிடமும்,
புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AMUDHU
அமுது

# உள்ளே...

## அமுதக் கடலில்...


அமுத வாசல் .................... 2
காசிக்குப் போனால் .............. 4
காயாத கானகத்தே ................ 5
**நெற்றிக்கண்** .................. 6
வாசலைத் தாண்டிய கடிதம் ........ 7
**அரசியல்:**
1953 ஆகஸ்ட் ஹர்த்தால் .......... 8
தீர்வைக் குழப்பியாயிற்று ......... .12
**சிறுகதை:** தப்பாத குறி ......... .17
மீண்டும் டெங்கு ................ .18
**சிறுகதை:** ஏவாலின் விலா எலும்பு ... .20
சுடச்சுடப் பாண் ................ .22
**கவிதை:**
நீங்கள் தூவிய மலர்கள் .......... .25
ஊமையாய் செவிடராய் ............ .26
வாலுக்குப் போவதெங்கே? ......... .29
எங்கும் எதிலும் கலப்படம் ........ .30
**சிறுகதை:**
பறக்கும் தட்டு ................. .32
**விளையாட்டு:**
மில்லேனிய ஒலிம்பிக் ............ .33
நாயகன் போகும் இடம் ............ 34
**சிறுகதை:**
பகலும் இரவும் ................. 36
சகிப்புத் தன்மை ................ 39
**குங் ஃபூ:**
குறைகளை வெல்லப் பயில்வோம் ..... .40
**சினிமா:**
தமிழ் சினிமா நிஜமும் புனைவும் .... 42
**மருத்துவம்:**
ஹோமியோபதி .................... 46
நூல் அறிமுகம் .................. 48



**உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை**
**அமுது வரவேற்கிறது.**
**ஆசிரியர், 'அமுது'**
**இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**

E-Mail: webmgr@sri.lanka.net





12 வந்த தீர்வைக் குழப்பியாயிற்று





40 குறைகளை வெல்லப் பயில்வோம்

30 எங்கும் எதிலும் கலப்படம்





42 மும்பையில் இருந்து ஒரு தேவதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அமுது'வின் ஜுன் மாத இதழ் மாதத்தின் இறுதியில் கிடைக்கப்பெற்றோம். மாதத்தில் முதல் வாரம் வந்துகொண்டிருந்த உன் வரவு மாத இறுதிக்கு சென்றுவிட்டது. நினைக்கையில் கவலையாக உள்ளது. இருந்தபோதும் ஜுன் மாத இதழில் இடம்பெற்ற அம்சங்கள் அனைத்தும் அருமையிலும் அருமை...!

குறிப்பாக 'நல்லதோர் வீணை செய்தே...'ல் இடம்பெற்றிருந்த ஆசிரியரின் கருத்து எமது அறிவையும், அறிவின் ஆழத்தையும் தொட்டுக் கலக்கியது. மேலும் 'இலங்கை - இந்திய உறவா? தமிழக-புலிகள் உறவா?' என்ற கட்டுரையும், தமிழ்க் கட்சிகளுடனான தொலைபேசிப் பேட்டியும், 'அடுத்த ஆண்டின் ஆதர் சி கிளார்க்கின் எதிர்வுகூறல்கள்' பகுதியும் சிறப்பாக உள்ளது.
தொடர்ந்து வெளியாகி வந்த 'நோயற்ற' என்ற மருத்துவப் பகுதி இல்லாது போயிருக்கிறது. இனிவரும் காலங்களிலாவது குறைகள் இல்லாத நிறைவு பெற்ற பொக்கிஷமாய் புதுப் பொலிவுடன் மாதத்தின் முதல் வாரத்தில் அமுது வெளிவர வேண்டும் என வேண்டி, வாழ்த்துகிறோம்....

**றியாஜ், டிலானி, நயாஜ், றிஸ்வியா, சியாஜ், சியானா - கற்பிட்டி.**

"நீங்கள் தூவிய மலர்கள்" அமுதுவுக்கு தனிச்சிறப்பை வழங்கி வருகின்றது. 'உயிரை உருக்கி - உலகை வசீகரிக்க' கட்டுரை அமுதின் சமூக நோக்கை கட்டியம் கூறி நின்றது. இயற்கை இறைவனின் கொடை! அதன் கொடைக்கு மனிதனே தடை! எச். எஸ். டீனின் கைவண்ணம் தனி நடை! அமுதிற்கு உண்டு தனி வாசகர் படை!

**ஏ.என்.எம். ஜவாத் - புத்தளம்.**

அமுது இலக்கியத் தரமான சர்வதேச தரத்துடன் கூடிய பத்திரிகை என்ற கருத்துக்கு மாற்று இருக்காது என நம்புகின்றேன். கணினி வடிவமைப்பு, தரமான கவிதைகள், கதைகள், வரலாற்றுச் சான்றுகள் என அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டியவை. எனவே "அமுது' ஈழம் தாண்டியும் புதுமை படைத்திட வாழ்த்துக்கள்.

**பீற்றர் ஜோன்தாஸ் - மன்னார்.**

கொழும்புத் தினசரிகள், சஞ்சிகைகள் எமக்குக் கிடைப்பதில்லை. தயவுசெய்து அமுது இதழ்கள் கிடைக்க வழிவகை செய்யுங்கள்.

**கந்த. ஞானமுத்து - கைதடி மேற்கு.**

பல பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் இடைவிடாமல் ஆர்வத்துடன் படிக்கும் நான் 'அமுது' பத்திரிகையை படிப்பதற்குத் தவறுவதுண்டு. காரணம் என்னுடைய பிரதேச பத்திரிகைக் கடைகளில் அமுது சில மாதங்களில் வரும். சில மாதங்களில் வராமல் ஏமாற்றும். எனவே அமுது இதழை தொடர்ந்து படிக்க வாய்ப்பளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

**ஜப்பார் அஸார் - அட்டாளைச்சேனை.**

இந்திய பத்திரிகைகளுக்கு இணையாக நமது நாட்டில் ஒரு வெளியீட்ட இல்லையென்ற குறைப்பாட்டை "அமுது" தீர்த்து வைக்கிறது. தன் உள்ளீடுகளை அமுதாகவே சுரந்து கொண்டிருக்கிறதென்பதில் புகழ்ச்சியில்லை. 'இந்தியா டுடே'யை ஒத்திருக்கிறது. ஆனாலும் பக்கங்கள் போதவில்லை.

காத்திரமான பாடைப்புகள் மூலம், தரமான ஒரு வாசகர் சமூகம் உருவாவதற்கு அமுதுவின் பணி காலத்தின் அவசியமென உணர்த்துகிறது.

**எம். ஏ. நஜுமுதீன்**
**அக்கரைப்பற்று.**

"வெற்றிப் புன்னகை" சிறுகதை நன்று. 'வசீம் இனி வருவாரா' கட்டுரையில் உலகில் தலை சிறந்த வீரர்களில் வசீமும் ஒருவர் என்பதை விளக்கியிருந்தமை மகிழ்ச்சிக்குரியது.

**ஏ. சீ. எம். முஸம்மில் - குளியாப்பிட்டிய.**

அமுதே... நீ சுமந்து வரும் ஆக்கங்களினூடு ஒரு மாதத்தின் தனிமையை நிறைவேற்றி வைக்கிறாய். பலகோடி வாழ்த்துக்கள்! முன் பக்க அட்டையில் பிரசுரிக்கும் படத்தின் பெயரைத் தந்தால் சிறப்பாக இருக்கும். காலதாமதத்தையும் குறைக்க வேண்டும்.

**எம். எச். எப். ருஸ்னா - எதுன்கஹகொட்டுவ.**

மிக தாமதமாகவே அமுது கிடைத்த போதும் கிடைத்ததில் பெரு மகிழ்ச்சியே ஏற்பட்டது. இம்முறை அரசியல் பேசிய கட்டுரைகள், பேட்டிகள் எல்லாமே.... சிறப்பாக அமைந்திருந்தது. துணிச்சலான வெளிப்பாடு.
நீங்கள் தூவிய மலர்கள் ஏனோ மணம் வீசவில்லை... 'மரணம்', 'மரணங்கள் மதிப்பு மிக்கவை' - சுகன், புஸ்பராஜா - கவிதைகள், 'பாலத்திலிருந்த கிழவன்' - என்னைப் பரவசப்படுத்திய, நிறைவைத் தந்த பக்கங்களாகும்.
ஆதர் சி. கிளார்க்கின் எதிர்வுகூறல்களை படித்த பிறகு, அடுத்த நூற்றாண்டுவரை வாழ்ந்துவிடவும் ஆர்வம் துளிர்க்கிறது.
பாகா உருகுறேனே... என்கிற நாட்டுப்பாடலும், பிற சங்க இலக்கிய கவிதைப் பகுதிகளும்... மிக ரசித்தேன்.
ஜனரஞ்சகத்துக்கும்... இலக்கிய செழுமைக்கும் இடையில் அமுது எதிர்நோக்குகிற தர்ம சங்கடம் புரிகிறது. அதனாலேயே.. அமுதை இதற்கு அப்பால் இலக்கிய இதழாக, நான் கண்ட கனவை கலைத்துவிட வேண்டி நேர்ந்தது. எப்படியோ அமுது சிறந்த சஞ்சிகை என்பதில் பெரு மகிழ்ச்சியே. அதன் வளர்ச்சியும் நிலைக்க வேண்டும் என்பதே எனது அவாவுமாகும். உங்களின் பணிகளுக்காகவும் முயற்சிகளுக்காகவும் நிறைய பாராட்ட வேண்டும்.

**அனார் - சாய்ந்தமருது-16.**

'அமுது'வை 'இலங்கை டுடே' என்றுதான் வாங்குகிறேன் வாசிக்கிறேன் நேசிக்கிறேன் வாழ்த்துகிறேன்!
**- சாய்ந்தமருது எம்.எம்.எம்.நகீபு.**

அரசியலில் மற்ற பத்திரிகைகள் தொட அஞ்சும் பாதையில் 'அமுது'! தமிழர்க்கு இன்று வேண்டிய கருத்துக்களை முதுகெலும்போடு சொல்வதற்கு வாழ்த்துக்கள்!
**- யாழ்ப்பாணம் வி. துஷிகரன்.**

அமுதின் விமர்சிப்புகள் தொடர வேண்டும். விமர்சனங்களே நிதர்சனங்களை வெளிக்கொணரும். சக்கரவர்த்திக்கு (பல) சபாஷ். பெண்ணுணர்வினைப் புரிந்த பெண்கள் எழட்டும். அமுது இடம் தரட்டும்!
**- ஓலுகலை ரஸீனா புஹார்.**



வழவழப்பான வண்ணப் பக்கங்களைக் குறைத்து, விலையையும் குறைத்து, எங்கள் நெஞ்சை நிறைக்கும் அமுது எல்லா இடங்களிலும் நிறையட்டும்!
**- வவுனியா எம். வினோதினி.**



ஜனரஞ்சகமாய் தெரியும் அமுதை வாழ்த்துவதில் தப்பில்லை. புதிது புதிதாய் வித்தியாசமாய் ஆக்கங்களை தேர்ந்தெடுப்பதில் தேர்ச்சி தெரிகிறது... பேசப்படுகிறது... அமுது எல்லா இடங்களிலும் பேசப்பட வேண்டும்.
**- கந்தளாய் ஏ. எம். நபீர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதலாவது தேசிய தமிழ் சஞ்சிகை

# நல்லதோர் வீணை செய்தே....

முரண்பாடுகள்!
எல்லா இடத்திலும் எல்லோர் மத்தியிலும் எல்லோருக்கு மிடையேயும் காணப்படுவது. முரண்பாடுகள் இல்லாத ஒரு நாடோ, சமூகமோ, குழுவோ, தனி மனிதனோ இல்லை. ஒவ்வொருவருக்கு உள்ளேயும் முரண்பாடுகள் உள்ளன.
முரண்பாடுகள் எப்போதுமே பாதகமானவை எனக் கொள்ளப் படுவதற்கு இல்லை. முரண்பாடுகள் பல சந்தர்ப்பங்களில் வளர்ச்சிக்கான காரணிகளாக அமைகின்றன.
முரண்படாதிருந்திருந்தால் இன்றைய மனிதன் தோன்றியிருக்க மாட்டான். இன்றைய அறிவும் வளர்ந்திருக்காது. பூமி தட்டையென்று நம்பிய காலத்தில் அதை உருண்டையென சாதிக்க அன்றைய சமூகத்துடன் முரண்பட நேர்ந்தது.
விருப்பு வெறுப்புகள், அறிவு, கொள்கைகள், கருத்துகள், நடைமுறைகள் யாவற்றிலும் முரண்பாடுகள் செயற்படுகின்றன. முரண்பாடுகள் தோன்றுகின்றனவென்றால் அங்கு செயற்பாடு நடக்கிறது என்பதே பொருள். மாறாக முரண்பாடே இல்லையென் றால் அங்கு செயற்பாடே இல்லையென்று பொருள்.
நேரும் எதிரும் ஒன்றுக்கொன்று முரணானவையாகத் தோன்றலாம். ஆனால் அவற்றின் ஒத்திசைவில்தான் மின்சாரம் பிறக்கிறது. ஆணும் பெண்ணும் எதிர்ப் பாலினர்தான். ஆனால் அவர்களின் சேர்க்கையில்தான் குடும்பம் உருவாகிறது. சூடு - குளிர், ஒளி - இருள், வெண்மை - கருமை, மென்மை - வன்மை யாவுமே முரண்நிலைகளல்ல. மாறாக அவை மாற்றீடுகள்.
மனித வாழ்விலும் முரண்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. முரண்பாடுகளைக் கையாளும் கலையே வாழ்க்கை. முரண்பாடுகளேயின்றியல்ல, முரண்பாடுகளுக்குள் வாழ்வதுதான் யதார்த்தம். அதற்கு முரண்பாடுகள் பற்றிய தெளிவு வேண்டும். பகை முரண்பாடு நேச முரண்பாடு என்ற இருவகை முரண்பாடுகளையும் நாம் வேறுபிரித்து உணரும் தன்மை வேண்டும். நேச முரண்பாடுகள் ஆரோக்கியமானவை. வளர்ச்சிக்கு உதவுபவை. பகை முரண்பாடுகளோ அழிவுகரமானவை. ஒன்றையொன்று நிர்மூலமாக்கும் முனைப்புக் கொண்டவை. பல சந்தர்ப்பங்களில் நாம் நேச முரண்பாடுகளாக விளங்க வேண்டியவற்றைப் பகை முரண்பாடுகளாக மாற்றிவிடுகிறோம். இனப் பற்றாக இருக்கும்வரை நேச முரண்பாடாக இருக்கும் இனங்களுக்கிடையிலான உறவு இன வெறியாக மாறிவிடும்போது பகை முரண்பாடாகிவிடுகிறது. பகை முரண்பாடுகளை வென்று நேச முரண்பாடுகளுடன் வாழ்வதில்தான் வாழ்வின் வெற்றி தங்கியுள்ளது. - ஆ.ர்.



பக்க வடிவமைப்பு (கணனி):
ஜெறால்ட் எஸ். நடேசன்
எழுத்தமைப்பு (கணனி):
எஸ். எம். பிரேம்குமார்

அச்சிட்டு வெளியிடுவோர்:
அசோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ்
ஓ∴ப் சிலோன் லிமிடெட்
இல. 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசிக்குப் போனால் கரு உண்டாகும் என்று...

பெண்ணின் வயிற்றில் குழந்தை வளர்வதை ஆதிகால மனிதன் எப்படி எடுத்துக் கொண்டான்/ள்?

தமது உறவின மூதாதையர் ஒருவர் ஆவியாக உருவெடுத்து பெண்ணின் வயிற்றுக்குள் நுழைந்து குழந்தையாக வெளியே வருகிறது என்பதுதான் அன்றைய கால நம்பிக்கை!

கருத்தரித்தலில் ஆணுக்கும் சமபங்கிருக்கும் உண்மை புரிபடாத நிலை இருந்தது. அந்நாளில் பிள்ளைப் பேற்றினைப் பொறுத்தவரையிலும், பெண் அமானுஷ்ய சக்தி உள்ளவளாகக் கருதப்பட்டாள்.

கருத்தரிப்பதைக் கண்டறிய பல்வேறு முறைகள் கையாளப்பட்டு வந்தன.

குழந்தையின் அசைவு, ஒலி போன்றவற்றைக் கொண்டு கண்டறிவது ஒரு முறை.

மாதவிலக்கு தடைப்படுதல், உடல் கோளாறுகள், தலைசுற்றல், வாந்தி, மனநிலைக் கோளாறுகள் முதலியன கருத்தரித்தலின் விளைவுகளென சந்தேகிப்பது இன்னொரு முறை.

அறிவு வளர்ச்சியடையாத அக்காலத்தில் பல்வேறு ஊக முறைகளும் இருந்துள்ளன.

கோதுமைச் செடியில் தினமும் பெண்ணின் சிறுநீரை பத்து தினங்களுக்கு ஊற்றி வந்து... கோதுமைச் செடி வளர்ந்திருந்தால் பெண்ணின் கருவினுள் வளர்வது ஆண் குழந்தையென்றும் செடி வளராமல், அதேசமயம் வாடிவிடாமலும் இருந்தால் பெண் குழந்தையென்றும் தீர்மானத்துக்கு வந்தனர்.

மத்திய கால ஐரோப்பியர்கள் கையாண்ட முறையே இது. கருத்தரித்த பெண்ணின் சிறுநீரில் தானியங்களை வளரச் செய்யும் ஹோர்மோன்கள் இருப்பதாக நம்பியதன் விளைவு இது.

1941இல் ஏர்ள் ஹென்றிக்சன் *(Erle Henriksen)* என்பவர் எகிப்தியரிடையே இச்சோதனையை செய்து 76% சரியான முடிவைப் பெற்றுள்ளார்.

ஆண்-பெண் இருவரில் யாரிடம் மலட்டுத்தன்மை உள்ளது என்பதனை அறிந்து கொள்வதற்காக அவரைக் கொடியில் ஒரு மாத காலம் சிறுநீரை ஊற்ற வேண்டும். யாருடைய சிறுநீருக்குச் செடி வளரவில்லையோ அவருக்கு மலடு இருப்பதாக இந்தியாவில் நம்பப்பட்டது.

சிறுநீரைக் கொண்டு கருத்தரித்தலைக் கண்டறியும் நிலை பழங்காலத்திலே உலகெங்கும் இருந்த வழக்கமாகும். பெண்ணின் சிறுநீரை எடுத்து வைத்திருந்து, மூன்று நாட்களின் பின் அதை ஒரு தூய வெள்ளைத் துணியில் ஊற்றிப் பார்க்கையில், அதில் சின்னஞ்சிறிய உயிரிகள் இருக்குமாயின், நிச்சயம் அப்பெண் கருத்தரித்திருக்கிறாள் என நம்பலாமென்று அரிஸ்டோட்டல் குறிப்பிட்டுள்ளார்.

சவோன்ரோலா *(Savonarola)* என்னும் அறிஞர் கருத்தரித்த ஆறு மாதங்கள் வரை பெண்ணின் சிறுநீர், வெளிர் எலுமிச்சை நிறத்தில் இருப்பதைக் கொண்டு அறியலாம் என்றார். மாக்னஸ் *(Magnus)* என்பவர், பெண்ணின் சிறுநீர் பாலை உறையச் செய்துவிடும். இதன் மூலம் கருத்தரித்திருப்பதை உறுதி செய்யலாம் என்றார்.

கி. பி. 1553ல் ரூஃப் *(Rueff)* என்னும் அறிவியல் ஆய்வாளர், இரவில் பெண்ணின் சிறுநீரை ஒரு கண்ணாடி கிளாஸிலிட்டு அதனுள் ஒரு இரும்பு ஊசியை போட்டுவிட வேண்டும். மறுநாள் அந்த இரும்பு ஊசியில் துருவேறி இருந்தால் அதை வைத்து பெண் கருத்தரித்துள்ளதை ஊர்ஜிதம் செய்யலாம் என்றார்.

18, 19ம் நூற்றாண்டுகளில் மருத்துவர்கள், பெண்களின் உணர்விழத்தல் அடிப்படையில் ஊகிக்க முயன்றனர். 'நீ கருத்தரித்திருப்பது போல் உணர்கிறாயா?' என்பதே முதலில் கேட்கப்படும் வினாவாக இருந்தது. கண்களைச் சுற்றி உருவாகும் கருவளையத்தை வைத்து அறியலாம் என்றும் கருதினர். வயிற்றுப் பகுதியையோ, கீழ் வயிற்றையோ சோதனை செய்ய அஞ்சினர். அவை சிசு வளர்ச்சியை பாதிக்கும் என்றே பயந்தனர்.

கருத்தரித்தலைக் கண்டறிய இன்றும் மருத்துவர்கள் பெண்ணின் சிறுநீரைப் பரிசீலனைக்கு அனுப்புவது வழக்கத்தில் உள்ளது. ஆனால் நிலைமை முன்பு போலல்ல.

பெண்ணின் கருப்பையைச் சூழ்ந்திருக்கும் திரவத்தை ஊசியின் மூலம் எடுத்து பரிசோதித்து பிறக்கப் போவது ஆணா பெண்ணா என்பதைக் கண்டறியும் வழக்கம் அதிகமாகி வருகிறது. தவிர, ஸ்கேனிங் செய்யும் முறையும் பரவலாகி வருகிறது.

கருத்தரித்தல், கரு வளர்ச்சி, பிரசவித்தல், வளர்த்தல், சமூக உறுப்பினராக்குதல் என்ற 5 கட்டங்களைத் தாண்டிய பிறகே ஒரு பிள்ளை தன் காலில் நிற்கும் தகுதியை அடைகிறது.

உயிரினங்களில்... வளர்ந்து ஆளாவதற்கு கூடிய காலம் எடுப்பது மனித இனம்தான்.

பன்னெடுங்காலம் தொட்டே பிள்ளைப் பேற்றிலும், பேணி வளர்ப்பதிலும் பெண்கள் ஒரே முறையையே கையாள்வதால் தான் பெண்கள் பின்தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று பெண்ணியவாதிகள் கூறுகின்றனர்.

'மங்கையாய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டுமம்மா' என்று பூச்சுற்றிப் பாடுவதோடு அமைதியடைந்து விடுகின்றனர் ஆண்கள். •



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காயாத கானகத்தே நின்றுலாவும்...

காட்டு மிருகங்களும் மனிதனும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. ஒன்றில் ஒன்று தங்கியே வாழ்கின்றன. மனிதன் மட்டும் வாழ்ந்து கொண்டு மிருகங்கள் அழிக்கப்படுமானால் அது இயற்கைச் சமநிலையைக் கெடுத்துவிடும். இதனைப் பற்றி இன்னும் சிந்திப்பதற்கு மனிதன் தலைப்படாததால் ஏராளமான உயிரினங்கள் அழிந்து செல்கின்றன.

இவை மனிதனின் கைகளினாலேயே அழிக்கப்படுவதென்பது ஒரு வேதனையான விடயம். பல்வேறு காரணங்களுக்காக மனிதன் மிருகங்களை அழிக்கின்றான். அவற்றுள் உணவுத்தேவை, அல்லது மிருகங்களின் எண்ணெய் வகைகளைப் பெறல் மட்டுமன்றி விளையாட்டுக்காகவும் விநோதத்துக்காகவும் இந்த உயிர்களை மனிதன் அழிக்கிறான். கவிஞர் ஒருவர் சொன்னது போல, ஏனைய உயிரினங்களெல்லாம் தமக்கான இரைக்காகவே இன்னொரு உயிரைக் கொல்லுகின்றன. மனிதன் மட்டும் தான் கொல்கிற சந்தோஷத்துக்காகவும் கொல்கிறான்.

அந்த வகையில் நாம் பார்த்துக் கொண்டிருக்கவே மனிதன் அழித்துக் கொண்டிருக்கும் ஓர் மென்மையான விலங்கினம் புள்ளிமான்கள்.

கொஞ்சமும் கெடுதி இல்லாத இந்த வெள்ளை உள்ளம் கொண்ட புள்ளிமான்கள் துள்ளி விளையாடுவதைக் கண்டால் கட்டியணைத்து முத்தமிடவே மனம் ஏவும். இவை மனிதரோடு மிக நெருக்கமாகப் பழகிவிடும் பண்பும் கொண்டவை.



நம் நாட்டிலுள்ள புள்ளிமான்கள் இலங்கைக்குரிய விசேட, கண்ணைக் கவரும் ஒரு விலங்கினம். *The SriLankan Spotted Deer* என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இதன் உயிரியல் விஞ்ஞானப் பெயர் *Axisaxis Ceylonesis* ஆகும்.

ஈரவலயம், உலர்வலயம்... இரண்டு பிரதேசங்களிலும் வாழக்கூடிய விலங்குகளான இவை, இன்று பாதுகாக்கப்பட்ட காடுகளுக்குள் மாத்திரம் தஞ்சமடைந்துள்ளன.

கூட்டமாக தன்னினத்தவர்களுடன் சேர்ந்திருப்பதையே விரும்பும் இப்புள்ளிமான்கள் தம் குட்டிகளை ஒருபோதும் தனியே திரியவிடாது. இலை, குழைகளும், பழங்களுமே இவற்றின் பிரதான உணவுவகைகள். காலையிலும், வெயில் தணிந்த மாலையிலுமே இவை உணவுண்ண வெளியே வரும். அதிக வெயில் தாங்க முடியாதவை. பகல் பொழுதில் மர நிழலில் ஓய்வெடுத்துக்கொள்ளும்.

மான்களின் கேட்கும் திறனும், பார்க்கும் திறனும் மிகக் கூர்மையானது. ஆண் புள்ளிமான்கள் 3 அடி வரையில் உயரமானவை. பெண்கள் சற்று உயரம் குறைந்தவை. இவற்றின் வாழ்வுக்காலம் பத்தாண்டுகள் மாத்திரமே. (அதற்குள்தான் எத்தனை கொடுமைகளுக்குத் தப்ப வேண்டும்...)

அழகான வேலைப்பாடுகள் செய்தது போன்று, கிளை விட்ட கொம்பு புள்ளிமான்களின் விசேடக் கொடையாகும். வளர்ந்த ஒரு ஆண் மானின் கொம்பு சுமார் ஒன்று அல்லது ஒன்றரை அடி வரை வளர்ந்திருக்கும். ஒரு வருடத்தில் கொம்பு தானாகக் கழன்று மீண்டும் முளைக்க ஆரம்பிக்கும். ஆனால் அதற்கு முன்பதாகவே அந்தக் கொம்பின் அழகில் மயங்கிய மனிதர்கள் மானைக் கொன்று கொம்பைக் கழற்றிவிடுகிறார்கள்.

சாதாரணமாக 6-8 மாதங்கள் வரை குட்டியை வயிற்றில் சுமந்து வருடத்துக்கு ஒரு குட்டியை மாத்திரமே ஈனுபவை மான்கள். மிக அரிதாகவே இரண்டு குட்டிகளை ஈனும்.

தேவநம்பிய தீசன் காலத்திலேயே (அதாவது 2000 ஆண்டுகளுக்கு முன்பே) எமது நாட்டில் மான், மரை போன்றவற்றை வேட்டையாடுவதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் இச்சட்டம் தளர்த்தப்பட்டது. ஆயுதங்களது வருகை, நகரமயமாக்கல் ஆகியவையே இதற்குக் காரணம். 1815இல் இந்தச் சட்டம் பற்றி மீண்டும் பேசப்பட்டது. பிறகு 1909இல் மீண்டும் சட்டம் அமுலுக்கு வந்தது. ஆயினும் இன்று வரையில் அச்சட்டம் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இறைச்சிக்காகவும், தோலுக்காகவும், கொம்புகளுக்காகவும் மான்கள் கொல்லப்பட்டே வருகின்றன.

புள்ளிமான்கள் பாதுகாக்கப்பட்ட காடுகளுக்குள் மட்டும் ஒளிந்திருப்பது இவற்றின் எதிரிகளான புலி, சிங்கம் போன்றவற்றிற்குப் பயந்தல்ல. மாறாக மனிதனின் மிருக வேட்டைக்குப் பயந்துதான். மனிதனுக்குப் பயந்து ஜீவமரணப் போராட்டம் நடத்தும் இப் புள்ளி மான்களைப் பாதுகாத்து, அவை உயிரோடு துள்ளி விளையாடும் அழகை ரசிக்கும் மனம் எல்லா மனிதருக்கும் எப்போது கைகூடும்?

- எச். எஸ். டீன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அரசியலில் அரிச்சுவடி மட்டும் தெரிந்தவர்கள் கூட எதிர்பார்த்தபடி அரசு முன்வைத்த தீர்வுத் திட்டம் சம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் நடந்து கொண்டுள்ளன.

பௌத்த சிங்கள பேரினவாதத்தின் அரசியல் கதாநாயகனான ஐ.தே.க. இவ்வாறு நடந்துகொண்டதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை. அது பிறந்ததிலிருந்து இன்றுவரை அதன் தலைமை பேரினவாதத்தைத் தொடர்ச்சியாக பின்பற்றி, தமிழ் மக்களுக்கும் இதர சிறுபான்மை இனங்களுக்கும் எதிராகவே நடந்து வந்துள்ளது.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், மலையக மக்களின் பிரஜாவுரிமை, வாக்குரிமையைப் பறித்தது, சிங்களம் மட்டும் தீர்மானத்தை முன்மொழிந்தது, பண்டா - செல்வா உடன்படிக்கையை எதிர்த்து கண்டி யாத்திரை சென்றது, 1958 - 77 - 81 - 83 ஆண்டுகளில் தமிழர் விரோத வன்செயல்களை நடாத்தியது, யாழ். நூலகத்தையும் நகரையும் தீயிட்டுக் கொளுத்தியது, வெலிக்கடைச் சிறையில் தமிழ்க் கைதிகளை கொலை செய்தது, தமிழ் மக்கள் மேல் கொடிய யுத்தத்தை தொடங்கி கணக்கு வழக்கில்லாமல் உயிர், உடைமை சேதம் ஏற்படுத்தியது... இப்படி அனுமார் வால் போல் நீளும் ஐ.தே.க. வின் தமிழர் விரோத சாதனைப் பட்டியல்.

எனவே இப்போதைய தீர்வுத் திட்டத்திற்கு எதிராக மட்டுமல்ல, இனிமேலும் இப்பட்டியல் நீண்டு செல்லும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

ஆனால் வடக்கிலும், கிழக்கிலும், வன்னியிலும் வாழுகின்ற - யுத்தத் தீயில் பொசுங்கி கருகுகின்ற லட்சக்கணக்கான தமிழ் மக்கள், தம்மால் தெரிவு செய்யப்பட்ட தமிழர் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் தமிழ் - விரோத துரோக நாடகத்தைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர்.

அவர்கள் பண்டா - செல்வா ஒப்பந்தம், மாவட்ட சபைகள், மாவட்ட அபிவிருத்திச் சபைகள், இலங்கை - இந்திய ஒப்பந்தம், நோர்வேயின் மத்தியஸ்தம், இறுதியாக இன்றைய தீர்வுத் திட்டம் என்றவாறு 50 ஆண்டுகளாக தீர்வுக்காகவும் சமாதானத்திற்காகவும் ஏங்கியவாறு காத்திருந்து இன்று கையறு நிலைக்கு வந்துள்ளனர்.

ஒவ்வொரு முறையும் சமாதானத்தின் கதவு தட்டப்படும் போதும், அதைத் திறக்க விடாது இறுக்கமாக இரும்புத் தாழ்ப்பாள் போட்டது ஐ.தே.க. இன்றோ நிலைமை முற்றிலும் மாறுபாடானது. ஐ.தே.க. வும் அதன் தலைமையில் சிங்கள பேரினவாத சக்திகள் ஒரு பக்கமும் தமிழர் கூட்டணியும் அதன் தலைமையில் தமிழ் (மக்கள் விரோத) இனவாத சக்திகள் இன்னொரு புறமும் சேர்ந்து நின்று தாழ்ப்பாள் போட்டுக் குதூகலிக்கின்றனர்.

ஆனால் அரசியலைத் தொடர்ந்து அவதானித்து வருபவர்களுக்கு த. வி. கூட்டணியின் இந்தத் துரோகச் செயல் ஒன்றும் அவ்வளவு புதுமையானதல்ல.

தெற்கில் ஐ. தே. க. விலிருந்து பிரிந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தோன்றியபோது, இது தீவிரமான ஏகாதிபத்திய விரோத தேசியக் கட்சியாகத் தோன்றியது. ஆனால் வடக்கில்

# அரசியல் இரட்டையர்கள்

ஐ.தே.க. வின் மறுபதிப்பாக அக்காலத்தில் இருந்த தமிழ் காங்கிரசிலிருந்து தமிழரசுக் கட்சி தோன்றியபோது, அது த. காங்கிரசின் அடிச்சுவட்டிலேயே சென்று அதற்கும் மேலாக ஏகாதிபத்திய தாசர்களாகவும் ஐ.தே.க. தாசர்களாகவும் செயல்பட்டு வந்துள்ளது.




**நக்கீரன்**

ஐ.தே.க. வுக்கு ஒரு மக்கள் விரோத வரலாறு இருப்பது போலவே பிற்போக்கு தமிழ்த் தலைமைக்கும் உண்டு. 1948ல் கிடைத்த சுதந்திரத்தை மேலும் உறுதிப்படுத்துவதற்காக 1956ல் பதவிக்கு வந்த திரு. பண்டாரநாயக்கா, பிரிட்டிஷ் இராணுவத் தளங்களை கட்டுநாயக்காவிலும் திருகோணமலையிலும் இருந்து அகற்றிய போது, அவற்றை அகற்ற வேண்டாம் என தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம் எலிசபெத் மகாராணிக்கு தந்தியனுப்பினார்.

அதுமாத்திரமன்று, பண்டாரநாயக்கா அரசாங்கங்களால் கொண்டுவரப்பட்ட எல்லா முற்போக்கு நடவடிக்கைகளையும் - நெற் காணி மசோதா, பாடசாலைகள் தேசியமயம், எண்ணெய் கம்பனிகள் தேசியமயம், தோட்டங்கள் தேசியமயம், வங்கிகள் தேசியமயம், பஸ் கம்பனிகள் தேசியமயம் - இப்படி எல்லா நடவடிக்கைகளையும் ஐ.தே.க. வுடன் சேர்ந்து எதிர்த்தவர்கள்தான் இத்தமிழ்த் தலைவர்கள்.

யாழ்ப்பாணத்தில் 1975ல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு பல்கலைக்கழகம் ஒன்றை திறந்த போது, அதையும் இத்தமிழ்த் தலைவர்கள் எதிர்த்து ஹர்த்தால் நடாத்தியவர்கள்.

ஐ.தே.க. மீதான இவர்களது விசுவாசம் நாடறிந்த சங்கதி. இல்லாவிடின் 1965ல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேரம் பேசுவதற்குக் கிடைத்த அரிய வாய்ப்பை (இவர்களது அப்போதைய பிரதான அரசியல் தந்திரோபாயம் பேரம் பேசுதலே) வேண்டுமென்றே நழுவவிட்டு வலிந்து சென்று டட்லியின் ஐ.தே.க. அரசின் பங்காளிகளாக மந்திரி பதவி பெற்றவர்கள்தான் இவர்கள்.

இவர்கள் ஐ.தே.க. வுக்குச் செய்த சேவைக்கு கைமாறாக தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டபோது, தனது கல்குடா எம். பி. தேவநாயகத்தை ஜே. ஆர். தமிழர் கூட்டணியில் இணைத்து நன்றிக் கடனைத் தீர்த்தார்.

அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது கூட மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளும், தமிழர் கூட்டணித் தலைவர்கள் சிலரும் ரணில் விக்கிரமசிங்காவுக்கு வாக்களிக்க மக்களைக் கோரியது இரகசியமானதல்ல.

அரசியலில் ஐ.தே.க. வும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இரட்டையர்கள் என்பதே உண்மையாகும்.

புலிகள் இயக்கத்தின் உருவாக்கத்திற்கு வித்திட்ட, தமிழர் கூட்டணித் தலைமை பின்னர், புலிகளாலேயே வேட்டையாடப்பட்டது வரலாறு. அது கொள்கை முரண்பாட்டால் நிகழ்ந்ததன்று. தமிழ் மக்கள் மீதான தலைமை அதிகாரப் போட்டியால் நிகழ்ந்தது.

புலிகளின் அச்சுறுத்தலால் பயந்து தடுமாறிய தமிழர் கூட்டணித் தலைமை மீது தமிழ் மக்கள் மட்டுமன்றி தென்னிலங்கை அரசியல் சக்திகளும், அரசும் கூட அனுதாபம் கொண்டதுடன் ஆதரவும் வழங்கின. வடக்கு கிழக்கில் அரச பாதுகாப்பு இல்லாமல் அரசியல் நடத்த முடியாத இவர்கள் இன்று ஐ.தே.க. வின் சொல்லைக் கேட்டு, தமிழ் மக்கள் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைத்த தீர்வை எதிர்த்து தம்மைத் தெரிவு செய்த மக்களுக்குத் துரோகம் இழைத்துள்ளனர்.

தமிழர் பிரச்சினைக்கு இத்தீர்வு போதாது என்று வேஷம் போட்டு இவர்கள் எதிர்ப்பதும், தமிழர்க்கு உரிமைகள் வழங்கக்கூடாது என்று ஐ. தே. க. எதிர்ப்பதும் எதிரும் புதிருமான நிலைப்பாடுகளாகத் தோன்றலாம். ஆனால் நேர் எதிர் திசையில் செல்வது போலத் தோன்றினாலும், இருவரும் இறுதியில் செல்லும் இடம் ஒன்றே.

தமிழ் மக்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய தருணம் இதுதான். பட்டுப் பீதாம்பரம் கிடைக்கும் வரை கோவணமும் இல்லாமல் நிற்கக் கோரும் இத்தலைவர்கள் இனிமேலும் எமது பிரதிநிதிகளாக இருப்பதற்கு தகுதியானவர்கள் தானா என்பதை தமிழ் மக்கள் முடிவு கட்டியே ஆகவேண்டும். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைகளும் இரத்தமும் எம்மை எங்கு கொண்டு செல்கின்றன?

கடந்த 15 வருட எம் போராட்டக் காலத்திலிருந்து இன்றுவரை இயக்கங்களுக்கிடையில் ஒருவரை ஒருவர் கொலை செய்து அழிப்பதில் வல்லமையாய் செயல்படுகிறார்கள். இதற்கான காரணங்கள் இதுவரையும் தெளிவாக எழுதப்படவில்லை.

1985 லிருந்து புலிகள் தமிழ் இயக்கங்களை தடை செய்ததுதான் காரணம். ஏனெனில் அவர்கள் தம்மைத் தவிர்ந்த இயக்கங்களை தடை செய்து சக இயக்க போராளிகளை டயர் போட்டு தீக்கிரையாக்கியும், கண்மூடித்தனமாக துப்பாக்கிகளால் சுட்டும் கொன்றுள்ளனர்.

யாழ். கந்தன் கருணை என்ற இடத்தில் ஈ. பி. ஆர். எல் எ.்.ப்., ரெலோ, புளட் என 50க்கு மேற்பட்டோர் கொலை செய்யப்பட்டனர்.

இன்றுவரை சகோதரத்துவ வரைவிலக்கணம் தெரியாத அராஜகவாதிகளாகவும் பாசிசவாதிகளாகவுமே செயல்படுகின்றனர். இதில் தம் பலத்தை நிரூபிக்கும் சந்தோஷம்... மற்றவர்களையும் பூரிப்படைய வைக்கிறது. ஆனால் விலைமதிக்க முடியாத உயிர்களைக் காவுகொடுப்பதை இவர்கள் உணராததுதான் வேதனையைத் தருகின்றது.

எத்தனையோ நாடுகளில் யுத்தங்கள் நடக்கத்தான் செய்கிறது. எத்தனையோ பிரத்தியேகமான பிரச்சினைகளை முன்னெடுத்து, மக்களைக் கவர்ந்து, அவர்கள் திருப்தியடையக்கூடிய இலக்கிற்கு நகர்வது அந்த புரட்சி இயக்கங்களின் செயற்பாடாகும். உ-ம்: குர்திஸ் இன மக்களின் அந்தப் புரட்சி வீரனுக்கான மறியற் போராட்டங்கள்....

ஆனால் இங்கு அப்படியல்ல. இவர்கள் நடத்துகின்ற தாக்குதல்களால் பாதிக்கப்படுவது அப்பாவிப் பொதுமக்கள்தான். லயன் எயார் விமானம் குறிப்பிடத்தக்கது. சம்பந்தப்பட்டவர்கள் இன்றுவரை பதில் சொல்லவில்லை.

கடந்த புரட்டாதி மாதம் 28ம் திகதி, கிழக்கில் மட்டக்களப்பு களுவன் கேணியில், புலி உறுப்பினரைத் தாக்குவதாக தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டுக்களால் வடிவேல் யோகேஸ்வரி (34), நாகேஸ்வரி தேவன் (14) என்பவர்கள் பலியானார்கள். ஓர் தாய் தன் சேயை உருவாக்கி வளர்த்து படித்து சமுதாயத்தில் நல்ல நிலையை அடைவதற்காக படாதபாடுகிறாள். எவனோ ஒருவன் நொடிப் பொழுதில் கொலை செய்து உயிரைக் காவு கொள்வது என்பது மிக மோசமான மிருகத்தனமாகும்.

இன்னும் புலிகளால் யாழ். நகரப் பகுதியில் ஈபிடிபி, புளொட் உறுப்பினர்கள் பலரும் பலியாகி உள்ளனர்.

கடந்த ஆனி மாத கடைசி நாட்களில், புலிகள் தம்மைத் தவிர்ந்த ஏனைய இயக்கங்களை தம்முடன் இணையுமாறு தம் வானொலியில் தொடர்ந்து அறிவித்திருக்கின்றனர். இது எவரும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். தனிமனித சுதந்திரம் எல்லோருக்குமுண்டு. அரசியல் தலைவர்கள் தங்கள் தங்கள் கருத்தினை வெளியிடுவது எதிர்பார்க்கப்படும் இயல்பாகும். அதற்கு கண்டிப்பு துப்பாக்கியல்ல, பேச்சுவார்த்தையாகும்.

அனைத்து இயக்கங்களும் பேசி, சுமுகமாக ஒரே கோரிக்கையை முன்வைத்து மாநில ஆட்சியை உருவாக்கி ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று ஜனநாயக மட்டத்தில் புதியதோர் ஆட்சியை முன்னெடுத்து செல்ல முடியும். இதுவே இன்று அமைதியான வாழ்வை விரும்பும் தமிழ் மக்கள் அனைவரினதும் ஆசையும் மனப்பூர்வமான விருப்பமுமாகும். அல்லது மூன்றாவது நாட்டுடன் ஓர் தீர்க்கமான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டாலும் அது நன்மை பயக்கும் என மக்கள் வேகமாக எதிர்பார்க்கின்றனர். இதற்கான ஆக்கபூர்வமாக ஒத்துழைப்பு அனைத்து மக்களாலும் வழங்கப்படுமென்பது உண்மையும் உறுதியுமாகும்.

இப்படிக்கு
உ. ஜெனகன்.

# கொலைகளைக் கண்டிக்கிறோம். ஆனால்....

தங்களது "அமுது" மாதாந்த சஞ்சிகையில், வவுனியா புனித அந்தோனியார் தேவாலய வளவிற்குள் வைத்து அன்ரனி மரியதாஸ் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் விபரிக்கப்பட்டு அதனையொட்டிய விசனமும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்நிகழ்ச்சியைப் பற்றியும், அன்ரனி மரியதாஸ் அவர்களின் நியமனம் பற்றியும், உண்மைக்கு புறம்பாகவும், நடைபெற்ற விடயங்களை அறியாமலும் எழுதப்பட்டிருந்தது மிக மிக கவலைக்குரிய விடயமாகும். சம்பவம் நிகழ்ந்த வேளை வவுனியாவில் நானே பங்குத் தந்தையாக இருந்தேன் என்பதனாலும், சகல விடயங்களையும் நன்கு அறிந்தவன் என்ற முறையிலும் பின்வரும் உண்மைகளை கூறி வைக்க விரும்புகிறேன்.

இச்சம்பவத்திற்கு பொறுப்பானவர்கள் யார் என்பது எங்கள் பிரச்சினை அல்ல. அரசியல், வியாபார நோக்கங்களுக்காக சிலருக்கு இது முக்கியமான விடயமாகலாம். என்றும் உறுதியான, பக்க சார்பற்ற, நீதியான நிலைப்பாடுதான் எம்முடையது. யாராக இருந்தாலும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

கொலைகளைக் கண்டிக்கிறோம். அதுவும் வணக்கஸ் தலங்களில் இடம்பெறுவதை முற்று முழுதாகக் கண்டிக்கிறோம். அன்ரனி மரியதாஸ் அவர்களின் கொலைக்கு எமது பலத்த கண்டனத்தை ஆயரின் நெறிப்படுத்தலில் தான், வவுனியா மக்கள் இன, மத பேதமின்றி மாபெரும் கண்டன ஊர்வலத்தை நடத்தியதை அனைவரும் அறிவர். இந்து, இஸ்லாமிய, பௌத்த மத குருமார்களும், மதப் பெரியார்களும் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் கலந்து கொண்டு, கண்டன உரைகளையும் நடாத்தியதை இக்கடிதம் எழுதிய பெயர் குறிப்பிட விரும்பாத அந்த அன்பர் அறியவில்லையா? ஆயர் அவர்களே நேரடியாகக் கலந்து கொள்வதாக இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தினால் அவரால் கலந்துகொள்ள முடியவில்லை.

அன்ரனி மரியதாஸ் அவர்களை எமது ஆயர் இப்பணிக்கு நியமிக்கவும் இல்லை. அவருக்குரிய வேதனத்தையும் எந்த கிறிஸ்தவ சபையும் வழங்கவும் இல்லை என்பதனையும் தங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஆகவே இப்பேற்பட்ட பொறுப்பற்ற கண்டங்கள், குற்றச்சாட்டுக்கள், பொறுப்புமிக்க சமய, சமூக தலைவர்கட்கும், சமய சமூக அமைப்புகட்கும் எதிராக எழுதுவதை தடுப்பதும், தவிர்ப்பதும் "அமுது" போன்ற பொறுப்புமிக்க பத்திரிகைகள் சஞ்சிகைகளின் கடமை என்றே நான் எண்ணுகிறேன்.

எனவே இவ்வுண்மை நிலமையை தங்கள் "அமுது" மாதாந்த சஞ்சிகையில் பிரசுரித்து தப்பபிப்பிராயத்தை நீக்க ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்கிறேன்.

இப்படிக்கு
வண. பிதா. தி. நவரெட்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1953 ஆகஸ்ட் ஹர்த்தாலின்போது பிடிக்கப்பட்ட படம்*



# 1953 ஆகஸ்ட் ஹர்த்தால் வரலாறு பதித்த அழியாத சுவடுகள்

நவீன இலங்கையின் வரலாற்றில், 1953 ஆகஸ்ட் 12ம் திகதி, ஐ. தே. க. அரசுக்கெதிராக இலங்கையின் மக்களால் நடாத்தப்பட்ட மாபெரும் ஹர்த்தால் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்வாகும்.

“அரிசி ஹர்த்தால்” என தமிழரசு - தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளால் பிற்காலத்தில் எள்ளி நகையாடப்படும் இந்தச் சம்பவம், இலங்கை தொழிலாளி வர்க்கத்தை மட்டுமன்றி, சிங்கள - தமிழ் மக்களையும் இன, மொழி பேதமின்றி ஒன்றுபட வைத்த ஒரு நிகழ்வாகும்.

இலங்கை மக்களால் நிகழ்த்தப்பட்ட இந்த மாபெரும் போராட்டம், 1956ல் அமரர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தலைமையில் ஒரு ஏகாதிபத்திய விரோத அரசையே உருவாக வழிசமைத்தது என்றால் மிகையாகாது.

இன்று சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் என பிளவுபடுத்தப்பட்டுள்ள, எமது இலங்கைத் தீவில், மக்கள் விரும்பாத போராட்டங்களை, அவர்களது மன ஒப்புதல் இன்றி, துப்பாக்கி முனையில் நிர்ப்பந்தித்து பேராடும்படி வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும், மலையகத்திலும் சில சக்திகள் நிர்ப்பந்தித்து வருகின்றன.

ஆனால் 1953 ஹர்த்தாலின்போது போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்த இடதுசாரி தலைவர்களே, போராட்டத்தின் வீச்சைக் கண்டு மிரட்சியுற்று, போராட்டத்தை வாபஸ் வாங்கும் அளவுக்கு, அணிதிரண்ட மக்கள் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47 வருடங்களுக்கு முன்னர் நடந்த இந்த மாபெரும் போராட்டத்தின் போது, இலங்கையில் நிலவிய அரசியல் சூழ்நிலையையும் சிறிது கவனத்திற் கொள்வது அவசியமானது.

இலங்கைக்கு 1948 பெப்ரவரி 4ம் திகதி பிரிட்டனால் சுதந்திரம் வழங்கப்பட்டது. அதற்கு முன்னதாக 1947 மே - ஜூனில் இலங்கையில் இடதுசாரி தொழிற்சங்கங்களின் தலைமையில் மாபெரும் பொது வேலை நிறுத்தம் ஒன்று நிகழ்ந்தது.

இரண்டாம் உலகப் போர் முடிவுற்றதைத் தொடர்ந்து, பல தொழிற்துறைகளில் ஆட்குறைப்பு, சம்பளக் குறைப்பு, விலைவாசி உயர்வு என்பன ஏற்பட்டதால் தொழிலாளர்கள் மத்தியில் அமைதியின்மை நிலவியது. தமக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் கோரி தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

அரசாங்கம் கடுமையான சட்டங்களை இயற்றி, வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் மீது அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டது. தொழிற்சங்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு, தொழிற்சங்கக் காரியாலயங்களும், இடதுசாரி அச்சகங்களும் சீல் வைக்கப்பட்டது. பொலீஸ் மாத்திரமன்றி இராணுவமும் வீதிக்கு அழைக்கப்பட்டது. மேலதிகமாக பிரிட்டிஷ் மகாராணியின் கடற்படையும் வீதிகளில் நிறுத்தப்பட்டது.

இன்று தனிப்பட்ட முதலாளிகளால் நடாத்தப்படும் பத்திரிகைகளைப் போன்றே அன்றும் ஐ. தே. க. முதலாளிகளால் நடாத்தப்பட்ட ஏரிக்கரைப் பத்திரிகைகளும் ஏனைய பத்திரிகைகளும் வேலை நிறுத்தத்தை முறியடிக்க சகல பிரயத்தனங்களும் செய்தன.



## அம்மா... அம்மா...

குழந்தைக்குச்
சோறூட்டுகிற அம்மையிடம்
முன்பு
சாவே இல்லாமல் வாழ்ந்தவர்களைப் பற்றி,
மாடப்பிறைக்குள்
விழிகள் மட்டுமே
பிரதானப்பட்டுப் போன
காலங்காலமாய் இருந்த
முழிப் பிணங்களைப் பற்றி
கதை சொல்லி, ஊட்டச் சொல்.

பின்னால் அது
மரணப் பிரக்ஞையின்றி
விகாரப்படச்
சௌகரியமாயிருக்கும்.

- கலாப்ரியா

**கொலன்னாவையிலிருந்த பிரிட்டிஷ் எண்ணெய்க் குதங்களை நோக்கி ஊர்வலமாகச் சென்ற தொழிலாளர்களின் ஊர்வலம் ஒன்றின் மீது பொலிஸ் சுட்டதில் கந்தசாமி என்ற தமிழ் அரசாங்க ஊழியர் கொல்லப்பட்டார். அவரது தியாகத்திற்கு அஞ்சலி செலுத்துவதற்காக இன, மொழி, மத பேதமின்றி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கொழும்பு காலிமுகத் திடலில் கூடியதுடன் அவரது பூதவுடலை கோட்டை புகையிரத நிலையத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் சென்று யாழ்ப்பாணத்திற்கும் அனுப்பி வைத்தனர்.**

தொழிலாளர்களின் ஒன்றுபட்ட வேலைநிறுத்தம் அரசாங்கத்தையே ஆட்டம்காண வைத்தது. ஒரு கட்டத்தில் வேலை நிறுத்தத்தின் உறுதிப்பாட்டைக் கண்டு அஞ்சிய சேர். ஜோன் கொத்தலாவல, அரசாங்கத் தலைவர் டி. எஸ். சேனநாயக்காவிடம் சென்று, தொழிலாளர்களின் கோரிக்கைகளை வழங்கும்படி ஆலோசனை கூறியதாகவும் அதற்கு சேனநாயக்கா, "லயனல், நீங்கள் ஒரு இராணுவக்காரன் என்று நினைத்தேன்" என்று கிண்டல் செய்ததாகவும் கூறப்படுகின்றது.


டி. எஸ். சேனநாயக்கா

எப்படியிருந்தபோதிலும், அரசாங்கம் கடுமையான அடக்குமுறைகளைப் பர்வித்து வேலை நிறுத்தத்தை தோற்கடித்தது. பொலிசார் மிகவும் கடுமையாக நடந்துகொண்டனர். அப்பொழுது பொலீஸ்துறைக்குப் பொறுப்பான உள்துறை அமைச்சராக ஏ. மகாதேவா என்ற தமிழர் ஒருவரே இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்களது உள்நாட்டு பிரதிநிதிகளான இருந்த ஐ.தே.க. வுக்கும் எதிரான இந்த மாபெரும் வேலை நிறுத்தம் தோல்வியில் முடிவடைந்தாலும், தொழிலாளி வர்க்கத்தினதும் பொது மக்களினதும் எதிர்ப்புணர்வு எவ்வளவு தூரம் இருந்தது என்பதை அடுத்து வந்த 1947 பொதுத் தேர்தல் எடுத்துக்காட்டியது.

**1947ல் நடந்த பொதுத் தேர்தலில் பெருந்தொகையான தொகுதிகளில் ஐ. தே. க. வுக்கு எதிரான வேட்பாளர்கள் வெற்றியீட்டினர். முக்கியமாக இந்திய வம்சாவளி மலையகத் தொழிலாளர்கள் வாழ்ந்த பகுதிகளில் ஐ. தே. க. எதிர்ப்பு வேட்பாளர்கள் அமோக வெற்றி பெற்றனர். இதனால் ஏற்பட்ட ஆத்திரம் காரணமாகவே டி. எஸ். சேனநாயக்காவின் ஐ. தே. க. அரசு பதவிக்கு வந்தவுடன் முதல் வேலையாக இந்திய வம்சாவளி தொழிலாளர்களின் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்தெடுத்தது.**

**இந்த நடவடிக்கையை ஜீ. ஜீ. பொன்னம்பலமும் அவரது தமிழ் காங்கிரசும் பாராளுமன்றத்தில் ஆதரித்து வாக்களித்து அன்று மலையக மக்களுக்குத் துரோகமிழைத்தனர்.**


சேர் ஜோன் கொத்தலாவலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47 பொதுத் தேர்தல் முடிவடைந்ததும், அதன் முடிவுகளைப் பார்த்து ஏகாதிபத்தியவாதிகளும், உள்நாட்டுப் பிற்போக்காளர்களும் அதிர்ச்சியடைந்தனர்.



**1947ல் நடந்த பொது வேலைநிறுத்தத்தின் போது பொலீஸ் துறைக்குப் பொறுப்பான உள்துறை அமைச்சராக ஏ. மகாதேவா என்ற தமிழர் ஒருவரே இருந்தார்.**

ஏனெனில் இடதுசாரிக் கட்சிகளின் அமோக வெற்றியானது, அவர்களது தலைமையில் ஒரு அரசாங்கம் அமையக்கூடிய அளவுக்கு இருந்தது.

இடதுசாரிகள் ஐக்கியப்பட்டு, ஏனைய முற்போக்கு ஜனநாயக சக்திகளும் ஒற்றுமைப்படுத்தப்பட்டு, சிறுபான்மை இனப்பிரதிநிதிகளான சி. சுந்தரலிங்கம், ஜீ. ஜீ. பொன்னம்பலம் போன்றோர் கழுத்தறுப்பு வேலைகளில் ஈடுபடாமல் இருந்திருப்பின் சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாக ஒரு ஐ.தே.க. எதிர்ப்பு அரசு அமைந்திருக்க வாய்ப்பிருந்திருக்கும்.

1952 தேர்தலின் மூலம் டீ. எஸ். சேனநாயக்கா பிரதமரானார். அவரது அமைச்சரவையில் ஏகாதிபத்திய விசுவாசி என எல்லோராலும் நன்கறியப்பட்ட ஜே. ஆர். ஜயவர்தனா நிதியமைச்சராகப் பொறுப்பேற்றார்.

1953ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஐ.தே.க. அரசின் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த ஜே. ஆர். நாட்டு மக்கள் மீது பாரதூரமான பொருளாதாரச் சுமைகளை சுமத்தினார். பொருளாதார நெருக்கடியிலிருந்து தனது அரசைக் காப்பாற்றும் பொருட்டு அமெரிக்காவின் தலைமையிலிருந்த உலக வங்கியின் ஆலோசனைகளை ஏற்ற ஜே. ஆர். அரிசிக்கு இருந்த மானியத்தை வெட்டி 25 சதமாக இருந்த ஒரு படி அரிசியின் விலையை 70 சதமாக உயர்த்தினார். தபால், தந்தி, போக்குவரத்துக் கட்டணங்களை அதிகரித்தார். பாடசாலைப் பிள்ளைகளுக்கு மதிய நேர உணவாக வழங்கிய இலவச 'பணிஸை' பறித்தெடுத்தார்.

இதனால் ஆத்திரமுற்ற பொதுமக்கள் ஐ. தே. க. அரசின் மீது பெரும் கோபாவேசம் கொண்டனர். அரசின் இந்த முடிவுக்கெதிராக இடதுசாரி தொழிற்சங்கங்கள் 1953 ஆகஸ்ட் 12ம் திகதி நாடு தழுவிய ஹர்த்தால் ஒன்று அழைப்பு விடுத்தன.

ஹர்த்தாலுக்கு முன் தயாரிப்பாக நாடு முழுவதும் நூற்றுக் கணக்கான பொதுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சம சமாஜக் கட்சி, பிலிப் குணவர்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய 3 இடதுசாரி கட்சிகளும் அவர்களது தொழிற்சங்கங்களுமே ஹர்த்தாலை முன்னின்று ஏற்பாடு செய்தன.



**1952 ல் டீ. எஸ். சேனநாயக்கா அமைச்சரவையில், ஏகாதிபத்திய விசுவாசி என எல்லோராலும் நன்கறியப்பட்ட ஜே. ஆர். ஜயவர்தனா நிதிய மைச்சராகப் பொறுப்பேற்றார்.**

ஐ. தே. க. விலிருந்து பிரிந்த திரு. பண்டாரநாயக்கா அமைத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், தமிழ் காங்கிரஸிலிருந்து பிரிந்து திரு. வன்னியசிங்கம் தலைமையில் அமைந்த தமிழரசுக் கட்சியும் ஹர்த்தாலில் நேரடியாகப் பங்குபற்றவில்லை. ஆனால் தனது ரோஸ் மீட் பிளேஸ் இல்லத்தில் தன்னைச் சந்தித்த தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் ஹர்த்தாலுக்கான தனது ஆதரவை பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

ஹர்த்தாலுக்கான மக்களின் ஆதரவு மிகவும் உணர்வுபூர்வமாகவும் உச்சமாகவுமிருந்தது. இதைக் கண்டு மக்களிடமிருந்து விலகிநிற்கவும் விரும்பாத திரு. பண்டாரநாயக்கா ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பில் கோல்பேஸ் மைதானத்தில் மாபெரும் இறுதிக் கூட்டத்தில் உரையாற்றினார். அதேபோல, யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் இறுதிப் பொதுக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சி சார்பில் திரு. வன்னியசிங்கம் பங்குபற்றி உரையாற்றினார்.



**பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறிப்பதற்கு ஆதரவாக ஜீ. ஜீ. பொன்னம்பலமும் அவரது தமிழ் காங்கிரசும் பாராளுமன்றத்தில் வாக்களித்து மலையக மக்களுக்குத் துரோகமிழைத்தனர்.**

மலையகத் தோட்டத் தொழிலாளர்களையும் இதில் பங்குபற்ற வைக்க பலத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன. திரு. ஏ. அஸீஸ் தலைமையிலான பகுதியினர் இதில் பெரும் ஆர்வம் காட்டிய போதிலும், அப்போதைய இந்திய தூதுவராலயத்தின் செல்வாக்கு காரணமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த போராட்டத்தில் விலகியே இருந்தது.

அரசாங்கம் எவ்வளவோ முயற்சிகள் எடுத்த போதிலும் ஹர்த்தாலின் வெற்றியை தடுக்க முடியவில்லை.

பஸ், ரயில் சேவைகள் முற்றாக ஸ்தம்பித்தன. தபால், தந்தி சேவைகள் இயங்கவில்லை. காரியாலயங்கள், பாடசாலைகள் ஸ்தம்பித்தன. கடைகள் எதுவும் திறக்கப்படவில்லை. நாடு முழுவதும் மக்கள் வீதிகளில் கூடியிருந்தனர். வீதித் தடைகளை நிறுவினார்கள். பொலீசாரும் இராணுவத்தினரும் செயற்பட முடியாத நிலை

பிலிப் குண வர்த்தன



**இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, பிலிப் குணவர் தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய 3 இடதுசாரி கட்சிகளும் 1953 ஹர்த்தாலை ஏற்பாடு செய்தன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டது. சட்டம், ஒழுங்கு முற்றாக சீர்குலைந்தது. அரசாங்கம் செயலற்ற நிலைக்குத் தள்ளப்பட்டது.

ஒரு துப்பாக்கி தன்னும் இல்லாமல் ஐக்கியப்பட்ட மக்கள் சக்தியினால் இந்த மகத்தான நிகழ்வு ஏற்பட்டது.

அரசாங்கம் பகல் 12 மணிக்கு கலகச் சட்டத்தையும் பின்னர் அவசரகாலச் சட்டத்தையும் பிரகடனம் செய்தது. ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. மக்களைக் கலைப்பதற்காக சுடுவதற்கான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. ஆனால் மக்கள் அஞ்சாது நின்றனர். ஐ. தே. க. அரசின் பொலீசார் செய்த துப்பாக்கிப் பிரயோகத்தால் 12 பொதுமக்கள் தமது இன்னுயிரை இழந்தனர்.

**அரசாங்கம் செய்வதறியாது திணறியது. இலங்கைத் தீவின் எந்தவொரு இடத்திலும் தனது மந்திரிசபைக் கூட்டத்தை நடாத்த முடியாத பிரதமர் டட்லி சேனநாயக்கா, கடலில் நின்ற பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் ஒன்றில் தனது மந்திரி சபைக் கூட்டத்தைக் கூட்ட வேண்டிய அவலமான - கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டார்.**

**அதுமாத்திரமின்றி, மக்களின் கோபாவேசத்துக்கு முகம்**


ஏ. அஸீஸ்

**கொடுக்க முடியாது அஞ்சிய டட்லி, தற்காலிகமாக அரசியலை விட்டு ஒதுங்கி, பௌத்த துறவியாகப் போவதாகக் கூறி நாட்டை விட்டே வெளியேறினார். "இலங்கையில் இடதுசாரிகள் வன்முறையின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டார்கள்" என்ற செய்தி உலக பத்திரிகைகளின் தலைப்புச் செய்தியாகியது.**

ஆனால் மறுபக்கதில் தொழிலாளர்களினதும் பொதுமக்களினதும் ஐ. தே. க. வுக்கு எதிரான எழுச்சி இவ்வளவு தூரம் பிரமாண்டமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்காத இடதுசாரித் தலைவர்கள் செய்வதறியாது திகைத்தனர். நாட்டு மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக்கூடிய அரசியல் திட்டங்கள் எவையும் அவர்களிடம் இருக்கவில்லை. அதனால் அன்று மாலையே ஹர்த்தாலை வாபஸ் பெறுவதாக அறிவித்தனர்.

இந்தப் பின்வாங்கலைத் தொடர்ந்து வந்த மாதங்களில், அரசு யந்திரத்தின் கடுமையான அடக்குமுறை நடவடிக்கைகளை தொழிற்சங்க இயக்கமும் இடதுசாரி இயங்கங்களும் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

இந்த ஹர்த்தால் தொழிலாளர்களுக்கோ, மக்களுக்கோ உடனடி நன்மை எதையும் ஏற்படுத்தவில்லை என்பது உண்மையே. ஆனால் இலங்கை வரலாற்றில் பெறுமதிமிக்க பல பாடங்களை இது மக்களுக்கு வழங்கியது.

அதில் மிக முக்கியமானது ஏகாதிபத்தியத்தையும் அதன் உள்ளூர் பிரதிநிதியான ஐ. தே. க. வையும் எதிர்ப்பதில் இலங்கை மக்கள் மற்றைய நாட்டு மக்களை விட சளைக்காதவர்கள் அல்ல என்பதை வரலாற்று ஏடுகளில் என்றென்றைக்கும் அழிக்க முடியாதவாறு பொறிக்கப்பட்டது.

இன்னொன்று, மக்கள் எவ்வளவு உற்சாகமானவர்களாக இருந்தாலும் சரியான தலைமைத்துவம் இல்லாதிருப்பின் அவர்களது தியாகங்கள் விழலுக்கிறைத்த நீராகும் என்பது.

1953ம் ஆண்டு ஐ. தே. க. அரசால் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டாலும், புகழ்பூத்த அந்தப் போரட்டத்தின் உணர்வலை[illegible]


சி. சுந்தரலிங்கம்

ஆண்டு திரு. பண்டாரநாயக்கா தலைமையில் பெரும் வெற்றியுடன் எமது நாட்டில் ஒரு ஏகாதிபத்திய விரோத அரசாங்கம் அமைய வழி கோலியது.

56ம் ஆண்டுத் தேர்தலில் ஐ. தே. க. ஆக எட்டுத் தொகுதிகளில் மட்டும் வெற்றியீட்டி படுமோசமாகத் தோற்கடிக்கப்பட்டது. அதே போல இடதுசாரிக் கட்சிகளின் உறுதியற்ற செயற்பாடுகள், அவர்களை வீழ்ச்சியை நோக்கித் தள்ளி இன்றைய அவல நிலைக்கும் இட்டுவந்துள்ளது.

மகத்தான ஹர்த்தால் போராட்டம் நடந்து 47 வருடங்கள் கடந்துவிட்டாலும், ஐ. தே. க. வின் இன்றைய தலைமையும் அதே அடிச்சுவட்டிலேயே தனது அரசியல் பாதையைத் தொடர்கின்றது.

ஆனால் தொழிலாளர்களதும் பொது மக்களதும் நிலைமை மட்டும்....

அவர்கள் தமது முன்னைய ஐக்கியத்தை இழந்து, தலைமை ஏதுமின்றி, திசை தெரியாத பறவைகளாக ஆக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் வரலாறுகள் மீண்டும் மீண்டும் நிகழ்வது ஒன்றும் உலக அதிசயமல்ல.

*- குருக்ஷேத்திரன்*



## அம்மா... அம்மா...

அம்மா! எனக்கு உன் பாடல்கள்
வேண்டும்.
காப்பகத் தனிமைகளில்
வெறுமை தின்னும் தினச்சோர்வு
பிள்ளைக் குறும்புகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து
சாமங்களில் பயங்களாகத்
திரள்கின்றன எனக்குள்.

பயங்களின் மீது உன்
பாடல்கள் இறையட்டும் அம்மா!

சின்னச் சின்னச் சொற்களில்
சின்னச் சின்ன வார்த்தைகளில்
தினமும் ப்ரியங்களாகவே சொல்லிக் கொண்டிரு அம்மா!

*- நிமோஷினி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வந்த தீர்வைக் குழப்பியாயிற்று! இனி?

யுத்த அச்சுறுத்தல் உச்ச நிலைக்கு உயர்ந்துவிட்டது. உள்நாட்டுப் பிரச்சினை என்ற நிலையைத் தாண்டி சர்வதேச சமூகத்தின் கவலைக்குரியதாகிவிட்டது நாட்டு நிலைமை. பேரினவாதம் மீண்டும் தன் அவலட்சணமான சொரூபத்தைக் காட்ட முனைந்து விட்டது. தமிழ் அரசியல் கர்ண கடூரமான ஆயுதப் பயங்கரவாதத்தின் கீழ் நசுக்கப்பட்டு தன் சொந்தக் குரலையும் ஜீவனையும் இழந்து, துப்பாக்கிச் சூழலின் உந்துதலுக்கேற்ற சடத்துவமான பிற்பாட்டாக ஒலிக்கிறது. எப்படியாவது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் கண்டுவிட வேண்டும் என்று எழுந்த பிரயத்தனம், மிகுந்த ஒரு இக்கட்டுக்கு உள்ளாகியிருக்கிறது.

இப்போது ஏற்பட்டிருப்பது இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான ஒரு கட்டம். முன்னர் பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் நிகழ்ந்த கட்டங்களைப் பார்க்கிலும் மட்டுமல்ல, இந்திய - இலங்கை ஒப்பந்தம் நிகழ்ந்த கட்டத்தை விடவும் ஒரு வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் அவை யாவும் அரசியலமைப்பைத் திருத்த முயற்சித்த முன்னெடுப்புகளாக இருக்க இப்போதைய முயற்சியானது அரசியலமைப்புச் சட்டத்தையே மாற்றியெழுதும் முயற்சியாக இருக்கிறது.

இதன் மூலம் அரசின் தன்மை ஒற்றையாட்சி அரச முறையிலிருந்து மாற்றியமைக்கப்படுவது இங்கு அதிபிரதானமான ஒரு நடவடிக்கையாக விளங்குகிறது. ஏனெனில் ஒற்றையாட்சி முறையின் கீழ் பிராந்திய அரசுகளுக்குச் சட்டமாக்கும் அதிகாரம் இல்லை. மத்திய அரசிடமே அவ்வதிகாரம் மையப்படுத்தப் பட்டிருக்கிறது.

ஆனால் புதிய அரசியலமைப்பிற்கான ஆலோசனைகளில் ஒற்றையாட்சி அமைப்பை நீக்குவதற்கூடாக அவ்வதிகாரம் பிராந்திய அரசுகளுக்கு கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளது.

இந்த அரசியலமைப்பை அரைசமஷ்டி என நோக்கலாம். இந்தியாவிலுள்ளதும் அரை சமஷ்டி வகையான ஆட்சி முறையே. இந்தியாவில் மத்திய அரசுக்கு மாநில அரசை எடுத்த எடுப்பில் கலைக்கக்கூடிய அதிகாரம் இருக்கிறது. ஆனால் இதில் அவ்வாறில்லை. அந்த வகையில் இது மேலும் பாதுகாப்பான அரசியலமைப்பாக விளங்குகிறது.

இந்த அரசியலமைப்புக்கான ஆலோசனைகளில் இருக்கக்கூடிய சிறுபான்மையினருக்குச் சாதகமான ஏனைய பல அம்சங்களில் பிரதானமாகச் சுட்டிக்காட்டப்படக் கூடிய ஒன்றாக அதிகாரப் பகிர்வில் பொதுப் பட்டியல் நீக்கப்பட்டு, பிராந்திய அரசுக்கான அதிகாரங்களும் மத்திய அரசுக்கான அதிகாரங்களும் இரு தெளிவான பட்டியல்களாக வரையறுக்கப்பட்டுள்ளமை விளங்குகிறது.

முன்னைய மாகாண சபைச் சட்டமூலத்தில் இருந்த பொதுப் பட்டியல் மாகாண அரசின் அதிகாரங்களை ஊசலாட வைப்பதாக அமைந்திருந்தது. அத்தோடு அச்சட்டமூலத்தில் செய்யப்பட்டிருந்த சில ஏற்பாடுகள் மூலம் மாகாண அரசின் அதிகாரங்களை மத்திய அரசு சுவீகரித்துக் கொள்வதற்கான "திருட்டு வழி" அமைக்கப்பட்டிருந்தது.

அதனால் மாகாண அரசு அதிகாரமிழந்த ஒன்றாக்கப்படுவதற்கான ஆபத்தைக் கொண்டிருந்தது. இது 'முன் கதவால் கொடுத்து பின் கதவால் பறிக்கும்' ஏற்பாடு என விமர்சிக்கப் பட்டது.

இத்தகைய குழப்பங்கள் பதிய அரசியலமைப்புச் சட்ட வரைபில் இடம்பெறவில்லை.

இதைவிட தமிழ்க் கட்சிகள் தரப்பில் அதிக அக்கறை காட்டப்பட்ட விடயங்கள் பிரதானமாக மூன்று: சட்டம் ஒழுங்கு, காணி, அதிகாரப் பரவலாக்கல் அலகு ஆகியனவே அவை. அவற்றில் சட்டம் ஒழுங்கு என்பதில் பிராந்திய அரசுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொலீஸ் அதிகாரம் திருப்திகரமாக இருந்தது. இது குறித்து எந்தத் தமிழ்க் கட்சியும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. காணி மற்றும் அலகு பற்றிய விடயங்களிலேயே பிணக்குகள் எழுந்தன.

காணியைப் பொறுத்தவரை அரசாங்கமும் தமிழ்க் கட்சிகளும் உடன்பட்ட விடயங்கள் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்ப்பினால் மாற்றியமைக்கப்பட்டன. எனினும் அதுகுறித்து தமிழ்க் கட்சிகளின் அதிருப்தியை உணர்ந்த அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சி பின்வாங்கிய நிலையில் தமிழ்க் கட்சிகளுக்கு ஏற்ற திருத்தங்களை மீண்டும் மேற்கொண்டது.

இந்தத் திருத்தங்களின் பின் பிராந்தியங்களிலுள்ள காணிகளின் அதிகாரம் பிராந்திய சபைக்கு இருக்குமென்றும், அங்குள்ள முடிக்குரிய காணிகள் மத்திய அரசுக்கு உரியதாக இருக்குமென்றும் அதே வேளை பிராந்திய அரசுக்கு முடிக்குரிய காணிகள் தேவைப்பட்டால் மத்திய அரசிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இது தமிழ்க் கட்சிகளுக்கு பெருமளவு திருப்தியளிக்கக்கூடிய ஏற்பாடாக இருந்தது.

**முன்னையவை யாவும் அரசியலமைப்பைத் திருத்த முற்சித்த முன்னெடுப்புகளாக இருக்க இப்போதைய முயற்சி அரசியலமைப்புச் சட்டத்தையே மாற்றியெழுதும் முயற்சியாக இருக்கிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போல அதிகார அலகு பற்றிய விடயத்திலும், ஆரம்பத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியினர் வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்த்து வந்தனர். எனினும் தமிழ்க் கட்சிகளின் அபிப்பிராயத்தை நிராகரிக்க முடியாத நிலையில் ஐந்து வருட இடைக்கால நிர்வாகத்தின் பின் வடக்கு கிழக்கு இணைந்திருப்பதா என்று கிழக்கு மாகாணத்தில் ஒரு சர்வசன வாக்கெடுப்பை நிகழ்த்தலாமென ஆலோசனை முன்வைத்தனர்.

இதையிட்டு தமிழ்க் கட்சிகள் திருப்தி கொள்ளவில்லை. எனினும் அரசாங்கம் ஈ.பி.டி.பி. யினர் முன்வைத்த ஆலோசனையை ஏற்று ஐந்து வருட இடைக்கால நிர்வாக சபைக்குப் பின் பிரதேச சபைக்கான தேர்தல் நடத்தி மேலும் ஐந்து வருட ஆட்சியின் பின், அதாவது மொத்தம் 10 வருடத்தின்பின் கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தலாமென திருத்தம் செய்தனர்.

தமிழ்க் கட்சிகள் எவையுமே வடக்கு கிழக்கு இணைப்புக் குறித்த கிழக்கு மாகாண சர்வசன வாக்கெடுப்பை கொள்கையடிப்படையில் ஏற்கவில்லை. ஆனால் நடைமுறையில் தீர்வு ஒன்றைக் காணுவது பற்றிய அணுகுமுறையில் தமிழ்க் கட்சிகளிடையே இரண்டுபட்ட நிலைப்பாடுகள் தோன்றின.

ஒன்று, முடிந்தவரை தீர்வுத் திட்டத்தை சாதகமாக ஆக்குவதற்கான நிர்ப்பந்தங்களைக் கொடுத்துக்கொண்டு ஓரளவு ஏற்கக்கூடிய தீர்வாக அமையும் பட்சத்தில் அதை ஏற்று நடைமுறையில் முகம் கொடுப்பது. மற்றையது அரைகுறைத் தீர்வுகள் எவற்றையுமே நிராகரிப்பது.

'அரைகுறைத் தீர்வு' என்ற அடைமொழி ஒரு கவர்ச்சிகரமான சுலோகமாகப் பயன்படுத்தப்பட்டாலும் அதன் மறுதலை எந்த ஒரு தீர்வுக்கும் எதிரான அம்சத்தைக் கொண்டிருப்பதை நாம் உடனடி அர்த்தத்தில் புரிந்துகொள்வதில்லை. இந்த நிராகரிப்பு, மக்களின் உண்மையான தேவைகளையிட்ட ஒரு ஆழமான பரிசீலனைக்கு இடம் கொடுப்பதில்லை. மாறாக மக்களின் தேவைகளை தமது பிடிவாதகரமான சுலோகங்களுக்குக் கட்டுப்படுத்தவே நிர்ப்பந்திக்கின்றது. அத்தோடு இது யதார்த்த சூழ்நிலையைக் கணக்கில் எடுப்பதில்லை. ஒரு சரியான முடிவானது சுலோகத்தனமானதாகவன்றி கால, தேச, வர்த்தமானங்களுக்குத் தக எடுக்கப்பட வேண்டும்.

அவ்வாறு நோக்குகையில் இப்பிரச்சினையில் தமிழ்த் தரப்பு ஒன்றே ஒரேயொரு தரப்பாக இல்லை. ஏனைய தரப்பினரும் இத்தீர்வின் பங்காளிகள் என்ற யதார்த்தத்தை உணர வேண்டும். அத்தோடு நீண்ட காலத்தின் பின் ஒரு தீர்வை எட்டுவதற்காக கனிந்திருக்கும் சூழ்நிலையை நாம் அலட்சியமாக உதாசீனப்படுத்திவிட்டால் பின்னர் இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்துக்கு ஏங்கிக் கொண்டிருக்க நேரிடும் என்பதையும் புரிந்துகொண்டு இதைப் பொறுப்புணர்ச்சியுடன் கையாள வேண்டும்.

நிராகரிப்பதோ, உதாசீனம் செய்வதோ எம்மைப் போல மற்றைய தரப்பினர்களுக்கும் சுலபமான காரியமே. ஆனால் பக்குவமாக கையாண்டு ஒரு முடிவினை ஈட்ட வழி செய்வது தான் அர்த்தமுள்ள அரசியலாக இருக்க முடியும்.

எதையுமே [illegible] என்று நாமம் குத்தி நிராகரிக்கும் இந்த ஒரு பகுதித் தமிழ் அரசியல், தம்மைத்தாமே மக்கள் அபிப்பிராயத்தை வழிமொழிவதாகப் பலாத்காரப் பிரகடனம் செய்துகொள்கிறது. மக்கள் உண்மையில் என்ன வேண்டுகிறார்கள் என்று இவர்கள் ஒருபோதும் கருத்தறிவதில்லை. தமது கருத்தையே மக்களின் கருத்தாக அடித்துக் கூற விழையும் அராஜக ஜீவிகளாகவே இவர்கள் இருக்கிறார்கள். மக்கள் மனம் திறந்து பேசவிடாது இவர்கள் எப்போதும் இடத்தை அடைத்து நிற்கிறார்கள்.

இவர்களின் இந்த நிலைப்பாட்டுக்கு வெளிப்படையான பின்னணியாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு அமைந்திருப்பதை எவரும் இனங்கண்டுகொள்ளலாம். அப்படி இனங்கண்டு கொள்ளப்படுவதைக்கூட, அது அவர்களுக்கு ஒரு பாதுகாப்பான அரசியலாக அமையும் என்ற கருத்தில் இவர்கள் மௌனமாக உள்ளூர விரும்புகிறார்கள்.

அதனால் விடுதலைப் புலிகள் இதற்கு என்ன விதமாகப் பிரதிபலிப்பைக் காட்டுவார்களென்று பார்த்து அதற்கேற்ப தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துபவர்களாக இவர்கள் செயற்படுகிறார்கள்.





**தமது தலைவர்களதும் உறுப்பினர்களதும் மரணங்கள் குறித்தே பொறுப்புணர்வு காட்டாத கூட்டணியினர், தமிழ் மக்கள் நாளாந்தம் இந்தக் கொடிய யுத்தத்தாலும், அதன் விளைவுகளாலும் மரணித்துக் கொண்டும் சொல்லொணா இன்னல்களுக்கு உள்ளாகிக் கொண்டும் இருப்பதையிட்டுப் பொறுப்புணர்வு காட்டுவார்களென்று கருதமுடியாது.**

இந்தத் தீர்வுத் திட்ட விடயத்திலும் அவ்வாறே நடந்துகொண்டனர். புலிகள் கருத்துத் தெரிவிக்கும் வரை காத்திருந்தனர். இத்தீர்வுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட முன்னரே விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இதனை அவசரப்பட்டு நிராகரித்து விட்டார். அதனைத் தமக்கான சமிக்ஞையாக எடுத்துக்கொண்ட இவர்கள் அதன் பின் இத் தீர்வுத் திட்டத்தை எவ்வகையிலாவது நிராகரிப்பதற்கான ஏற்பாட்டில் இறங்கத் தொடங்கி விட்டார்கள்.

புலிகளின் இந்த அறிவிப்பு வெளியாகிய உடனேயே, அவர்களின் ஊதுகுழலாக தன்னைத் தானே மாற்றிக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் 'அரைக்குறைத் தீர்வை ஏற்க முடியாது' என்ற தனது கூக்குரலைக் கிளப்பினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்கனவே புலிகளின் மேலாதிக்கத்துக்குப் பயந்து பணிந்து போன ஒரு அமைப்பாக நசிந்து நசிந்து செயற்பட்டு வரும் ஒரு கட்சியாகும். அதன் தலைவர்களான அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் தமது அலுவலகத்தில் புலிகளோடு நடத்திய பேச்சுவார்த்தையின்போதே புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட போதும், அச்சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிர்பிழைத்த அதன் மற்றைய தலைவர் சிவசிதம்பரம் கண்கண்ட சாட்சியமாக இருக்கின்ற போதும் அக்கொலைகளுக்கு புலிகள்தான் காரணமென்பதை வெளிப்படுத்தாது மௌனம் சாதித்தவர்கள். இன்றுவரை அவர்கள் எந்த இடத்திலும் ஒப்புக்கொண்டதில்லை. இதுதான் அவர்களது கொலைகளை அங்கீகரிக்கும் பாணி!

தொடர்ந்தும் அதன் தலைவர்களான, பா. உ. தங்கத்துரை, யாழ். மேயர்கள் சரோஜினி யோகேஸ்வரன், சிவபாலன், இறுதியாக பா. உ. நீலன் திருச்செல்வம் ஆகியோர் கொல்லப்பட்ட போதும் அவர்கள் இதற்குக் காரணமானவர்களாக யாவருக்குமே தெளிவாகத் தெரிந்த விடுதலைப் புலிகளை இனங் காட்ட முன்வரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக அதற்கு ஒரு படி கீழிறங்கி 'இக்கொலைகளுக்காக நான் விடுதலைப் புலிகளைக் கண்டிக்கவில்லை' என்ற கேவலமானதும் தமது சக கட்சி உறுப்பினர்களின் முதுகில் குத்தும் வகையிலானதுமான பத்திரிகை அறிக்கையை ஜோசப் பரராஜசிங்கம் விடுத்தார்.

தமது கட்சிக்காக உயிரிழந்த அவ்வுறுப்பினர்களின் மரணத்தை ஈனப்படுத்தும் அவ்வாறான அறிக்கைகளையிட்டு கூட்டணித் தலைமைப்பீடம் கண்டுகொள்ளக்கூடவில்லை. தமது தலைவர்களதும் உறுப்பினர்களதும் மரணங்கள் குறித்தே பொறுப்புணர்வு காட்டாத இக்கட்சியினர் தமிழ் மக்கள் நாளாந்தம் இக்கொடிய யுத்தத்தாலும், அதன் விளைவுகளாலும் மரணித்துக் கொண்டும் சொல்லொணா இன்னல்களுக்கு உள்ளாகிக் கொண்டும் இருப்பதையிட்டுப் பொறுப்புணர்வு காட்டுவார்களென்று கருத முடியாது.

எனினும் தற்போதைய தீர்வுத் திட்டத்தையிட்டு கூட்டணிக்குள் மிகுந்த சலனங்கள் ஏற்பட்டன. அதனை ஏற்க வேண்டும் என்ற அபிப்பிராயங்கள் சில மூத்த தலைவர்களிடம் இருந்தது.

எனினும் கட்சிக்குள் வரவர வலுத்துவரும் விடுதலைப் புலிகளின் செல்வாக்கு அவர்களை வெளிப்படையாக வெளிவராதவாறு தடுத்திருந்தது. அத்தோடு அப்படியான ஒரு எதிர்நிலை எடுப்பதென்பது மிகுந்த அச்சுறுத்தல் மிக்க ஒன்றாக அவர்களால் உணரப்படுகிறது.

மேலும் இத்தீர்வுத் திட்டம் தொடர்பாக இன்ன முடிவுதான் எடுக்கவேண்டுமென்ற ஒருவகை பலாத்கார ரீதியான அழுத்தம் ஜோசப் குழுவினரால் உள்ளே செலுத்தப்படுகிறது.

கட்சியின் செயலாளராக இரா. சம்பந்தன் இருக்க, ஜோசப் பரராஜசிங்கமே பத்திரிகை அறிக்கைகளை முந்தியடித்தபடி விடுத்து கூட்டணியின் கருத்து நிலை அதுதான் என்று ஆக்குவதில் முனைப்பாக உள்ளார்.

சம்பந்தனோ இப்போக்கைத் தடுக்க முடியாத அந்தரித்த நிலையில் உள்ளார்.

இத்தீர்வுத் திட்டம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட தருணத்தில் கூட்டணி மிக இக்கட்டான நிலையை எதிர்நோக்கி இருந்தது. அதற்குக் காரணம் அது அடுத்த பொதுத் தேர்தலையும் எதிர்நோக்க வேண்டியவர்களாக இருந்ததுதான்.

அடுத்த பொதுத் தேர்தலில் கூட்டணிக்கு ஒத்த ஒரு வழிமுறையைக் கடைப்பிடிக்க முடியாத நிலை. மட்டக்களப்பில் ஜோசப் பரராஜசிங்கத்தின் புலிகள் ஆதரவு நிலைப்பாட்டை கொண்டிருப்பது போல யாழ்ப்பாணத்தில் செயற்பட முடியாதிருக்கிறது. அங்கு மக்களுக்கான அவசியத் தேவைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு கட்சியாகவே தன்னைக் காட்டிக்கொள்ள வேண்டியதாக அதற்கு இருக்கிறது.

ஏற்கனவே மாநகர சபையை அங்கு பொறுப்பேற்றும், அதை நடத்த முடியாத கையாலாகாத்தனத்தை நிரூபித்துவிட்டுள்ள தருணத்தில், அதற்குப் பெருத்த போட்டியாக ஈ.பி.டி.பி. பல வேலைத் திட்டங்களை அரசாங்கத்துடன் ஒத்துழைத்து முன்னெடுத்துச் செல்கிறது.

அப்படியிருக்கையில், கூட்டணிக்கும் யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தின் அனுசரணை அவசியமாகியுள்ளது. அப்போதுதான் அதனால் அங்கு மக்களுக்கு எதையும் செய்து கொடுக்கக்கூடியதாக இருக்குமென்பதுடன் ஈ.பி.டி.பி.யை சமாளிக்கக்கூடிய தேர்தல் வேலைகளை முன்னெடுக்கவும் முடியும்.

இந்தத் [illegible]

எதிர்ப்புக் காட்டுவதென்பது இவ்விடயத்தில் கூட்டணிக்கு பிரதிகூலங்களை ஏற்படுத்தும். இதை மனங்கொண்டும் கூட்டணிக்குள் ஒருபகுதியினர் இத்தீர்வுத் திட்டத்தை ஆதரிக்க வேண்டுமென உள்ளூர விரும்பினர்.



கூட்டணியின் செயலாளர் இரா. சம்பந்தன், தந்தை செல்வா உயிருடன் இருந்திருந்தால் இத்தீர்வுத் திட்டத்தை ஆதரித்திருப்பார் என அமைச்சர் அஷ்ரஃபிடம் கூறியிருந்தார். அதை அமைச்சர் அஷ்ரஃப் பகிரங்கமாக தனது தொலைக்காட்சி உரையாடலிலேயே தெரிவித்திருந்தார். அத்தோடு அவர் தனிப்பட்ட முறையில் இத்தீர்வுத் திட்டத்தை ஆதரிப்பார் என்ற கருத்தையே அரசாங்கத் தரப்பினர்களுக்கு ஏற்படுத்தியிருந்தார்.

**இங்கு நிலவும் உணர்வுகளுக்கு மத்தியில் அங்கீகாரத்தை ஈட்டக்கூடிய ஒரு தீர்வைக் காணுவது பற்றி சிந்திக்கும்போது நாம் மிகுந்த பொறுமையுடனும் நிதானத்துடனும் அவதானத்துடனும் செயற்பட வேண்டியவர்களாகிறோம். அரசியல் தீர்வைக் காணும் பொறுப்புள்ள முயற்சியை அரசியல் நடத்தும் தேர்தல் ஸ்டண்டுகளுக்காக சிதைத்துவிடக் கூடாது.**

இதேவேளை கூட்டணியின் மற்றைய தலைவரான ஆனந்தசங்கரி, லண்டனில் சிலரிடம் கருத்துத் தெரிவிக்கையில் இத்தீர்வுத் திட்டத்தை ஏற்காவிட்டால் இது தமிழ் மக்களுக்குச் செய்கின்ற துரோகமாகும் எனத் தெரிவித்திருந்தார்.

இத்தகைய ஊகங்கள் அவர்களுக்கிடையே இருந்தபோதும் வேறு பல காரணங்களால் பாராளுமன்ற வாக்கெடுப்பிலிருந்து இந்தத் தீர்வுத் திட்டம் பின் வாங்கப்பட்டதால், அபிப்பிராய பேதத்தை வெளிப்படுத்தாமல் கூட்டணி ஒருவாறு தப்பித்துக் கொண்டது.

இந்தத் தீர்வுத் திட்டத்தின் குறைபாடுகளாக இருந்த பகுதிகளுக்கு மாற்றுவழிகள் செய்து கொள்ளலாமென்ற நம்பிக்கை மாற்றுத் தமிழ்த் தரப்பினருக்கு இருந்தது. இதில் இவர்களுக்கு இருந்த அவசியமான தேவை அக்குறைபாடுகளுக்கு மாற்றுவழிகளை ஏற்படுத்துவதற்கான கால அவகாசத்தை ஈட்டிக் கொள்வதே.

அந்த வகையில் வடக்கும் கிழக்கும் இணைந்திருப்பதைத் தீர்மானிக்கும் கிழக்கு மாகாண சர்வஜன வாக்கெடுப்பை பத்து வருடங்கள் பிற்போட்டிருப்பதானது, அதற்கொரு மாற்றுத் தீர்வை ஏற்பாடு செய்வதற்கான கால அவகாசத்தை வழங்குவதாக இருக்கிறது.

இதற்கு ஏற்றவகையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் அஷ்ரஃபும் இக்காலப் பகுதிக்குள் தேர்தல் இல்லாமலே ஒரு இணக்கத் தீர்வை நாம் கண்டு கொள்ள விரும்புவதாகத் தெரிவித்திருந்தார்.

இங்கு முக்கியமான தடைக்கல்லாக இருப்பது சந்தேகங்களே. சிங்களவர்களுக்கு இப்பிராந்திய சபை பிரிவினைக்கான செயற்பாட்டுத் தளமாகிவிடுமென்ற அச்சம் உள்ளது. தமிழர்களுக்கு தமது பாதுகாப்புக் குறித்து இலங்கை அரசாங்கத்தின் மீதும் சிங்களத் தலைவர்கள் மீதும் சந்தேகம் உள்ளது. முஸ்லிம்களுக்கு தமிழரின் அரசியல் தமது அபிலாஷைகளைப் புறக்கணித்து தம்மை நசுக்கிவிடுமென்ற அச்சம் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சந்தேகங்கள் சந்தேகங்களாக உள்ளவரை தீரப் போவதில்லை. ஏதாவதொரு நடைமுறையில் ஒரு தீர்வுப் பொறிமுறை பரீட்சிக்கப்படும் போதுதான் இச்சந்தேகங்கள் தீர வாய்ப்புண்டு. சந்தேகங்கள் தீருமானால் இந்தத் தீர்வென்ன இதைவிட எத்தனை மடங்கு உயர்வான தீர்வும் இங்கு சாத்தியமாகலாம்.

எனவே இத்தீர்வுத் திட்டத்தினடிப்படையில், ஒரு நிர்வாகம் எடுத்துக்கொள்ளும் பத்து வருட காலச் செயற்பாட்டின் அனுபவத்தில் இந்த அச்சங்கள் நீங்க வாய்ப்புள்ளது.

தமிழர்கள் பிரிந்துபோகப் போவதில்லையென்பதும் அவர்களின் பங்களிப்பும் ஒட்டுமொத்தத்தில் இந்த நாட்டை மேம்படுத்தவே செய்கிறதென்பதையும் சிங்களவர்கள் அனுபவபூர்வமாக உணர்ந்துவிட்டால் இத்தீர்வில் எஞ்சியிருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதில் தடையேற்படப் போவதில்லை.

அதுபோல இப்பிராந்திய நிர்வாகம் முஸ்லிம்களின் அபிலாஷைகளையும் பாதுகாப்பையும் பேணுமென்ற நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால் வடக்கு கிழக்கு பிரிக்கப்படுவதற்கான அழுத்தங்கள் மறைந்து போகும்.

அத்தோடு, இத்தீர்வில் இருக்கக்கூடிய குறைபாடுகளை ஒரேயடியாக இப்போது எழுப்பி இவ் உணர்ச்சிகரமான தருணத்தில் சிங்கள எதிர்ப்புணர்வைக் கிளறிவிடாமல் தீர்வுத்திட்டம் நிறைவேறி செயற்படும்போது படிப்படியான திருத்தங்கள் மூலம் இவற்றை நிவர்த்தி செய்து கொள்ள வாய்ப்புள்ளது.

ஒரு அரசியல் தீர்வு என்பது பட்டிமன்ற விவாதம் போல் தத்தம் தரப்பு நியாயங்களை மட்டும் உயர்த்திக் காட்டுவதும் எதிர்த் தரப்பை முற்றாக மறுதலிப்பதுமல்ல. இது இரு தரப்பும் சேர்ந்து வகுக்க வேண்டிய ஒரு பொறிமுறையாகும்.

ஓர் அரசியல்தீர்வுக்கான சிறந்த பொறிமுறையொன்றை வகுப்பதற்கு ஒரு ஆற்றலுள்ள நிபுணரால் முடியும். ஆனால் உகந்த பொறிமுறையை வகுப்பதற்கு பொறுப்புள்ள அரசியல் தலைவரால்தான் முடியும்.

எத்தனையோ சிறந்த தீர்வுக்கான மாதிரிகள் உலகில் இருக்கின்றன. எடுத்து நோக்கக்கூடிய முன்மாதிரிகளாகவும் பல செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் எமது நாட்டுக்கு உகந்த, எமது நாட்டின் பிரச்சினைகளுக்குப் பதில் வழங்கக்கூடிய இங்கு நிலவும் உணர்வுகளுக்கு மத்தியில் அங்கீகாரத்தை



**நீண்ட காலத்தின் பின் கனிந்த ஒரு தீர்வுக்கான எத்தனம் எல்லாப் பக்கத் தவறுகளாலும் முறியடிக்கப்பட்டுவிட்டது.**

ஈட்டக்கூடிய ஒரு தீர்வைக் காணுவது பற்றி சிந்திக்கும்போது நாம் மிகுந்த பொறுமையுடனும் நிதானத்துடனும் அவதானத்துடனும் செயற்பட வேண்டியவர்களாகிறோம். அரசியல் தீர்வைக் காணும் பொறுப்புள்ள முயற்சியை அரசியல் நடத்தும் தேர்தல் ஸ்டண்டுகளுக்காக சிதைத்துவிடக் கூடாது.

ஆனால் எமது நாட்டு 'எதிர்க்கட்சி அரசியல்' எமக்குக் கிடைத்த இன்னொரு சந்தர்ப்பத்தைப் பாழடித்துவிட்டது. நெருங்கிவரும் தேர்தல் ஒன்றையே குறியாகக் கொண்டு இந்தத் தீர்வு முயற்சியை முறியடிப்பதில் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே. வி. பி.யும் முனைந்து நின்றன.

ஐ. தே. கட்சி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினருக்குக் கூறிய வாக்குறுதிகளெல்லாம் பொய் வாக்குறுதிகள் என்பதை இத்தருணத்தில் கூச்ச நாச்ச மற்ற முறையில் அப்பட்டமாக நிரூபித்துவிட்டது. தான் அதிகாரத்துக்கு வந்தால் பேச்சுவார்த்தை நடத்தி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவேன் என ரணில் அன்று தமிழ் மக்களுக்குக் கூறியே கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் அதிகப்படியான வாக்கைப் பெற்றிருந்தார்.

ஆனால் இப்போது நடந்த பேச்சுவார்த்தைகளில் தமிழ்த் தரப்பும் அரசாங்கமும் இணங்கியிருந்த விடயங்களைக் கூட தமிழர்களுக்கு வழங்க மறுப்புத் தெரிவித்து அவற்றை மேலும் எந்தளவு குறைக்க முடியுமோ அந்தளவு குறைக்கவே ஐ. தே. க. முயன்றது. பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகக் கூறிக்கொண்டு வந்து, இருந்ததையும் இல்லாமற் செய்யும் காரியத்தையே செய்ததுமல்லாமல் இறுதி நேரத்தில் பேச்சுவார்த்தையிலிருந்தும் விலகியோடி ஒரு பொது இணக்கத்துக்கு வர மறுத்துவிட்டது.

இவற்றுக்கே இணங்க முடியாத இவர்கள் எப்படி புலிகளுடன் பேசி அரசியல் தீர்வுக்கு வழிகாணப் போவதாகப் பறைசாற்றினார்கள் என்பது வியப்புக்குரியதாகவன்றி விசனத்துக்குரியதாக இருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடத்தின் முடிவால், அது ஒரு கட்சியாக இத்தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவளிக்க மறுத்துவிட்ட நிலையில் அக்கட்சியிலுள்ள தனி நபர்கள் பலர் இதனை ஆதரிக்க விருப்பம் காட்டியிருந்தனர்.

ஆனால் அதை வெளிப்படையாகத் தெரிவித்தால் கட்சித் தலைமைப் பீடத்தின் பழிவாங்கலுக்கு உள்ளாக வேண்டுமென்ற அச்சம் அவர்களிடம் இருந்தது. எனினும் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு முன்வைக்கப்படுமிடத்தில் தமது கருத்தை அவர்கள் வெளிப்படுத்தி, இந்நாட்டின் பிரதானமான பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை ஏற்படுத்த உதவுவது தவறல்ல என்ற முடிவுக்கு வந்திருந்தார்கள்.

இவ்வாறான முடிவை வெறும் சலுகைக்காகவும் பணத்துக்காகவும் எடுத்த முடிவாக அவர்கள் மீது எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தினர். அவ்வாறு பணம், சலுகைகள் இதில் சம்பந்தப்பட்டிருந்தாலும் கூட இவ்வகையான ஒரு பிரதானமான அரசியல் முடிவில் ஏதோ ஒரு கருத்து நிலையான உடன்பாடின்றி ஒரு அரசியல்வாதி பக்கம் சார முடியாது.

அத்தோடு இவ்வகை வழிமுறையைக் குற்றம்சாட்டுவதற்கான அருகதை ஐ. தே. க.வுக்குக் கிடையாது. ஏனெனில் அது அரசியல் முயற்சியாகவன்றி தனிப்பட்ட சுய லாபத்துக்கான முயற்சியாகவே இத்தகைய வழிவகைகளைப் பல தடவை கையாண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேமதாசாவுக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது அதற்குச் சார்பாகக் கையெழுத்திட்ட பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெட்டி பெட்டியாகப் பணம் கொடுத்துத் திரும்ப வாங்கிக் கொண்டது. மிக அப்பட்டமான ஒரு மான வெட்கம் பாராத நிகழ்ச்சி.

இப்படியிருக்க, இப்போது இந்த அரசியல் தீர்வை ஆதரிக்க முனைந்த தமது கட்சிக்காரர்களை அரசாங்கக் கட்சி பணத்தால் வாங்க முற்படுவதாக அது கூறுவது தனது முகத்தைக் கண்ணாடியில் பார்க்காது மற்றையவர் முகத்தைக் குறை கூறுவது போன்றது.

எனினும் ஐ.தே.க. வும் இங்கு தனது கைவந்த கலையான இதே வேலையை மிகத் தந்திரமாக மேற்கொண்டது. உண்மையில் அது இதுபோன்ற காரியங்களில் பழம் தின்று கொட்டை போட்ட கட்சியாக இருந்ததால் அரசாங்கத்தின் ஏற்பாடுகளை மிக இலகுவாக முறியடிக்கக் கூடியதாக இருந்தது.

யார் யார் அரசாங்கத்துக்கு சார்பான, தீர்வுக்குச் சார்பான கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்களென்று அவதானித்து வைத்திருந்து இறுதி நேரத்தில் அவர்களை மிக இக்கட்டான முறையில் மடக்கிப் பிடித்து பாராளுமன்றப் பக்கமே தலை காட்டாதவாறு வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்ததுமல்லாமல் அவர்கள் எங்கே இடைநடுவில் திரும்பி வந்துவிடுவார்களோ என்ற அச்சத்தில் கூடவே அவர்களை அவதானமாக அங்கேயே வைத்திருப்பதற்கான ஆட்களையும் அனுப்பி ஏற்பாடுகளையும் செய்து வைத்துவிட்டது.

இந்த நிலையில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வேண்டி நிற்கும் இந்த அரசியல் திட்டத்தினை நிறைவேற்ற முடியாத வாக்குத் தட்டுப்பாடு அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

எதிர்க்கட்சியில் ஆதரிக்கக் கூடியவர்கள் ஐ.தே.க. வின் இத் தந்திரமான செயற்பாட்டினால் தடுக்கப்பட்டிருக்க, தமிழ்க் கட்சிகளிடையேயும் இதற்கு ஆதரவு வழங்க ஒரு பகுதியினர் மறுத்துவிட்டனர்.



**சமஷ்டி வழங்கினால் சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் ஐக்கியம் இல்லாது போய்விடும் என அர்த்தமற்ற புதிய கருத்தொன்றை ஜே.வி.பி. முன்வைத்தது.**

சிலவேளை இவர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் வெளிநடப்புச் செய்தாலும் கூட, அது எதிராக வாக்களிப்பதற்குச் சமமான பெறுபேற்றையே வழங்கும்.

ஏனெனில் இங்கு மொத்தப் பாராளுமன்ற ஆசனங்களின் மூன்றில் இரண்டு வாக்குகளால் அதாவது 150 வாக்குகளால் இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதே விதி. (வாக்கெடுப்பில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையல்ல.)

அதனால் வழங்கப்படாத வாக்குகளெல்லாம் எதிர்த்த வாக்குகளைப் போலவே நடைமுறையில் செயற்படும். எனவே பகிஷ்கரிப்பது கூட இங்கு எதிர்ப்பதற்குச் சமன்.

ஈ. பி. டி. பி. யின் 9 வாக்குகளும் புளொட்டின் 2 வாக்குகளும் இத்தீர்வுத் திட்டத்திற்குச் சாதகமாக வாக்களித்திருக்கக் கூடியதாக இருந்தாலும், எதிராக இருக்கும் ஏனைய ஐந்து தமிழ்ப் பிரதிநிதித்துவத்தின் வாக்குகளாலேயே இத்தீர்வுத் திட்டம் முறியடிக்கப்படக்கூடிய அபாயம் இருந்தது.

எனவே வெறுமனே ஐ.தே.க. மட்டுமன்றி இவ்வாறு தமிழ்க் கட்சிகளின் ஒரு பகுதியினர் கொண்ட நிலைப்பாடும் சேர்ந்தே இத்தீர்வு முயற்சியை முறியடித்தன.

இங்கு அம்பலமான மற்றொரு வேடம், ஜே.வி.பி. யின் சோஷலிச முழக்கங்களின் மத்தியில் வேரூன்றியிருக்கும் இனவாதம். ஒற்றையாட்சி முறை நீக்கப்படுவதைத் தான் எதிர்ப்பதாக ஜே. வி. பி. கூக்குரலிட்டது. அரசாங்கம் வடக்கு கிழக்குக்கு சமஷ்டி ஆட்சி வழங்கப்போவதாக அது எதிர்ப் பிரசாரம் செய்தது.

சமஷ்டி வழங்கினால் சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் ஐக்கியம் இல்லாது போய் விடும் என அது அர்த்தமற்ற புதிய கருத்தொன்றை முன் வைத்தது.

உண்மையில் வழங்கப்படுவது ஒரு பூரண சமஷ்டி முறையுமல்ல. உண்மையில் சமஷ்டி முறை பிரிவினையைத் தடுப்பதற்கான ஒரு வழிவகையாகவே செயற்படுகிறது. பிரிப்பதற்கு பதில் இணைக்கும் செயற்பாட்டையே அது செய்கிறது. இம்முறை முதலாளித்துவ நாடுகளில் மட்டுமன்றி சோஷலிச நாடுகளிலும் அமுல்படுத்தப்பட்ட ஒன்று. இப்படியிருக்க ஜே. வி. பி. வெறும் வாய்ப் பேச்சுக்காக அதனை ஒரு பிரிவினைக் கோஷமாகக் கூறுவது அதனுள் மண்டிக்கிடக்கும் இனவாதத்தின் தொனியாகவே அர்த்தப்படுகிறது.

இந்த அரசியல் சூழ்நிலையை சாதகமாக்கிக் கொண்டு மீண்டும் இந்நாட்டில் இனவாதத்தின் மேலாதிக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள இத்தருணத்தில் பெருமுயற்சி எடுக்கப்பட்டது.

புத்த சங்கங்களை வீதியில் இறக்கி சாகும்வரை உண்ணாவிரதத்தில் குதித்தனர்.

பாராளுமன்றத்திற்குச் செல்லும் பாராளுமன்ற உறுப்பினர்களை பலாத்காரமாக வழிமறிக்க முனைந்தனர்.

நாட்டில் பதட்டத்தை ஏற்படுத்தி அரசாங்கத்தின் மனவுறுதியைச் சிதைக்க முற்பட்டனர்.

இருப்பினும் இக் குழப்பங்களின் விளைவை முகம்கொடுக்க வேண்டிய தேவையின்றி பாராளுமன்றத்தில் தீர்வுத்திட்ட வாக்கெடுப்பு பிற்போடப்படும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது.

ஆக மொத்தத்தில், நீண்ட காலத்தின் பின் கனிந்த ஒரு தீர்வுக்கான எத்தனம் எல்லாப் பக்கத் தவறுகளாலும் முறியடிக்கப்பட்டுவிட்டது.

இது ஒரு தற்காலிக பின்வாங்கல்தான் என அரசாங்கம் தெரிவிக்கிறது. மீண்டும் எவ்வாறாயினும் இத்தீர்வை அமுலாக்க வழி செய்யப் போவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

எனவே இந்தக் கால இடைவெளியிலாவது குறிப்பாகத் தமிழ்த் தரப்பினர் வெறுமனே நிராகரிப்பு வாதமொன்றே ஜெபமென்றிருக்காமல் அல்லது புலிகளின் பக்கப்பாட்டாக சுற்றிச் சுற்றிப் பாடிக்கொண்டிருக்காமல் தமிழ் பேசும் மக்களுக்கும், இந்நாட்டின் மொத்த சமாதான சகவாழ்வுக்கும் வழிசமைத்துக் கொடுப்பதில் ஆக்கபூர்வமாக ஈடுபட வேண்டும்.

- காசிபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பாத குறி

(குட்டிக்கதை)

சதானந்தன் தனது நீல நிற பஜிரோவில் வந்திறங்கினார். அந்தக் கட்டிட வாசலில் அவருக்காகக் காத்து நின்ற கோவிந்தனுக்கு உள்ளே வரும்படி சமிக்ஞை செய்துவிட்டு கதவைத் திறந்து உட்சென்றார்.

ஏ.ஸி.யைப் போட்டுவிட்டு சோபாவில் போயமர்ந்தார். கண்ணாடியைக் கழற்றி சட்டைத் தலைப்பால் துடைத்தார். கண்ணாடியின் பிரேம் தங்கத்தால் செய்யப்பட்டிருந்தது. கழுத்திலும் கைகளிலும் தங்கம் மின்னியது. மிகச் சிறிய கண்கள். கீழே கருவளையங்கள். முகம் மழமழப்பாக ஷேவ் செய்யப்பட்டிருந்தது.

வந்து எதிரே நின்ற கோவிந்தனை கதிரையில் அமரும்படி கையால் சைகை செய்தார். அவன் மறுத்துவிட்டு அவர் சொல்லப்போவதைக் கேட்க பணிவோடு நின்றான்.

சிறிது நேரம் அவனையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, சதானந்தன் கையில் கொண்டு வந்திருந்த சூட்கேஸை மடியில் வைத்துத் திறந்தார். அதனுள்ளிருந்த பொருட்களை ஒவ்வொன்றாக வெளியே எடுத்துப் பொருத்தினார். கடைசியாக ஒரு தொலைநோக்கு ஆடியையும் பொருத்திவிட்டு அந்தத் துப்பாக்கியை ஜன்னலுக்கு வெளியே குறிபார்த்து, முகத்தில் திருப்தியை படரவிட்டார்.

கோவிந்தனிடம் நீட்டினார். "சரியாக இருக்கிறதா, பார்" என்றார்.

அதை வாங்கிய கோவிந்தன், துவக்கின் சோங்கைத் தோளுக்குக் கொடுத்து முன்கையால் பரலைத் தூக்கிப் பிடித்து லென்ஸினூடாகப் பார்த்தான்.

"அந்தக் காட்டுப் பாதையில் மகேஸ்வரன் தனியாகத்தான் காரை ஓட்டி வருவான். நீ ஏதேனும் ஒரு மரத்தில் ஏறி ஒளிந்திருந்துகொள். நாளைக்கு அவர் உயிர் தப்பக்கூடாது...." கோவிந்தனையே பார்த்தபடி சதானந்தன் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் கண்கள் இரண்டும் கதிரவன் உதிக்கும் கீழ்வானமாக இருந்தது.

துப்பாக்கியை கீழே இறக்கி இவரைத் திரும்பிப் பார்த்தான். "ம்... கார் நம்பர்?" என்று கேட்டான். வெட்டுத் தழும்புகளுடனிருந்த அவனது முகத்துக்குப் பொருத்தமாய் கரகரத்தது அவன் குரல்.

"..... கறுப்பு நிற பி. எம். டபிள்யூ.... றோட்டிலிருந்து முடிந்தளவு தூரத்தில் ஒளிந்து நின்றுகொள். இசகு பிசகாக எது நடந்தாலும், அவன் உன்னைப் பார்த்துவிடக் கூடாது..." என்று சொல்லிவிட்டுத் தனக்குள்ளாக முனகினார் "ம்... என் தொழிலில் போட்டிக்கு வருகிற எண்ணம் வேறு எவனுக்கும் வரக்கூடாது..."

கோவிந்தன் துப்பாக்கியைப் பழையபடி கழற்றி சூட்கேஸுக்குள் வைத்தான். அவரிடமிருந்து பணக் கட்டையும் வாங்கி அதற்குள் வைத்தான். "நல்ல செய்தியொடு நாளை நின்று உங்களைப் பார்க்கிறேன்" சொல்லிவிட்டு வெளியேறினான்.

நேரம் ஏழு மணி. தூரத்துப் பொருட்களெல்லாம் பார்வைக்கு மங்கலாகிவிட்டது. கோவிந்தன் கறுப்பு நிற உடைகளை உடுத்திருந்தான். றோட்டுக்குச் சற்றுத் தொலைவில் நன்கு இலைகள் அடர்ந்திருந்த ஒரு மரத்தைத் தேர்ந்தெடுத்தான். முதுகில் தொங்கவிட்டிருந்த பெட்டியோடு மெல்ல மரத்தில் ஏறினான். பறவைகள் கலைந்து பறந்தன. ஆங்காங்கே கூடுகள் இருந்த கிளைகள் அசைந்தன. பெரும்பாலும் கொக்குகள் குடியிருக்கும் மரமாகத் தெரிந்தது. மறைவாக அமர்ந்துகொண்டு றோட்டை வெறித்தான்.

சற்று நேரத்தின் பின், தூரத்தே கார் வருவது தெரிந்தது. கறுப்பு நிற பி. எம். டபிள்யூ.தான். மங்கலிருட்டிலும் பார்க்கக்கூடிய தொலைநோக்கியினூடாக கார் நம்பரை அவதானித்தான். அதுதான் கார்! ஓட்டி வருவது மகேஸ்வரன்தான்! அவனது துப்பாக்கியின் சுடு எல்லைக்குள் கார் வந்துவிட்டது.

குறி வைத்தான். மூச்சை அடக்கிக் கொண்டான். பார்வையை மேலும் கூர்மைப்படுத்தினான். ட்ரிகரை இழுத்தான். 'டுமீல்' என்ற ஓசை கேட்டு பக்கத்து மரங்களிலிருந்தும் பறவைகள் திடுக்கிட்டுப் பறந்தன.

கிளையில் அசைந்த இடத்தை நோக்கிக் குறி தப்பாமல் சுட்டதில் ஓரிரு கொக்குகளேனும் விழும் என்று ஆவலோடு மரத்தைப் பார்த்தபடி புகை வரும் காட்டுத் துவக்கோடு கீழே நின்றிருந்தான் அந்த வேட்டைக்காரன்.

ரத்தக் காயத்தோடு 'அம்மா' என்று அலறியபடி கீழே விழுந்த கோவிந்தனை அதிர்ச்சியோடு பார்த்து, ஓடத் தொடங்கினான் கொக்கு வேட்டைக்கு வந்திருந்தவன்.

- எஸ். சந்திரசேகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டும் டெங்கு

**'டெங்கு உயிராபத்தானது', 'டெங்கு ஓர் உயிர் கொல்லி'** என்ற வாசகங்களைத் தாங்கிய போஸ்டர்களை வைத்தியசாலைகள், சுகாதார நிலையங்களில் மட்டுமல்ல நகரின் முக்கியமான இடங்களிலெல்லாம் ஒட்டியிருப்பதைக் காணலாம்.

பாடசாலைகளிலும் அரச, தனியார் நிறுவனங்களிலும் இது தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு மேலதிகமாக சகல ஊடகங்களும் வரிந்து கட்டிக் கொண்டு டெங்கு பற்றி பிரசாரம் செய்கின்றன.

இந்த பரபரப்புக்குக் காரணம் டெங்கு உயிராபத்தானது என்பதே. எல்லோரினதும் கவனத்தை டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மீது திசை திருப்ப வேண்டிய அவசரம், அவசியம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு சகல மட்டங்களிலும் தேவை. சுகாதார அமைச்சு தேசிய டெங்கு தடுப்புத் தினம் என்று ஒரு தினத்தையே ஒதுக்கியுள்ளது.

மாரி காலம். இதுதான் டெங்கு நுளம்புகளின் வசந்த காலம். ஜுலை - ஆகஸ்ட் மாதங்களும் நவம்பர் - டிசம்பர் மாதங்களும் டெங்கின் கொடுங்கோல் ஆட்சி நிகழும் காலங்களாகும்.

## டெங்கு காய்ச்சல் *(Dengue Fever)*

டெங்கு காய்ச்சல் என்பது ஆபோ *(Arbo)* எனும் வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த பிலேவி *(Flavi Virade)* எனும் இனத்திற்குரிய வைரஸ் ஒன்றின் மூலமே பரப்பப்படுகின்றது.

டெங்கு வைரசின் நோய்க் காவியாக ஈடிஸ் வகைக்குரிய இரு நுளம்புகள் உள்ளன. ஈடிஸ் ஈஜிப்டை *(Aedes - aegypti)*, ஈடிஸ் எல்போபிக்டன் *(Aedes albopictun)* ஆகிய இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் இரு வகை நுளம்புகளின் பெண் நுளம்புகளினாலேயே டெங்கு பரவுகின்றது.

இவை நன்னீர் உள்ள பகுதிகளிலேயே வாழ விரும்புகின்றன. நன்னீரிலேயே முட்டையிடுகின்றன.

ஆகவே, டெங்கு நுளம்புகளுக்கான வசிப்பிடத்தை நாமே அமைத்துக் கொடுக்கிறோம். இங்கு அவை குதூகலமாக குடும்பம் நடத்துகின்றன.

இவை எங்கு உண்டாகின்றன?

- வீட்டுச் சுற்றாடலில் வீசப்படுகின்ற நீர் தேங்கக் கூடிய சிரட்டை, டின்கள், சட்டிபானைகள் போன்றவற்றில்...
- வெற்று டயர்கள், கூரை மீது பாரத்திற்காகப் போடப்பட்டுள்ள டயர்களில்....
- தினசரி மாற்றாமல் குடிப்பதற்கும் வேறு தேவைகளுக்குமென வைக்கப்பட்டுள்ள நீரில்...
- பாவிக்காத மீன் டாங்கிகள்...
- நீர் வடிந்தோடுவது தடை செய்யப்பட்டுள்ள பீலிகள், கான்கள்...
- மேசைக்கு எறும்பு வராமல் தடுப்பதற்கு வைக்கும் தண்ணீர் பாத்திரங்கள்...
- அலங்காரத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் பூச்சாடிகள்....

இவை நுளம்புகள் நிம்மதியாக முட்டையிடுவதற்கு மிகப் பொருத்தமான இடங்களாகும்.

நீங்கள் நினைக்காத அளவு சிறிய நீர்ப் பாத்திரம் கூட நுளம்புகளுக்கு முட்டையிட பஞ்சு மெத்தையாக அமையலாம்.

டெங்கு நுளம்பு ஏனைய நுளம்புகளைப் போல இராக் காலங்களில் நடமாடுவதில்லை. அவை பகலிலேயே நடமாடுகின்றன. விடிவதற்கு முன்னுள்ள மங்கிய ஒளியில் ஆரம்பித்து இரவுக்கு முன்னுள்ள மங்கிய ஒளியில் தமது அன்றாட கடமையை முடித்துக் கொள்கின்றன.

பொதுவாக வயதானவர்களை அதிகம் தாக்கினாலும், நல்ல தேகாரோக்கியமுள்ள திடகாத்திரமான வாலிபர்களையும் குழந்தைகளையும் கூட அது விட்டு வைப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயின் ஆரம்பக் கட்டத்தில் ஏனைய காய்ச்சலிலிருந்து டெங்குக் காய்ச்சலை அடையாளம் காண்பது கடினமாகும். சாதாரணமாக காய்ச்சல் ஏற்பட்டு 3 - 4 தினங்களின் பின்னரே டெங்குக் காய்ச்சலுக்கான அறிகுறிகள் தோன்றுகின்றன.

டெங்கு வைரஸ் உடலில் புகுந்து 5-6 தினங்களில் அல்லது 15 நாட்களுக்குள் கடுமையான காய்ச்சல், தலைவலி, உடல் வலி, மூட்டுவலி, உடலில் சிவப்பு நிறத் தழும்புகள் தோன்றுதல் என்பன இந்நோய்க்கான அறிகுறியாகும்.



## நோயின் பாதிப்புக்கள்

டெங்கு வைரஸ் பரவியவுடன் குருதிப் பாதையில் பிளாஸ்மா எனும் பகுதி இரத்த நாளங்களைச் சுற்றியுள்ள இழையங்களில் பரவுகின்றது. இந்நோயின் தன்மை 2 - 3 நாட்களுக்கு மட்டும் நிகழ்வதுடன் நோய் உக்கிரமடைந்து உச்ச நிலையை அடைவது காய்ச்சல் தோன்றி 4 - 5 நாட்கள் கடந்த பின்னரே.

டெங்கு வைரஸ் தொற்றி 2 - 3 தினங்களின் பின் உடலின் நீர் வெளியேறுவதுடன் உடலிலுள்ள குருதியின் அளவும் குறைவடைகின்றது. இச்செயல் பாட்டிற்கு சமனாக குருதியமுக்கம் தாழ்வுறுவதுடன் நோயாளி 'அதிர்ச்சி டெங்கு' எனும் கடுமையான நிலைக்குத் தள்ளப்படுவார்.

டெங்கு நோய்க்கு ஆளான அதிகமானோருக்கு தமது உடலிலிருந்து நீர் வெளியேறத் தொடங்கியவுடன் அல்லது அதற்கு முன்னர் குருதி வெளியேறும் வாய்ப்புக்கள் உண்டு. இவ்வாறு இரத்தம் வடிதல், உடல், மூக்கு, வாய், பல் இடுக்கு, முரசு, குடல் ஆகிய பகுதிகளிலிருந்தும் வெளியேறலாம். இவை சிறிய புள்ளிகளாகவோ தழும்புகளாகவோ இருக்கலாம்.

இவ்வாறான நிலை உண்டாகும்போது இரைப்பையில் குருதிச் சுற்றோட்டம் அதிகரிக்க வாய்ப்புண்டு. இரைப்பை முழுதும் குருதி பாயும் போது ஏற்படும் அமிலத் தன்மை காரணமாக வாந்தி கபில நிறமாக வெளியேறும்.

நிலைமை இவ்வாறிருக்க காய்ச்சல் அதிகரிப்பதுடன், இந்தக் காய்ச்சல் குறைய 4 அல்லது 5 தினங்கள் எடுக்கலாம். இது உடலில் தொற்றின் அதிர்ச்சி காரணமாக ஏற்படும் நிலைமையாகும். இவ்வாறு காய்ச்சல் குறைவது, பூரணமாக குணமடைந்து விட்டதற்கான அறிகுறி அல்ல.

திடீரென காய்ச்சல் குறைவது கண்டு நோயாளர் குணமடைந்து விட்டார் என்ற முடிவுக்கு வர முடியாது என்பது இங்கே முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயமாகும்.

இந்த டெங்கு கைவரிசையை ஒழிப்பதற்கு இதுவரை மருந்து எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே டெங்கு நோயாளியை மரணத்தின் பிடியிலிருந்து தப்ப வைப்பதற்கு ஒரே வழி அவர்களை உடனே மருத்துவமனையில் சேர்ப்பதே.

## பொதுமக்கள் எப்படி உதவலாம்?

பொதுமக்கள் அனைவரும் டெங்கு ஒழிப்பில் கவனம் எடுக்க வேண்டும். பின்வரும் வழிகளில் உதவ முடியும்.

- மழை நீர் தேங்கக்கூடிய வகையில் வீட்டுச் சூழலில் உள்ள சகல வெற்றுக் கலன்கள், பாத்திரங்களை அப்புறப்படுத்தல்.
- வீட்டுக்கருகில், குறிப்பாக கூரைகளின் மீது போடப்பட்டுள்ள டயர்களில் துளைகளை இடுதல் அல்லது மணல் நிரப்புதல்.
- வீட்டினுள் நீருள்ள சகல பாத்திரங்களையும் அகற்றுதல் அல்லது அடிக்கடி மாற்றுதல்.
- பயன்படுத்தாத மீன் டாங்கியைத் தலைகீழாக கவிழ்த்து வைத்தல்.
- அடைக்கப்பட்டுள்ள கான், பீலிகளை திருத்தி நீரை தடையின்றி ஓடச் செய்தல்.
- மேசையின் கால்களுக்கு வைத்துள்ள நீரை மாற்றுவது அல்லது சிறிதளவு உப்பு போடுவது.
- வீட்டுத் தோட்டத்தில் நீர் தேங்காத பாத்திரங்களை வைத்திருப்பதன் மூலம் உங்களுக்கும், அயலவர்களுக்கும் உதவலாம். ●

**- எம். எச். பதி-யுஸ்-ஸமான்**




அம்மாவுக்கு கவிதையெல்லாம்
சும்மா
அடுக்களை இருட்டுள்
அம்மாவின் சூரியன் சுருங்கிப் போச்சு
தன் வீடு, கணவன், குழந்தை
சமையல், புடவை
இவையன்றி வேறெதும்
அறிவாயோ அம்மா சொல்.
உன் கனவுகளின் சருகுகள்தான்
உனக்குக் காலடிப் பாதையோ?
அம்மாவுக்குத் தனியாய் எதுவுமில்லை,
இருப்பினும் அம்மா எல்லாமும் ஆவாள்.
அம்மாவின் மெட்டிக் கால் தடங்கள்
தரையிலும், மனதின் கரையிலும்
அம்மா நீ வரைந்த சித்திரங்கள்
காற்று வெளியிலும், என் கனவு வழியிலும்
மனத் தெளிவில் முக்கிப் பார்த்தால்
சாயம் வெளுத்துப் பல்லிளிக்கும் சொந்தங்கள்.
புன்னகைச் சருகுகள்
போர்த்த புதைகுழிகள் பாதையெங்கும்.
என் கற்பனையின் சவங்கள் நாறும்
கவிதை நோட்டில்.
புத்தக வார்த்தையாய்ப் போச்சு
ப்ரியமும், நேசமும்.
எனவே அம்மா நீ,
மறுபடி தொட்டிலிடு உன் மடியில்
எனக்காக,
அறியாச் சிறுமியாய்
அணைத்துக் கொள் என்னை.

- உமா மகேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏவாளின் விலா எலும்பு

## (ஆதியாகமம்)

- மனோஜ்

கிழக்கே ஏதன் தோட்டத்தில் அத்திமரக் கூட்டங்களின் இலைச் சரசரப்பு. காற்றில் புரண்டெழுந்து அசைந்தாடிய இலைச் சப்தங்களின் ஊடே ஓர் குரல். இறைவனின் குரல். முன்தினங்களில், வெளிச்சத்தையும் இருளையும் ஜலத்தையும் வெட்டாந்தரைப் பூமியையும் பகலை ஆளப் பெருஞ்சுடரையும் இரவை ஆளச் சிறு சுடரையும் படைத்துக் களைத்ததில் ஹீனப்பட்டிருந்தது குரல்.

'ஹே! மனுஷியைச் சிருஷ்டிக்கிற தருணம் இது. இதோ நான் ஒரு மனுஷியை உருவாக்கி வைக்கிறேன்.' குரல் தேய்ந்து தெளிவின்றி ஒலித்தது. மறுபடி மறுபடி அதே வாக்கியம் உச்சாடனமாய்த் தொடர்ந்தது. மெல்ல மெல்ல பலம் பெற்றது. தோட்டத்தின் எண் திசைகளிலும் அது எதிரொலித்தது. சூர்யப் பிரகாசமாய் ஒளி கீறியது. பூர்ண நிர்வாணமாய் ஒரு பெண் தோன்றினாள். அவள் ஆழ் நித்திரையிலிருந்தாள். சிரசன்றி வேறெங்கும் ரோமமற்றிருந்தாள். யவ்வனம் பொருந்திய வளாகவும் இருந்தாள். குரல் ஒலித்தது: 'இவள் மனுஷி. இவளை ஏவாள் என்க.'



மெலிந்து நீண்ட இறைவனின் கரம் ஏவாளின் நெற்றியை வருடியது. இறைவனின் கரம் அவள் விலாப் புறத்தே சென்றது. கரத்தில் மூர்க்கம் தெரிந்தது. நிமிஷத்தில் அவளின் விலா எலும்பைக் கரம் பறித்து எடுத்தது. ஏவாள் அதிர்ந்து அடங்கினாள். நித்திரை கலையவில்லை. விலாப்புறத்திலிருந்து குருதி வழிந்தோடி ஏதன் தோட்ட மண்ணை நனைத்து மணந்தது.

ஏவாளின் விலா எலும்பை இறைவன் நுகர்ந்தார். குருதி மணமும் இளஞ்சூடாயும் இருந்தது. எலும்பைப் பிசைந்து மனுஷனைப் படைத்தார். குரல் ஒலித்தது: 'ஏவாளின் எலும்பில் இருந்து எடுக்கப்பட்டவன் இவன். மனுஷியிலிருந்து எடுக்கப்பட்டு சிருஷ்டிக்கப்பட்டதால் இவன் மனுஷன். இவனை ஆதாம் என்க.'

ஏவாள் நித்திரையிலிருந்தாள். ஆதாம் உணர்வோடு இருந்தான். இருவர் கண்களும் பூட்டியிருந்தன. ஆதாம் தத்தித் தடவியபோது நிலத்தில் கிடந்த ஏவாள் தட்டுப்பட்டாள். எடுத்துக் குலுக்கி எழுப்பியபோது ஏவாள் உணர்வுற்று எழுந்து நின்றாள். கண்கள் திறந்தன. இருவரும் ஒருவரையொருவர் புதிதாய்ப் பார்த்துக் கொண்டனர். அவர்கள் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள்.

தோட்ட விருட்சங்களூடே அலைந்து திரிந்தார்கள். பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகின்றபோது அவர்கள் சில சமயங்களில் இறைவனின் குரலைக் கேட்டார்கள். இறைவன் கடமைக் குரலில் அவர்களுக்கு சில கட்டளைகளைப் போதித்துச் சென்றான். கட்டளைகள் அவ்வப்போது வந்தன. மனதில் தரித்துக் கொண்டார்கள்.

"நீ தோட்டத்தில் உள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சர்வம் நாசம் ஆகும்." என்று மனுஷனைப் பார்த்து இறைவன் எச்சரித்தார்.

அன்றொரு நாள் இரவு, சந்திரனின் மெல்லிய ஒளியலைகளுக்கு இடையே ஆதாம் படுத்திருந்தான். பருத்த மரத்தின் வேரில் தலை வைத்திருந்தான். அவனது இடையருகே ஓர் ஸ்பரிசம்.
தேகம் சிலிர்த்தது. கண்விழித்துப் பார்க்கையில் பழுப்பில் மஞ்சள் புள்ளிகள் இறைத்த நீண்ட சர்ப்பமொன்று உடலில் ஊர்ந்து வழுக்கிக் கொண்டிருந்தது. சாந்தமும் காருண்யமும் மிக்கதான ரூபங் கொண்டிருந்தது சர்ப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்ப்பம் படம் உயர்த்திப் பேசிற்று.

"உங்களுக்கு இறைவன் ஏதாவது கட்டளையிட்டானா?"

சர்ப்பத்தை ஸ்நேகத்தோடு பார்த்தபடி ஆதாம் பதிலிறுத்தான், "ஒரு குறிப்பிட்ட விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்பது கட்டளை."

சர்ப்பம் சிரித்தது. "புசி. உன்னை உணரப் புசி. தடை செய்யப்பட்ட கனியைப் புசி." குரலில் கடமை தெறித்தது. வளைந்து ஊர்ந்து விருட்சத்தில் ஏறி மறைந்தது.

ஆதாம் துடித்தெழுந்தான். விலக்கப்பட்ட கனி மரத்தை நோக்கி ஓடினான். துவர்ப்பும் மதுரமும் ஊறிக் கிடந்த கனியைக் கடித்துச் சுவைத்தான். ஏவாளைத் தேடி ஓடினான். கடித்த கனியைக் கொடுத்தான். "இது விலக்கப்பட்ட கனியாயிற்றே." அச்சத்தில் ஏவாளின் குரல் தடுமாறியது. "இறைவனுக்கு வேறு வேலையென்ன? பயமுறுத்துவதைத் தவிர. சர்ப்பம் சொல்லிவிட்டது. புசி." ஆதாம் படபடத்துச் சொன்னான்.

கனியைக் கடித்தாள் ஏவாள். சாறு தெறித்து ஒழுகியது. நிமிடங்களின் அவகாசத்துக்குப் பின் இருவருள்ளும் மாற்றம் தெரிந்தது. உடலுக்குள்ளே ஊறலாய் உணர்வுகள் குமிழியிட்டன. தங்கள் தேகத்தைப் பார்த்துக் கொண்டார்கள். வெட்கம் பிடுங்கித் தின்றது. மரங்களிடையே ஓடி ஒளிந்து கொண்டார்கள். அத்தியிலையைக் கொத்தாய்ப் பறித்து அரையில் கட்டிக்கொண்டார்கள்.

பகல் வேளையில் இறைவனின் குரல் வருமோ என்று அஞ்சி நடுங்கினார்கள். தோட்ட விருட்சங்களிடையே ஒளிந்து திரிந்தார்கள். அச்சப்பட்டது போலவே இறைவனின் சினமேறிய குரல் எதிரொலித்தது. "எங்கிருக்கிறீர்கள். ஏன் ஒளிந்து அலைகிறீர்கள். வாருங்கள் என் முன்னே!"

அஞ்சி நடுங்கி ஆதாமும் ஏவாளும் வெளிவந்தனர். அவர்களின் அரையில் இலை ஆடைகளைப் பார்த்த இறைவனுக்கு சினம் எல்லை கடந்தது. "உங்களுக்கு வெட்கத்தை யார் உணர்த்தினார்கள். விலக்கப்பட்ட கனியைப் புசித்தீர்களா? எனில், புசித்தது யார்?"

ஆதாம் முன்வந்தான். தலைதாழ்த்திக் குற்றம் ஒப்புக்கொண்டான்.

"மனுஷஷ்.... ஷன்!" இறைவன் குரல் வெறுப்பில் உமிழ்ந்தது. "பாவத்தின் சம்பளத்தை ஏற்றுக்கொள் மனுஷா. உன் வர்க்கம் இனி அழிவின் ஓலத்தில் அலைக்கழியும். தீராப் புணர்ச்சி வேட்கையுடன் அலைவாய். புணர்ந்தோய்ந்த நிமிடத்துளியிலே உன் தேகம் அழுகும். மரணத்தை நெருங்குகிற வலியின் இம்சையில் நீ துடித்து அலறுவாய். உன் வர்க்கம் முழுதும் அலறும். ஏதன் தோட்டம் மரண ஓலத்தின் கூடாரமாய் மாறும். இது என் சாபம்."

விக்கித்து நின்றது ஜோடி. புணர்ச்சியின் வேட்கை ஆதாமுக்குள் இறங்கிக் கிறங்கடித்தது. குறி விறைத்து இறுகியது. ஏவாள் பிடியினுள் சிக்கினாள். உச்சத்தின் சிலிர்ப்பில் தேகம் உதறி அடங்கிய நிமிடமே, வலி சர்ப்பமாய் மேனியெங்கும் ஊடுருவத் தொடங்கியது.
ஆதாம் புழுப்போல் மண்ணில் புரண்டு துடித்தான். அவனது தொடை இடுக்குகள் வீங்கத் தொடங்கின. குமிழ்களாய்க் கொப்பளங்கள் எழும்பின. வெடித்துச் சீழும் குருதியும் ஒழுகின.

ஏதன் தோட்டத்தில் ஜனனங்கள் தொடர்ந்தன. குழுக்களாய் மானிடக் கூட்டம் தோன்றியிருந்தது. மாசற்ற அழகுகொண்ட பதுமை போன்ற பெண்கள் மனுஷர்களை மயக்கி எடுத்தார்கள். தீராப் புணர்ச்சி வேட்கையில் ஆட்பட்டிருந்த மனுஷர்கள் அவர்களைத் தேடி ஓடிக் கூடினார்கள். கூடிய நிமிடத்தில் இருந்து வலியின் தாங்கவொண்ணா அவஸ்தையில் கூக்குரல் எழுப்பினார்கள்.

ஏதன் தோட்டமெங்கும் கெட்டழுகிய சீழின் துர்நாற்றம் நிறைந்து கிடந்தது. மனுஷர்களின் ஓலம் திசைகளெங்கும் எதிரொலித்தபடியே இருந்தது... என்றாலும் ஏதன் தோட்டத்துப் பக்கம் இறைவன் வரவே இல்லை.

மனுஷர்கள் கூடினார்கள். நம் துன்பத்திற்கு முடிவே இல்லையா என்ற சுயபச்சாதாபம் கொண்டார்கள். இறைவனை அழைப்போம் எனக் கூடி முறையிட்டார்கள்.

கூட்டழைப்புக்கு இறைவன் செவிசாய்த்தான். ஒரு வெயில் தாழ்ந்த மாலை வேளையில் கீழ்வானில் ஒளி சிதறியது. இறைவனின் குரல் பரவியது.
"ஹே! மனுஷர்களே, உங்கள் வர்க்கத்தின் வலி ஒழிய வழி உண்டு. அது அழிவே. அழிவு, பேரழிவு. எல்லாம் மாறும். மாறுவதற்கு எல்லாம் அழியும். வான் அழியும். நலம் அழியும். அந்த ஏதன் தோட்டம் அழியும். அனைத்தும் அழியும். அந்த அழிவின் தொடர்ச்சியாய் மறுபடி ஒன்று முளைக்கும். மறுபடி ஒரு ஏதன் தோட்டம் தோன்றும். மறுபடி ஒரு ஆதாமும் ஏவாளும் படைக்கப்படும். அப்போது உங்கள் துன்பம் தீரும்." குரல் அடங்கியது. கீழ்வான ஒளி மறைந்து எங்கும் இருள் படர்ந்தது.

அப்படி ஒரு மகா சீரழிவுக்காய், வலி மிகுந்த மனுஷக் கூட்டம் காத்திருக்கத் தொடங்கியது.

- நன்றி : 'சொல் புதிது'

## அம்மா... அம்மா...

... ... ... ... ... ... ... ... ...
**முதல் மழையின் மண்வாடை போல்**
**மூச்சு முட்ட நிரப்பி வைத்துக்கொள்ள**
**தூண்டும் அம்மாவின் வாசனை.**
**எங்கெங்கோ பட்ட காயங்களுக்கு மருந்தாய்**
**அவள் மடியில் தலைவைத்துத்**
**தூங்கிய போதெல்லாம் பாதுகாப்பாய்**
**என்னைத் தாங்கிய மணம்....**
**அவள் என்பதே அதுவும் சேர்ந்துதான்.**
**வளர்ந்துவிட்ட மனதின் சுவர்கள்**
**அவளைக் கட்டிக்கொள்ள விடாத போதும்,**
**மெத்தென்ற இதழாய் வருடிப் போகும்....**
**தேவைகளின் தடம் பிடித்து,**
**தூர வந்துவிட்ட போதும்,**
**எனக்கு மட்டுமே புரியும்**
**அவளின் கருவறை மணத்தை**
**அள்ளி அள்ளி என்**
**விடெங்கும் தெளித்து,**
**சுருண்டு படுத்துத் தூங்கிப்போக வேண்டும்.**
**- கனிமொழி**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குத் திடீரென விருந்தாளி யாராவது வந்துவிட்டால்... அதுவும் சாப்பாட்டு நேரத்தில்... தயக்கமேயில்லாமல் வரவேற்று, அவருக்கும் அல்லது அவர்களுக்கும் உணவு கொடுத்து உபசரிப்பதற்கு நம்மிடமுள்ள ஒரே ஆபத்பாந்தவன் - பாண்!



அதிகாலையிலேயே எழுந்து, சுறுசுறுப்பாக சமையல் வேலைகளைச் செய்து பார்சல் கட்டி வேலைக்குச் செல்லும் ஒவ்வொருவருக்கும் காலை ஆகாரப் பிரச்சினையைத் தீர்க்க இருக்கவே இருக்கிறது பாண்.

பகல் முழுக்க உழைக்கும் உழைப்பாளிகளும், அலுவலகங்களில் வேலை செய்யும் உத்தியோகத்தர்களும் மாலை வீடு திரும்பும்போது வழியில் எங்கேனும் ஒரு கடையில் பாணையும் வாங்கிக் கையில் எடுத்துச் செல்கிறார்கள். இப்படி...

பாண் நமது வாழ்க்கையில் பிண்ணிப் பிணைந்த ஒன்றாக இருப்பது மட்டுமல்லாமல் அரசியலிலும் செல்வாக்குச் செலுத்துகின்றதென்றால் நம்புவீர்களா?

# சுடச்சுடப் பாண் படப்பட.....?



1915இல் ரஷ்ய போல்ஷேவிக் கட்சியினர் வீதிக்கிறங்கி போராட்டம் நடத்தியபோது அவர்கள் முன்வைத்த முதல் கோரிக்கையே மக்களுக்குப் பாண் வேண்டும் என்பதுதான். அது போலவே பிரான்ஸ் ஆட்சி செய்து கொண்டிருந்த மனிதாபிமானமற்ற மேரி அன்டனோய்ட் என்ற அரசியின் காலத்தில் அவரது சுகபோகங்களுக்காக மக்கள் மீது வரியைச் சுமத்திய தன் விளைவு, பாண அம்மக்களுக்கு எட்டாக் கனியாக மாறியது. அந்நாட்டு மக்கள் அணிதிரண்டு அரசமாளிகை முன் ஒன்றுகூடி 'எமக்குப் பாண் வேண்டும்' என ஆர்ப்பாட்டம் செய்த வேளையில், எட்டியும் பார்த்த அரசி இவர்கள் என்ன கேட்கிறார்கள் என்பதாக, பாண் கேட்கிறார்கள் என்று காதில் கூறப்பட்டபோது 'பாண் இல்லாவிட்டால் கேக் சாப்பிடச் சொல்லுங்கள்' என்றாளாம் அந்த அரசி. அதன் விளைவு

பிரான்ஸிலும் நடந்தது ஆட்சி மாற்றம். 1970களின் பின் எமது நாட்டு அரசியலிலும் பாண் ஒரு தனியான இடத்தைப் பிடித்துக் கொண்டது.

ஒரு வேளை உணவை ஒருவாறு சமாளிக்க நமக்கு தெய்வம் போல பாண் உதவும். அதே வேளை, பாண் என்றதும் முகம் சுளிப்பவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள்.

நாகரிக வளர்ச்சியின் ஒரு கட்டடமாக மனிதன் தானியப் பொருட்களை உணவாகப் பயன்படுத்தியதோடு, மாவினால் பாண் செய்யும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டான். எகிப்தியர்களே முதன் முதலாக பாணை உருவாக்கிய பெருமைக்குரியவர்கள். ஆரம்ப காலத்தில் கறுப்புப் பாணையும், கபில நிறப் பாணையுமே மக்கள் புசித்து வந்தனர். முதலாம் உலக மகா யுத்தத்திற்கு பிற்பட்ட காலத்திலே வெள்ளைப் பாண் அறிமுகமாகியது.

ஆரம்ப காலத்தில் மாவினாலும் ஈஸ்ட்டினாலும் மாத்திரம் செய்யப்பட்ட பாணுக்கு, 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் விட்டமின்களும் சேர்க்கப்பட்டன.

இற்றைக்கு சுமார் 495 ஆண்டுகளுக்கு முன் எமது நாட்டுக்கு பாண் அறிமுகப்படுத்தப்பட்டது. போர்த்துக்கீசரே எமது நாட்டுக்கு பாணை கொண்டு வந்தார்கள். பாணை சாப்பிட்டு வைனைக் குடித்த போர்த்துக்கீசர்களைப் பார்த்தும் பயந்த மக்கள் கோட்டை அரசனிடம் சென்று அவர்கள் கல்லை உண்டு ரத்தம் குடிக்கும் மனிதர்கள் என்று முறையிட்டனர்.

மேல் மாகாணத்தில் மட்டும் அறிமுகமாகிய பாண் நாட் செலலச் செல்ல நாட்டின் நாலா பக்கங்களுக்கும் வியாபித்ததோடு மக்களின் பிரதான உணவாகவும் இடம்பிடித்துக் கொண்டது.

போர்த்துக்கீசர் நமது நாட்டில் விட்டுச் சென்றவைகளுள் இன்றும் அழியாமல் பாதுகாக்கப்படும் ஒரு சொத்து பாண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண் எல்லா விதத்திலும் இலகுவான உணவாக இருப்பதால் அதிகம் விரும்பப்படுகிறது. எங்கும் கிடைக்கும். இலகுவாக எடுத்துச் செல்லலாம். வாங்கியவுடன் நேரடியாக உட்கொள்ளலாம் என்பதெல்லாம் இதன் அனுகூலங்கள்.

கோதுமை தானியம் அறுவடை செய்யப்பட்டு உமி, தவிடு நீக்கப்பட்டு, அரைக்கப்பட்டு வரும் மாவினையே நாம் பாணுக்கு பயன்படுத்துகிறோம்.



இதனால் சில ஊட்டச்சத்துக்கள் நீக்கப்பட்ட நிலையிலேயே பாண் தயாராகிறது.

மாவு, நீர், ஈஸ்ட், மஜரின் போன்றவற்றைக் கலவை செய்து நான்றாகப் பிசைந்து சில மணி நேரம் புளிக்க வைத்து.... பின் சூளையில் வைத்து அளவாக சூடாக்கியே பாணைத் தயாரிக்கிறார்கள். இப்படி தயாரிக்கப்பட்ட பாணின் இன்றைய விலை 8 ரூபா 50 சதம்.

நாளுக்கு நாள் மாவின் விலை உலக சந்தையில் ஏறிக்கொண்டே போவதால் பாணின் விலை உயர்ந்துகொண்டே செல்கிறது. இதனாலேயே அண்மையில் அரசு மாவின் விலையை 3 ரூபாவினால் குறைத்தது. இப்படிக் குறைத்தும் எரிபொருள் மற்றும் ஏனைய பொருட்களின் விலை யேற்றத்தினால் பாணின் விலை மாறாமலேயே உள்ளது.

பாணை தனியாக உண்பதால் புற்றுநோய் வரக்கூடிய ஆபத்து இருப்பதாக ஆராச்சிகள் கூறுகின்றன. இதனால் பாணை உண்ணும் போது இறைச்சி, மீன், மரக்கறி, பருப்பு போன்றவற்றுடன் சேர்த்தே உண்ண வேண்டுமென்று வைத்தியர்கள் கூறுகின்றனர்.

இலங்கை தர உறுதிப்படுத்தல் நிறுவனத்தின் அறிவுறுத்தலின் படி தயாரிக்கப்பட வேண்டிய மாவின் தரம் SLS 144 அங்கீ காரத்தையும், சேர்க்கும் உப்பு SLS 79 தரத்தையும், கலவை செய்யும் நீர் SLS 614 இற்கு அமைய சுத்தமானதாக இருக்க வேண்டும். வேண்டிய அளவான ஈஸ்ட் பயன்படுத்தப்பட வேண்டும்.

450 கிராம் (1 இறாத்தல்) பாணில் குறைந்தது 437 கிராம் எடையாவது இருக்க வேண்டும். 225 (1/2 இறாத்தல்) பாணில் குறைந்தது 216 கிராம் எடையாவது இருக்க வேண்டும்.

சாதாரண பாணே 8.50 க்கு விற்கப்படுகிறது. இதனைத் தவிர 10 - 13 ரூபாவுக்கும் பாண் விற்கப்படுகிறது.



எப்படியோ பாண் ஏழைகளின் தோழனாக அன்றும் இன்றும் இருந்து வருகிறது. அரசியல் லாபங்களுக்காக பாணை வைத்து இலாபம் தேட முனையும் போது அது ஏழை மக்களின் மீது விழும் அடி என்பதை உரியவர்கள் சிந்திக்க வேண்டும்.

அதே நேரம், தரங்கெட்ட பாண்களை விநியோகிக்கும் பேக்கரி உரிமையாளர்களின் மீது பொறுப்புள்ளவர்கள் கவனஞ்செலுத்த வேண்டும்.

சில பேக்கரிகளைப் பார்த்தவுடனேயே வாந்தி வருமளவுக்கு சுத்தமின்றிக் காணப்படுவதையும் சில பாண்களில் கரப்பான் பூச்சி, பல்லி போன்றவைகள் வீழ்ந்திருப்பதையும் நாம் காண்கிறோம்.

இதுவும் தவிர்க்கப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்தோடு பாவனையாளர்களும் பாணில் இருக்கும் குறைபாடுகளைப்பற்றி கரிசனையுடன் பிரதேச உணவுத் திணைக்கள அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்ய முன்வர வேண்டும். அப்பொழுதுதான் பாணின் மகிமை பேணப்படும். •



## பாணின் விலை மாற்றம்

| வருடம் | விலை | வருடம் | விலை |
|---|---|---|---|
| 1952 | 0.25 | 1977 | 0.69 |
| 1953 | 0.25 | 1978 | 0.79 |
| 1954 | 0.25 | 1979 | 1.09 |
| 1955 | 0.25 | 1980 | 1.93 |
| 1956 | 0.25 | 1981 | 2.37 |
| 1957 | 0.25 | 1982 | 2.67 |
| 1958 | 0.25 | 1983 | 2.76 |
| 1959 | 0.25 | 1984 | 3.03 |
| 1960 | 0.25 | 1985 | 3.06 |
| 1961 | 0.27 | 1986 | 3.10 |
| 1962 | 0.29 | 1987 | 3.10 |
| 1963 | 0.27 | 1988 | 3.10 |
| 1964 | 0.25 | 1989 | 3.37 |
| 1965 | 0.25 | 1990 | 5.03 |
| 1966 | 0.27 | 1991 | 4.51 |
| 1967 | 0.30 | 1992 | 4.50 |
| 1968 | 0.35 | 1993 | 4.86 |
| 1969 | 0.35 | 1994 | 4.77 |
| 1970 | 0.35 | 1995 | 3.79 |
| 1971 | 0.35 | 1996 | 5.99 |
| 1972 | 0.35 | 1997 | 7.87 |
| 1973 | 0.51 | 1998 | 8.50 |
| 1974 | 0.93 | 1999 | 8.50 |
| 1975 | 0.98 | 2000 ஜுன் வரை | 8.50 |
| 1976 | 0.89 | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கோழிச் சிறகுகளிலிருந்து பிளாஸ்டிக்

ஆண்டுதோறும் அமெரிக்காவில் மட்டும் சுமார் இரண்டு பில்லியன் கிலோ எடையுள்ள இறைச்சிக் கோழிச் சிறகுகள் மிச்சமாகின்றன. இவற்றை என்ன செய்து அழிப்பது என்பது தலைவேதனையாக இருந்தது. வழக்கமாக கோழி இறகுகளை நீராவியால் சமைத்து (வேறு சில பொருட்களையும் இட்டு) குருணைகளாக்கி, மீண்டும் தீவனமாக கோழிகளுக்கும், கால்நடைகளுக்கும் வழங்குவார்கள். இது அதிக இலாபகரமாக இருப்பதில்லை.

அமெரிக்காவில் பெல்ட்ஸ்வில் நகரத்திலுள்ள வேளாண்மைத்துறை ஆய்வாளர் ஷ்மிட் (*Schmild, Agriculture - Research Service, Beltsville*) கோழி இறகுகளை வெட்டித் தூளாக்கி, அவற்றை வேதமத்தால் கூழாக்கி புதியரக பிளாஸ்டிக் தயாரிக்கும் முறையை உருவாக்கியுள்ளார். இதை மெல்லிய தாளாகவும், கார் போன்ற வாகன உதிரிப்பாகங்களாகவும் மாற்ற முடியும் என்று ஷ்மிட் கூறுகிறார்.

நமது 'சொப்பிங் பேக்'குகள் போல் உக்காமல் நிலத்தில் கிடந்து நாறிக் கொண்டிராமல் கோழி இறகு பிளாஸ்டிக் 'பேக்'குகள் போட்ட ஒரு சில நாட்களிலேயே மண்ணோடு மண்ணாக உக்கிவிடும். எனவே இவை சுற்றுச் சூழலை மாசுபடுத்தமாட்டா.

# - 3D புதிர் -

அருகே உள்ள படம் என்ன? வெறுமனே ஏதோ புடவை அல்லது கேர்ட்டினுக்கான டிசைனா என்று நீங்கள் எண்ணமிடலாம். ஆனால் இது 3-D படம். அதாவது முப்பரிமாண படம். அப்படியென்றால்...? இதில் எடுத்த எடுப்புக்கு தளப்பரப்பில் தெரியும் படமன்றி உள்ளே ஒரு முப்பரிமாண தளத்தில் அமைந்த படமொன்று மறைந்திருக்கிறது. மிக நுணுக்கமான இப்படத்தை ஆராய்பவரின் கண்ணுக்கு அவ்வுருவம் புலப்படும்.

இப்படியான 3-D படங்களை பார்த்து உள்ளேயுள்ள சூட்சும உருவைக் கண்டு பிடிக்க உதவக்கூடிய முறைகளை இங்கே தருகிறோம். எங்கே, இப்படத்திலுள்ள உருவம் என்ன என்று கண்டுபிடித்துக் கூறுங்கள் பார்க்கலாம். முயலுங்கள்!

3-D பிம்பங்களுடன் விளையாட, அதை கண்டு மகிழ - தகுந்த இடமும், வெளிச்சம் சமமாகப் பரவும் சூழ்நிலையும் முதல் தேவை. 3-D படத்தைக் கையிலெடுத்த பிறகு நேராக நிமிர்ந்து உட்காருங்கள். ஆழமாக மூச்சு விட்டு ஆசுவாசப்படுத்திக் கொள்ளுங்கள். ஆரம்பத்தில் உடனே எதுவும் தெரியவில்லையா? பொறுமை! பொறுமை! மனம் அமைதியாய் இருக்க, மாயமாய் பல 3-D பிம்பங்கள் கிளம்பி உங்களுடன் பேச ஆரம்பிக்கும்.

**முறை - 1**

பளபளப்பான படத்தையே பாருங்கள். படத்தில் பட்டு பிரதிபலிக்கும் ஒளியையே பாருங்கள். இப்பொழுது படம் தெளிவற்று தெரியும். முயற்சியைக் கைவிடாதீர்கள். தொடர்ந்து மேலும் ஒன்று அல்லது இரண்டு நிமிடம் முயற்சியை நீடித்தால்.... இதோ 3-D பிம்பம்.

**முறை - 2**

இன்னொரு முறை படத்தை மூக்கு நுனி வரை கொண்டு வாருங்கள். இடித்துக் கொள்ளாதீர்கள். பிம்பத்தை பார்க்க முயற்சி வேண்டாம். படம் தெளிவற்று போகுமாறு அப்படியே அதை சும்மா விடுங்கள். படத்தை மெதுவாக மூக்கு நுனியிலிருந்து நகர்த்தி, கையை நீட்டி மூக்குக்கு நேராக தூரப்படுத்துங்கள். விடாமல் பார்த்துக் கொண்டிருந்தால், 3-D படம் தட்டுப்படும்.

**முறை - 3**

இந்த முறை படத்தை ஊடுருவிப் பார்க்கும் பாருங்கள். பார்வையின் குவிமையம் படத்தை தாண்டியிருக்குமாறு சில நிமிடங்களுக்குப் பார்க்க வேண்டும். மிகப் பொறுமையாக, ஆசுவாசமான நிலையும் அவசியம். நோக்க நோக்க 3-D பூதம் கிளம்பும்.

**முறை - 4**

மேற்சொன்ன மூன்று முறையும் நேராக பார்க்கும் முறை. அடுத்து சாய்வுப் பார்வை. இது சிலருக்கு மற்றதை விட வசதியாகப் படலாம்.

இம்முறையில் விரலையோ அல்லது பென்சிலையோ அல்லது ஒரு பேனாவையோ கண்ணுக்கு அருகில் கொண்டு வாருங்கள். அதைப் பார்க்கும் போதே படத்தை சற்றுத் தள்ளிப் பிடியுங்கள். பார்வையின் குவி மையம் விரலில் இருக்கும் போது 3D மோகினி உங்களை பார்க்கலாம். இதற்கு சில நிமிடங்கள் ஆகலாம்.

ஒருமுறை வசப்பட்டுவிட்டால் நீங்களாகவே மற்றொரு முறையையும் முயற்சி செய்யவும். அப்படி முயற்சிக்கும் போது அதே படத்தில் சூட்சுமமாய் இருக்கும் வேறு சில உருவங்கள் உங்கள் பார்வைக்கு சத்தியமாய் தெரியும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை

கனவுலகில் சஞ்சரிக்கும்
மகாராணி!

கற்பனைப் பூக்களால்
உருவான காதல் மாலை!

உணர்வுகளுக்குள் - ஒரு
கனல் பற்றி எரியும்போது
மனக்கண்ணில் இருந்து
வெளியேறும் வார்த்தைகளின்
உன்னத வடிவம்!

காதலிக்கும்போது
காதலர்களின் திருவாயிலிருந்து
உதிர்க்கும் சங்கீதப் புன்னகை!

காதலில் தோற்றவர்களின்
வாயிலிருந்து உமிழும்
துப்பாக்கி ரவைகள்!

எந்தவொரு
உள்ளத்திலிருந்தும்
வெளிக்கிளம்பி பிரகாசிக்கும்
நல்ல தன்மைகள் எதுவோ?
அதுவே இனிய கவிதை!

**எம். சுயர்சன்**
**கோண்டாவில்**

## இதயக் கூட்டில்...

நான் பருவமடைந்த போது
என் இதயக்கூட்டில் வாசலிட்டேன்.
சிட்டுக்கள் கூடுகட்டும்
என்ற எதிர்பார்ப்பில்.

வந்தது சிட்டு கட்டியது கூடு
ஓரிரு மாதங்கள்தான்
பிய்த்துக்கொண்டு கட்டியது
வேறு ஒரு ஏஸி பூட்டிய
இதயத்துக்குள்.

அன்று பூட்டிய கதவுகள்தான்
துருப்பிடித்துக் கொட்டுண்டு
பெரிய துவாரத்தோடு.

இன்று இதய வாசலில்
நீட்டப்பட்ட வால்வுகளில்
மீண்டும் ஒரு சிட்டு
கட்டுவதா? விடுவதா?
என்ற சிந்தனையோடு.

இன்று இரத்தத்தில்
அனுப்பியுள்ளேன் தாக்கல்
கட்டுவதாயின் மட்டும் சொல்
கொட்டுண்ட பூச்சு மாற்றி
துருப்பிடித்த கதவு மாற்றி
ஏஸி பூட்டித் தருகிறேன் என்று.

**எச். நிஹால்**

## இவன் மனிதன்?

எங்கும் அவலம்
குருதி குதித்து ஓடும்
போர்க்களம் ஆனது நாடு
காற்றில் ஆடிக் கிழியும்
முள்ளில் தொங்கும் துணியாய்
ஆனது எங்கள் வாழ்க்கை

சிதையுண்டு போனது உறவு
சின்னாபின்னமானது இதயம்
பூக்களில் வெடிமருந்தின் நெடி
இன்பத்தைத் தேடித் தேடி
இன்பம் என்றொரு சொல்லை
இல்லா தொழித்தனன் மனிதன்!

**வர்ண. இளஞ்செழியன்**
**திருகோணமலை.**

## அறிவிப்புப் பலகை

சிறகுகள் வேண்டி
பொழுதுகள் புலம்பும்போது
வர்ணம் பூசித் திரியும்
வண்ணாத்திகளின் சிறகுகள்.

புற்கள் தலைநிமிர்ந்து கிடக்கும்
புல்வெளிகளில்
நாட்கள் தலைகுனிந்து கிடக்கும்

கால வாசல்களில்
இதழ்கள் நிறைய புன்னகையை
நிரப்பி வைத்திருக்கும் பூக்கள்

நெருப்பெரியும் நாட்களின் நடுவே
மின்கம்பங்களில் மட்டும்தான்
அபாயம் என்கின்ற
அறிவிப்புப் பலகையுமிருக்கிறது.

அழுகிற கண்களின்
நீர்த் துளிகள்
அழுகிற கண்களைத்தான்
சுற்றிப் பார்க்கிறது.

இறப்புக்களின் முகங்களை
ஈக்கள் வந்துதான்
இனம் காண முடிகிறது.

**சாய்ந்தமருது**
**எம். எம். எம். நகீபு**

## எங்கோ வாழ்கிறேன்...

எங்கோ ஒரு தேசமிருக்கும்
புல்லும் முள்ளும்
சுற்றி முளைத்திருக்க
அங்கு நான் பிறந்திருப்பேன்...

உடலுக்கு அங்கியும் ஊருக்கு
வங்கியும் தேவையில்லை
என்னிடம் பணமிருக்காது.
என் தலை தடவ
உறவுகள் பிறந்திருக்காது..

என் இன்பமும் உலாவல்களும்
சின்ன எறும்புகளுடன் கழியலாம்

அங்கு சத்தங்களில்லை
கொடூர யுத்தமுமில்லை
மண்ணுக்கு நான் சாட்சியாக
என் மறைவுக்குப் பின்னால்
மண்ணின் சாட்சியும்தான்
நிலைத்திருக்கும்...

அன்பில்தான்
என் விம்மலும் தும்மலும்
கலந்திருக்கும்.

எனக்குக் கூட
இரத்தமிருப்பது தெரியாது
பழிவாங்கல்களும்
சதை சிதறும்
இரத்த நாற்றமும்
அனர்த்தமும் அங்கு
இல்லவே இல்லை..

காலங்கள் கழியுது
பயமின்றித் தூங்கினாலும்
பயம் சுமத்தும்
யுத்த கனவுகள்தான்
தொலைவில்...

**யாசீன்பாவா ஹுஸைன்**
**பொத்துவில்-02.**

## காதல் கவி

இதயக் கனங்களை,
எண்ணக் கருக்களை,
வண்ணக் கனவுகளை,
துயரக் கீதங்களை,
எழுத்தாய் இறக்கிவிட,
முழுக் காரணமும்
முதல் காதலே!

இளமையும் கவிதையும்
இணைந்து பரிமாற,
இதயமும் இதயமும்
இணக்கம் கொண்டாட,
இரவும் நிலவும்
உறவால் தழுவ
எனது எழுத்துக்கள்
எல்லாம் காவியமே!

தனிமையும் தவிப்பும்
தருகின்ற சுகமும்
தாவணித் தலைப்பில்
தவழும் தென்றலும்,
தென்னங் கீற்றின்
அசைவும் ஓசையும்,
கவிதையே கவிதையே
காதலின் வீதியில்!

**ஏறாவூர் றஸ்ஸாக்.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊமையாய்... செவிடராய்... குருடராய்... முடவராய்... பிழைக்க ஒரு...



வாழப் பிறந்த வாழ்க்கையை வாழ்ந்து தீர்க்கவே எல்லோரும் ஏதோ ஒரு விதத்தில் முயற்சி செய்கிறார்கள். வாழ்க்கைக்கு உயிர்நாடியாக இருப்பதோ பணம். தேவையான பணத்தைப் பெற்றுக்கொள்ள பல வழிகளிலும் மனிதர்கள் உழைக்கிறார்கள்.

உழைப்பு மனிதனை உயர்வாக்கும் என்பது ஒரு முதுமொழி. பணம் பெறுவதே உயர்வின் பிரதான இலக்கு.

கையில் பணமிருந்தால் எதையும் சாதிக்கலாம் என்ற இந்தத் தந்திர உலகில் இன்னோர் உயிரைக் கொன்றேனும் பணம் சம்பாதிக்கும் ஆசையும் ஆர்வமும் மனிதரிடத்தில் குடிகொண்டுவிட்டது.

உழைக்க மனமில்லாதவர்களுக்கும், மனமிருந்தாலும், கைகால்களில் அதற்கான வலுவில்லாதவர்களுக்கும் பணம் தேவையாக இருக்கிறது? அதை எப்படி அவர்கள் நிவர்த்தி செய்வது?

*பிச்சை!*

இதுவும் உலகளாவிய ரீதியில் மிகப் பிரதான ஒரு தொழிலாக இன்று உருவெடுத்து விட்டது. தொழிலின்றி அலைவோரும், ஊனமுற்றதால் புறக்கணிக்கப்பட்டோரும் பெற்ற பிள்ளைகளின் ஆதரவு கிட்டாத தாய், தந்தையரும் உழைக்க மனமில்லாதவர்களுமே இந்தத் தொழிலுக்கு இறங்கியுள்ள தொழிலாளர்கள்.

சன நெரிசல் மிகுந்த புறக்கோட்டையில் மாலையானதும் எல்லோரும் தம் வீடுகளுக்கு அவசரமாக போய்க் கொண்டிருக்க...

இரவாகும்.

இரவானதும் ஓரிருவர் மாத்திரமே உலவுவர். இவர்கள் தூர இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகள். இவர்களைத் தவிரவும் சிலர் பஸ் நிலையத்திலும் நடைபாதையிலும் உட்கார்ந்திருப்பதை நாம் காணுவோம். சன நெரிசலே இல்லாத இலேசான இருளே இவர்களுக்கு ஆனந்த இரவு. அன்றைய உழைப்பில் தமக்கு வந்த பணத்தை கணக்கிட்டுப் பார்த்துவிட்டு கையில் இருக்கும் பாண் துண்டை சாப்பிட்டுவிட்டு பையைத் தலைக்கு வைத்துத் தூங்கும் இவர்கள்தான் கொழும்பு நகரின் இரவுக் காப்பாளர்கள்.

எந்தவிதக் கூச்சமோ, தயக்கமோ இன்றி தம்மை எந்தளவுக்கு இழிவுபடுத்த முடியுமோ அந்தளவுக்கு இழிவுபடுத்தி, சிரம் தாழ்த்தி, தயை கூர்ந்து, கந்தலாடையுடன் "ஐயா பிச்சை போடுங்கள் ஐயா" என்று யாராவது கேட்டால் உடனே நாம் கையில் இருக்கும் சில்லறைகளில் ஓரிரு ரூபாயைத் தூக்கிக் கொடுத்து விடுவோம் தானே...

இதுதான் பிச்சைக்காரர்களின் தொழில் உத்தி.

இந்த அடிப்படையில் சில மாற்றங்களை அவரவர்களுக்கேற்ற மாதிரி மாற்றிக் கொண்டு தம் காரியத்தில் கண்ணாக - அதாவது காசு சேர்ப்பதில் கருத்தாக இருப்பவர்கள் பிச்சைக்காரர்கள்.

பஸ் வண்டிகள், இரயில் வண்டிகள், நடைபாதைகள், பஸ் தரிப்பிடங்கள், வியாபார நிலையங்கள்... இவர்கள் தொழில் பார்க்கும் இடங்கள். இவை மட்டுமன்றி பள்ளிவாசல்கள், கோயில்கள், பௌத்த விகாரைகளிலும் வாயிற்புறத்தில் காணப்படுவார்கள்.

இவர்களைப் பற்றி மேலும் அறிவதற்காக வீதிக்கு இறங்கிய போது பல உண்மைகள் தெரியவந்தது.

இது அவர்களை இழிவுபடுத்துவதற்காக எழுதும் கட்டுரையல்ல. வாழ்க்கைப் பிச்சைக்காய் கையேந்தும், நாம் கண்ட அவர்களது அவலநிலையை உணர்த்துவதே நோக்கம்.

இலங்கையில் சுமார் 50 ஆயிரம் பேர் பிச்சைத் தொழிலில் ஈடுபட்டுள்ளாதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான ஆய்வாளரும் விரிவுரையாளருமான நந்தசேன ரத்னபால நடத்திய ஆய்வில் தெரிவித்திருக்கிறார். இது 20 வருடங்களுக்கு முன்பிருந்த தொகையை விட இரு மடங்காகும் என்றும் அவர் கூறுகிறார்.

இன்று கொழும்பு நகரிலுள்ள அநேகமான பிச்சைக்காரர்கள் உண்மையிலேயே இயலாதவர்கள் அல்லர். அநேகமானோர் மக்கள் முன் நடித்தே பணம் பெற்றுக்கொள்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடலின் நுரை இழுத்துக்
கால் சுளுக்கிக் கொண்டதுபோல்

வில்லின் நாண் இழுக்க
விரல் அம்பாய்ப் பறந்ததுபோல்

உழுந்து விதை போட
ஊமக்கொட்டை முளைத்ததுபோல்

அமைதி விரும்பும் எங்களுக்கு
அழுபாடே வாய்த்ததுபோல்

நீங்களும் நினைத்திராமல்
வெள்ளையாய் ஒரு குஞ்சு....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவுஸ்திரேலியா சிட்னியில் ஓரினப் புணர்ச்சியாளர்கள் நடத்திய மாபெரும் ஊர்வலத்தில் கங்காருவின் தோற்றத்தில் புறப்பட ஆயத்தமாகும் சிலர்.



ஜகார்த்தாவில் நடந்த களி யாட்ட விழா வில் இந்தோ னேசியர்களின் மரபுவழிக் கலைகளில் ஒன்றான ராட்சத பொம்மலாட்டம்



சீனாவில் திபெற்றன் புதுவருடப் பிறப்பை முகமூடியணிந்து கொண்டாடும் பௌத்த துறவிகள்



வெனிஸ் நகர களியாட்ட விழாவில் வண்ணத்துப்பூச்சி வடிவில் தெருவில் வலம் வரும் பெண்



ஸ்பெயினில் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 19ம் திகதி வசந்தகாலத்தை வரவேற்பதற்காக சிலைகளை எரித்துக் கொண்டாடும் விழா நடக்கிறது. பேப்பர் மற்றும் மரத்துண்டுகளால் செய்யப்பட்ட சிலையின் கடைசிக்கட்ட வேலைகளைக் கவனிக்கிறார் ஒருவர்.



லண்டனில் நடைபெற்ற 'பாஷன் ஷோ'வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களைப் பிரட்டிக்கொண்டு பார்வையற்றவர்களாக வருகிறார்கள். ஒரு வகை கசாய மருந்தை கடையில் வாங்கி அதில் மாவைக் கலந்து நெடுநேரம் சூடாக்கி எடுத்து அதைக் கை காலில் தடவி காய்ந்தவுடன் அதனை அகற்றி சுடுகாயங்களுக்குள்ளானவர்கள் போலும் வருகிறார்கள்.

இப்படி மக்களின் கண்களில் குத்திவிட்டு அவர்களது மனதின் ஈரமான பகுதியைத் தூண்டிவிட்டு பொக்கற்றைத் திறக்க வைப்பதே இவர்களது நோக்கம். இப்படி எங்களோடு கதைத்துக்கொண்டவர் புறக்கோட்டையில் இரண்டு காலும் முடமான பிச்சை ஒன்றே தஞ்சம் என்று வாழும் ஒருவர்.

"சேர், உண்மையை நீங்கள் அறிந்து கொள்வதில் எங்களுக்கு விருப்பம்" என்று தொடர்ந்தார் அவர். எங்களைப் போல கால், கை இயலாதவர்களுக்கு சில்லறை தர முடியாத மக்கள் "பென்டேஜ்"காரர்களிடம் மாட்டிக் கொள்கிறார்களே" என்று தன் புருவத்தை உயர்த்திச் சொன்னார்.



எனது புருவமும் உயர்ந்து அவர் கூறிய 'பென்டேஜ்'காரர்களைப் பற்றிக் கேட்டேன்.

'பென்டேஜ்'காரர்கள் என்பது கை, கால் உடைந்தது போல பென்டேஜ் போட்டு வருபவர்களை. இதுவும் ஒரு தொழில் உத்தியே. அதுமட்டுமன்றி 'ப்ளாஸ்டர்' ஒட்டிக் கொண்டும் வருவார்கள். இதற்காக அவித்த தக்காளி, மீன்களின் இரத்தம் போன்றவற்றையும் பென்டேஜ் பண்ணுவார்கள்.

சிலருக்கு ப்ளாஸ்டர் பண்ண வேண்டிய இடத்தில் றப்பரை வைத்து ப்ளாஸ்டர் பண்ணுவார்கள். இப்படி 'பென்டேஜ்', ப்ளாஸ்டர் பண்ணுவதற்கு கைதேர்ந்தவர் நந்தபால என்பவர். இவர் நாரெஹேன்பிட்டியில் வசிக்கிறார்... இப்படி கூறிக்கொண்டே போனார் அந்த நபர்.

இவர் மட்டுமன்றி சுவடிக்கூடத் திணைக்களத்தினருகிலும், கண் வைத்தியசாலைக் கருகிலும் பெண்டேஜ் நிபுணர்கள் இருக்கிறார்கள். இவர்களோடு ஒப்பிடுகையில், பாட்டுப்பாடி பிச்சை எடுப்பவர்கள் கொஞ்சம் கௌரவமான பிச்சைக் காரர்கள். இவர்களும் தொழிலின்றி விரக்திப்பட்டவர்கள் போல



கதைத்தாலும் உண்மையில் இவர்கள் வேறு தொழிலில் நாட்டமில்லாதவர்களே.

பழைய காயங்கள் போல காட்டிக் கொள்வதற்கு தக்காளிப்பழம், கருவாடு போன்றனவற்றை வைத்துக் கட்டி, கரைத்த சர்க்கரை அல்லது டின் பாலைக் கரைத்து பெண்டேஜ் பண்ணுவார்கள். சர்க்கரை, பால், நீர் என்பவற்றுக்கு ஈ மொய்ப்பதால் அப்படியொரு செட் அப்.

இன்னும் கால்கள் வீங்குவதற்கு, மீன்களின் குடல், அவித்த கிழங்கு இவற்றைச் சேர்த்து பெண்டேஜ் பண்ணிவிட, அது சீழ் வடியும் காயம் போல வீங்கிப் பெருத்து காணப்படும். இப்படி சீழ் வடிய வரும் பிச்சைக்காரர்களைப் பார்ப்பவர்கள் அவசரஅவசரமாக பணத்தைக் கொடுத்து அனுப்பிவிடுவார்கள். இப்படிச் செய்ய வேண்டுமென்பதற்காகவே இந்த ஏற்பாடு.

சில வயது வந்த பிச்சைக் காரர்கள் வைத்தியசாலைகளில் பணிபுரியும் சிற்றூழியர்களுக்குப் பணம் கொடுத்து எக்ஸ்-ரே படங்களை வாங்கி வைத்துக் கொண்டும், வைத்திய சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டும் மக்களை ஏமாற்றி பணம் வாங்கிக் கொள்கிறார்கள்.

திட்டமிட்டபடி இருவர் காய்கறிகளை வாங்கிக்கொண்டு சன நெரிசல் மிக்க பகுதியில் செல்வார்கள். ஒருவரிடமே காய்கறிப் பை இருக்கும். அவர் திடீரென மயங்கி விழுவதும் வாய்க்குள்ளிருந்த அஸ்ரின் நுரை கக்குவதும் சரியான நேரத்தில் நடக்கும். அருகில் வந்த மற்றவர் இவர் மீது அனுதாப வார்த்தைகளை உதிர்த்து 10 ரூபாவை பொக்கற்றில் திணித்து விடுவார். இதைக் காணும் சனமும் இயலாதவன் என்று நினைத்து கையிலுள்ளதைப் போட்டு விட்டு போவார்கள். சனக்கூட்டம் விலகிச் சென்றதும் மெதுவாக எழும்பி இருவரும் எங்கேயாவது மறைந்து சென்று வருவாயைப் பிரித்துக்கொள்வார்கள்.

இது தவிர, இரத்தம் விற்று பணம் சம்பாதிக்கும் முறையையும் இவர்கள் கையாண்டு வருகிறார்கள். இவர்கள் இரத்தம் விற்றாலும் அதிக பணம் இவர்களுக்கன்றி இவர்களின் இரத்தத்தை விற்க ஏற்பாடு செய்து கொடுப்பவர்களுக்குப் போய்ச் சேருகிறது.

இப்படி தனி நபராக மட்டும் பிச்சைத் தொழில் நடப்பதில்லை. மாறாக இது ஒரு கூட்டுத் தொழிலாகவும் நடைபெறுகிறது. கொழும்பில் இருக்கும் அநேகமான பிச்சைக்காரர்கள் பல தலைவர்களின் கீழ் இயக்கப்படுகிறார்கள்.

மருதானை, பொரல்ல, தெமட்டகொட, கொள்ளுப்பிட்டி, புறக்கோட்டை, தொட்டலங்க, கொம்பனித்தெரு என்று இவர்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு பிரதேசத்திலுள்ளவர்கள் மற்றைய பிரதேசத்துக்குள் நுழைந்து பிச்சை எடுக்க முடியாது. அப்படி நடக்கும் போது சண்டை சச்சரவுகள் கூட நடக்கும்.

பிச்சைக்காரர்களை பேரம் பேசி விலைக்கெடுக்கும் இடங்களும் கொழும்பில் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரம் பேசி எடுக்கப்பட்ட பிச்சைக்காரர்கள் அவர்களின் பிரதேசங்களுக்கு கொண்டு போய் விடப்படுவார்கள்.

இதற்கு நல்ல உடலமைப்புள்ள வாட்டசாட்டமானவர்கள் சரிவரமாட்டார்கள். மாதக்கணக்கில் பழுதடைந்த காயங்கள், அழுக்கடைந்த உடைகள், கால், கை இல்லாமை, முடம், கண் தெரியாமை... இந்த இலட்சணமுள்ளவர்களுக்கு படு கிராக்கி. நல்ல விலைக்கு பேரம் போகும்.

சிறு பிள்ளைகளைத் தூக்கி வந்து பிச்சை கேட்பவர்களை நீங்கள் சந்தித்திருப்பீர்கள். நாளை அதே பிள்ளையை இன்னொரு தாய் தூக்கி வந்து பிச்சை கேட்பாள். பிச்சை உலகின் விதி இப்படி.

இப்படி நாள் முழுக்கத் தேடிய பணம் இவர்கள் கைக்கு முழுமையாக எட்டுவதேயில்லை. இவர்களை மேய்க்கும் முதலாளிக்கே பெருமளவு பணம் போய்ச் சேருகிறது. இவர்களுக்கு வெறும் நாட் கூலியும் சாப்பாடும் மட்டுமே. இவர்களுள் விபசாரிகளும், பிக்பொக்கட்காரர்களும், திருடர்களும்கூட இருக்கிறார்கள்.

முதலின்றி நடக்கும் தொழில் பிச்சை. பெரிதும் உடலை வருத்தி உழைக்காமல் ஏறத்தாழ இலவசமாகவே கிடைக்கும் சன்மானம். ஆகையால் தான் இவ்வளவு குறுக்கு வழிகளும் இதற்கு கையாளப்படுகின்றன.





உண்மையில், சமூக சூழ்நிலைகள் பிச்சை எடுப்பதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம். தொழிலின்மை, தொழில் தெரியாமை, கிடைக்கும் வருமானம் போதாமை... இவை ஒரு வகையில் ஒருவரைக் கைநீட்டச் செய்யும் காரணிகளாக அமைந்திருக்கிறது.

திருட்டும், கபடமும் இதனுள் நுழைந்துவிட்டதால் உண்மையிலேயே இயலாது பிச்சை கேட்கும் ஒருவரையும் கூட நாம் விரட்டிவிடுகிறோம். பாதிக்கப்படுவது அப்படிப்பட்டவர்களே.

இவர்கள் விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் இது ஒரு மாபியாத் தொழிலாகவும் உருவெடுக்கக்கூடிய சூழ்நிலை உருவாகலாம்.

மிகக் கொடுமையான விடயம் என்னவென்றால், பெரும்பாலும் சிறுவர்கள் இத்தொழிலில் ஈடுபடுத்தப்படுவதுதான். தங்களது வாழ்க்கை பற்றிய எந்த முடிவுகளையும் மேற்கொள்ள முடியாத வயதிலேயே பிச்சைக்காரர்களாக்கப்பட்டுவிடும் பிள்ளைகளின் கதி மிக மிகக் கொடூரமானது.

பிச்சையெடுக்கும் சிறுவர்களை எல்லாம் அரசாங்கம் பொறுப்பேற்று, அவர்களுக்கான எதிர்கால வழிகாட்டலை வழங்குவதற்குச் சட்டத்திலும் வழி செய்யப்பட வேண்டும்.

**- எம். எஸ். எம். ஹிஷாம்**

## அம்மா... அம்மா...

### அம்மா இல்லாத முதல் ரம்ஜான்

அம்மா இல்லாத
முதல் ரம்ஜான்
நன்றாய் நினைவிருக்கிறது
அம்மாவைப் போலவே.

எல்லா வீடுகளுக்கும்
வெள்ளையடித்த சுவர்களையும்
எங்களுக்கு
ஞானத்தையும் கொண்டுவந்த
ரம்ஜான்.

அதிகாலையில்
குளிக்க எழுப்பி விடும்
அம்மாவை எழுப்பி விட
அன்று யாருமில்லை

தூங்காத இரவை
சூரியன் எடுத்துச் சென்றபின்
எழுந்தோம்.

உலகம் முழுவதற்கும் போதுமான
நிராதரவும் ஏழ்மையும்
எங்கள் வீட்டில்
கப்பிக்கிடந்தது.

பிறரது
இரக்கத்தின் கனத்தை
பொறுக்கச் சக்தியில்லாத
தங்கை
கொடுத்தனுப்பப்பட்ட
எல்லாப் பட்சணங்களையும்
திருப்பியனுப்பி விட்டு
ஜதீகம் மீறி
எண்ணெய்ச் சட்டி
பற்ற வைத்தாள்.

தந்தை சாப்பிடாமலே
தொழுகைக்குச் சென்றார்
அவரைப் போன்றோரின்
காதல் பற்றி
கவிதைகளில்
குறிப்பிடப்படுவதில்லை.

சின்னத் தம்பியை
கட்டாயப்படுத்தி
புத்தாடை அணிவித்தோம்.
அம்மா இறந்த இரவில்
"இனிமேல் வரவே வராதா?"
என்றழுத பிள்ளையை
அப்படியே விட்டுவிட முடியாது.

(அம்மாவுக்குச் சாகிற வயசா?
சாகிறதுக்கு வயசா?)

நரம்புகளைத் தூண்டும்
மந்திரங்களின் பேரொலியுடன்
தொழுகை ஊர்வலம்
வீதியில் சென்றது.
பாட்டியின் கைகள்
ஏன் அவ்வளவு பயங்கரமாய்
நடுங்கின?

மூலைக்கு மூலை சாவு சிரித்தது.
அம்மாவை
நீலம் பாரித்த முகத்துடன்
மீண்டும் தூக்கி வந்து
கிடத்தியது போலிருந்தது.
முந்தைய ரம்ஜானில்
இந்த அளவுக்கு
இல்லாமல் போவோம் என
நினைத்திருப்பாளா?

பண்டிகைகள் கொண்டாடாத
நாத்திகனான நான்
முகத்தை மூடிக்கொண்டு
அழுதேன்.

பின்னர்
வேறு ரம்ஜான்கள் வந்தன

அதிகாலைக் குளியல்
வெள்ளை அடித்த சுவர்கள்
வீட்டில் கூட்டம்
புத்தாடைகளின் நறுமணம்
அம்மா இடத்தில் அண்ணி.

எல்லாமே
எப்படியோ
சரிக்கட்டப்பட்டு
திரும்பிவிடுகிறது.

ஆனால், நானந்த
முதல் ரம்ஜானை
பத்திரமாய் வைத்திருப்பேன்

ஏனெனில்
அல்லாவை எதிர்த்து
எங்கள் அம்மாவுக்காக
கொண்டாடப்பட்ட அது.

[illegible]புத்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலுக்குப் போவதெங்கே...?





வேறு விலங்கினங்களிடம் இல்லாமல், மனிதனிடம் மட்டுமே உள்ள சிறப்பாக சிரிப்பைக் குறிப்பிடுவதுண்டு. அதுபோல் மனிதனிடம் இல்லாமல் ஏனைய பெரும்பாலான விலங்குகளிடம் உள்ள ஓர் அம்சம் - வால்! மனிதர்களிலும் வால்தனம் உள்ளவர்கள் இருக்கிறார்களே தவிர, வால் உள்ள மனிதர்கள் இல்லை.

மரத்துக்கு மரம் தாவும் நம் மூதாதையரிடமிருந்து நம்மை வேறுபடுத்தும் ஓர் அங்கமும் இந்த வால்தான். பரிணாம வளர்ச்சியில் மனிதனுக்கு வால் அற்றுப்போய், அது இருந்ததற்கான ஒரு முளை போன்ற அடையாளமே நமது முள்ளந்தண்டு முடிவடையுமிடத்தில் இருக்கிறது.

அநேகமான விலங்கினங்களுக்கு ஈ, கொசுக்களை விரட்டுவதற்காக மட்டுமன்றி தம்மைக் காத்துக்கொள்ளும் ஓர் அரிய ஆயுதமாகவும் வால் விளங்குகிறது.



தமது நண்பர்களுக்கு தகவல் பரிமாறும் அன்டெனாவாகவும், உடற் சமநிலையை ஏற்படுத்தும் ஓர் உறுப்பாகவும், சில விலங்கினங்களுக்கு இந்த வால்களே பயன்படுகிறது.

கங்காரு ஓடும்போது அதற்கு அதன் வால் பெருமளவு உதவுவதை அவதானித்திருப்போம். கழுத்து நீண்ட ஒட்டகச் சிவிங்கிக்கு சத்தம் போட முடியாததால், வாலினாலேயே சமிக்ஞை செய்து சகாக்களோடு பேசிக் கொள்கிறது.



மழைக்கால இருட்டானாலும் மந்தி கொப்பிழக்கத் தாவாது என்று கூறுகிறார்களே... அந்தப் பாய்ச்சலுக்கு அதற்கு உதவுவது வால்தான்.

முதலை, கபறகொயா போன்றவை தம் வாலை இரண்டு பக்கமும் அசைப்பதன் மூலம் நீரிலும் நிலத்திலும் உலாவுகின்றன. அணில்கூட தன் உடற் சமநிலையை வாலின் மூலமே பேணுகிறது. பல்லியின் உடைந்து போன வால் சில நேரம் தனியாகத் துடிப்பதை நாம் கண்டிருக்கிறோம். இது ஏனைய எதிரிகளிடமிருந்து தற்காத்துக் கொள்வதற்காக இயற்கையாகவே உருவாக்கப்பட்ட ஒரு ஏற்பாடு.

பல்லிக்கு ஏதும் அபாயம் ஏற்பட்டால் உடனடியாக வாலைத் துண்டித்துக் கொண்டு தப்பியோடிவிடும். ஆடும் வால் பல்லிதான் என்று நினைத்து எதிரி தனது கவனத்தை வாலின் பக்கமே செலுத்தும்.

வாலைத் துண்டித்துக் கொண்ட பல்லிக்கு மூன்று நாட்களில் மீண்டும் வால் முளைத்து விடும். ஓணான்களும் பல்லிகளைப் போலவே எதிரிகளிடமிருந்து தப்பிக்க வாலைக் கழற்றிவிட்டு ஓடிவிடும்.

சில எலிகளுக்கு வாலைப் போர்த்தி ஒரு போர்வை இருக்கும். எங்காவது வால் சிக்கி ஆபத்தில் மாட்டிக்கொண்டால் உடனடியாக போர்வைக் கழற்றி விட்டு எலி தப்பியோடிவிடும்.

கலிபோர்னியாவில் இருக்கும் ஒரு வகையான எலி பாம்பைக் கண்டால் தமது ஏனைய நண்பர்களுக்கு பாம்பு இருக்கும் தூரத்தையும், எதிர்த்துத் தாக்கலாமா? அல்லது தப்பி ஓடி விடலாமா என்பதை வாலாலேயே காட்டிவிடுகிறது.

ஆசியக் கண்டத்தில் சில நாடுகளிலும் ஆபிரிக்கக் காடுகளிலும் இருக்கும் 'பென்கோலின்' என்ற மிருகம் தன் வாலைப் பயன்படுத்தும் விதம் ஆச்சரியமானது. மரங்களிலிருக்கும் சிறு பூச்சிகளையும், வண்டுகளையும் பிடிப்பதற்காக அருகிலுள்ள மரக் கிளையில் தன் வாலில் இறுகச் சுற்றிக் கொண்டு பின்காலை ஊன்றி டார்ஸன் போல் பாய்ந்து சென்று தலைகீழாக நின்று வண்டுகளைப் பிடிக்கும். சாகசப் பிரியர்கள்.

சில பாம்புகளின் வால் பிரதேசமே மிகவும் உறுதியாக இருக்கும். சில நேரங்களில் மனிதனைச் சுற்றி வாலாலேயே அடித்து விடும். முதலைகளும் இவ்வாறே வாலால் எதிரிகளைத் தாக்கக் கூடியது.

அப்பாடா! மிருக வால்களுக்கு இப்படியெல்லாம் அற்புதங்கள் செய்ய முடியுமா? நமக்கும் ஒரு வால் இருந்தால் நன்றாயிருந்திருக்குமோ...? •

**கூடிக் குடித்துக் குதித்தாலும், கோபுரத்தில்
ஏறத் தெரியாமல் ஏணி வைத்துச் சென்றாலும்,
வேறெதைச் செய்தாலும், வேகமுறப் பாய்வதிலே
வானரர்போ லாவாரோ? வாலுக்குப் போவதெங்கே?**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கும் எதிலும் கலப்படம்

- பதி - யுஸ் - ஸமான்

இன்று பொருளாதாரப் பிரச்சினை விஸ்வருபம் எடுத்தாடுகின்றது என்று கலங்குகின்றோம். வாழ்க்கைச் செலவு விஷம்போல் ஏறுகிறது என்று குலுங்குகின்றோம். பணத்திற்கு பெறுமதியே இல்லாமல் போய்விட்டது என்று சிணுங்குகின்றோம்.

ஆனால் இவை எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு செல்லக்கூடிய உள்ளே மறைந்திருந்து கொண்டு மனிதனை மரணத்திற்குக் கூட்டிச் செல்லக் கூடிய ஒரு பிரச்சினை பற்றி கலங்காமல் கவலைப்படாமலேயே இருக்கிறோம் என்றால் ஆச்சரியம்தான்.

அதுதான் கலப்படம்.

தங்கத்தில் பித்தளையை கலக்கிறார்கள். பட்டுத் துணியில் பருத்தியை கலந்து விடுகிறார்கள்.

ஆனால் இன்று எதிலே எதைக் கலக்க வேண்டும் என்ற விவஸ்தையே இல்லாமல் எதிலும் எதையும் கலக்கலாம் என்று கச்சைக்கட்டிக் கொண்டிருகிறார்கள் கலக்கல் பேர்வழிகள். இதுதான் ஆபத்து.

தர்மம், மனிதாபிமானம் என்பன பற்றி எந்த அக்கறையும் காட்டுகிறார்கள் இல்லை என்பதும் ஆச்சரியமானது.



வீட்டில் வாங்கிக் காயவைத்து சிரமப்படுவானேன் என்ற எண்ணத்தில் வாங்குகின்ற மிளகாய், மல்லி, சரக்குத் தூள்களில் கோதுமை மாவு, தவிடு, புண்ணாக்குத்தூள் அதைவிட மரத் தூளையும் கலந்துவிடுகின்றார்கள் இந்த புண்ணியவான்கள்.



அழகாக பெக்கட் பண்ணப்பட்ட பெட்டிகளில் வரும் தேயிலை, தேயிலைத் தொழிற்சாலைகளில் தள்ளிக் கழிக்கப்பட்ட கழிவுத் தேயிலையையும் தூசியுமே. அதோடு பாவிக்கப்பட்ட தேயிலையையும் கலந்து செயற்கை நிறமூட்டிகளைப் பாவித்த செயற்கைத் தேயிலைத்தூளே. அதற்கு வனிலா வாசனை கலக்கப்படுவதால் வனிலா டீ குடித்தோம் என்று நாமும் பெருமை பட்டுக் கொள்கிறோம்.

கோப்பியை வீட்டில் இடித்த காலமும் மறந்துவிட்டது. கடையில் வாங்கிக் குடித்துப் பார்த்தால் அதில் 80% வறுக்கப்பட்ட நிலக்கடலை, சோயா மற்றும் அரிசிமாவே.

மஞ்சள் தூள் என்று எமக்கு கிடைப்பது கோதுமை மாவுக்கு மஞ்சள் நிறமூட்டிய செயற்கை மஞ்சள் தூளே. இதனைக் கொண்டு கறி சமைத்த உண்டால் இருமி, இருமி இருக்க வேண்டிதுதான். அல்லது ஒரே சொறிச்சலாக இருக்கும்.

இரசாயன பரிசோதனைகளின் போது இவ்வாறு மஞ்சளுக்கு பயன்படுத்தப்படும் நிறமூட்டி 'மெட்டனில் யெயோ' என்ற ஆடைக் கைத்தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் நிறமூட்டியாகும். இது புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியது என்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நல்லெண்ணைய் - குளிர்ச்சியானது. பரம்பரை பரம்பரையாக பாவித்து வருவது என்று பெருமிதத்தோடு நாம் பாவிக்கும் நல்லெண்ணெய்யில் கலக்கப்பட்டிருப்பது தேங்காயெண்ணெய்யைத் தான்.

அதுவும் நல்ல தேங்காய் எண்ணெய் அல்ல. சாப்பிடுவதற்குப் பொருத்தமற்ற தேங்காயெண்ணெய்யே. குளிர்சாதனப் பெட்டியில் அல்லது குளிர்ந்த நீரில் வைத்தால் இந்த மோசடியைக் கண்டுபிடித்துவிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தேங்காயெண்ணெய்யைப் போல நல்லெண்ணெய் உறைந்து விடாது.

இதற்கு மேலதிகமாக பருத்திக் கொட்டை எண்ணெய், பெரபின் எண்ணெய் போன்றனவும் கலக்கப்படுகின்றது.

பெரிய பொக்கிஷமாகக் கருதி வாங்கிச் செல்லும் நெய்யில் கூட பெரபின் மெழுகை அல்லது மாட்டுக் கொழுப்பை, பன்றிக் கொழுப்பைக் கூட கலந்து விடுகிறார்கள். பாம் எண்ணெய்யையும் கூட.இந்த கலக்கல் பேர்வழிகள் பச்சிளம் குழந்தைகளையம் விட்டு வைக்கிறார்களா? வயிற்று வலியால் துடிக்கும் போது அரரூட் மா கொண்டு கஞ்சி தயாரித்து கொடுப்பது ஒரு கைகண்ட மருந்து. ஆனால் இதில் கூட சோள மாவையும் மரவள்ளி மாவையும் கலந்துவிடுகிறார்கள்.

சில வினாகிரி போத்தல் லேபல்களில் அழகாக தென்னை மரத்தின் படம் ஒன்றையும் கலர் கலராக கண்ணைக் கவரும் வகையில் அச்சிட்டிப்பார்கள். ஆனால் அவை கூட செயற்கை வினாகிரியே. இரசாயனத் திரவங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டவையே இவை.



மிளகாய்த் தூளுக்கு செங்கல் தூளை கலந்துவிடுகின்றனர். நிறத்திற்கு நிறம். பாரத்திற்கு பாரம். இலாபத்தைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?

காய்ந்த மிளகுடன் காய்ந்த பப்பாளி விதைகளை கலந்து விற்கப்படுகின்றன.

வண்ண வண்ண பழச்சாறு பெக்கட்டுகள் என்றால் பாடசாலைச் சிறுவர்களுக்கு உயிர்தான். இதற்காக பெற்றோர் 'பொக்கட் மணி' கொடுக்காவிட்டால் அவர்களிடமே பிற்பொக்கட் அடித்துக் கொண்டு வந்துவிடுவார்கள் வாண்டுப் பயல்கள்.

பாடசாலைக்கு வெளியே வீதியோரங்களில் மட்டுமல்லாமல் பாடசாலை கெண்டீன்களிலும் இவை விற்கப்படுகின்றன. இவற்றில் அடங்கியுள்ள கண்ணைப் பறிக்கம் வர்ணங்கள் துணிகளுக்குப் பயன்படுத்தப்படுபவை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த பெக்கட்டுகளில் இருப்பது நீர், சீனி, நிறமூட்டி, மணமூட்டி என்பனவே. அதில் கூறப்படும் பழக்கலவையோ, மாங்காயோ, அன்னாசியோ துளியும் அடங்கியில்லை. சீனிக்குப் பதிலாக சர்க்கரீனைப் பயன்படுத்துகிறார்கள். சர்க்கரீன் என்பது சீனையைப் போல 500 மடங்கு இனிப்பானது. 500 கரண்டி சீனிக்கு பதில் ஒரு கரண்டி சர்க்கரீன் போதுமானது.

இந்த சர்க்கரீன் அதிகளவில் உடலுக்குள் சேர்ந்தால் எலும்புகள் இற்றுப் போகும். அல்லது கரைந்து போகும் ஆபத்து உண்டு.

பானங்களைப் பொருத்தவரையில் சர்க்கரீன் பத்து இலட்சத்தில் 80 பங்கு மட்டு மே. ஆனால் இந்த கலக்கல் மன்னர்கள் நூற்றுக்கு நூறு வீதம் சர்க்கரீனைக் கலந்துவிடுகிறார்கள்.

வாந்தி பேதி காலங்களில் இவ்வாறான ஐஸ் பெக்கட்டுகளுக்கே முதலில் தடை விதிப்பதன் காரணம் இவற்றிலேயே வாந்திபேதி ஏற்படும் அபாயம் அதிகம் என்பதாலேயே.

மருந்துக்கும் நல்ல தேன் வாங்க முடியாது. நோயாளிகள் திண்டாடுகிறார்கள். ஆயுர்வேத மருந்துகளுக்கு தேன் மிக முக்கியமானது. தேனிலும் சீனி, வேறும் பாணிகளைக் கலந்து விடுகின்றனர். ஒரு பத்திரிகையாளர் தம்பன்னாவுக்குச் சென்றபோது வேடர்களிடம் தேன் வாங்கியிருக்கின்றார். அதில் கூட கலப்படம் என்பதுதான் ஆச்சரியம்.

நாட்டுக்கோழி முட்டையே நல்லது. சத்து மிக்கது என்ற ஒரு அபிப்பிராயம் மக்களிடம் மாறாமலேயே இருக்கின்றது. இதற்காக வெள்ளை முட்டைகளை தேயிலைச் சாயத்தில் ஊறவைத்து சிவப்பு முட்டை என்று விற்றுவிடுகின்றார்கள்.

தரமான குடிவகைகள் விற்கப்படும் கடைகள் சந்திக்கு சந்தி வந்துள்ளபோதும் இன்னும் கள்ளச் சாராயத்தின் மவுசு குறையவேயில்லை. ஆனால் பழுதடைந்த விஷமான கருப்பட்டி, ஈச்சம்பழம் மட்டுமல்ல யூரியா போன்ற பசளை வகைகளையும் கலந்து அதனைத் தயாரிக்கிறார்கள். இதனால் ஏற்படும் மரணங்கள் பற்றி அடிக்கடி பத்திரிகைகளில் காண்கிறோம்.



அண்மைக் காலத்தில் மீன்களும் கெடாமல் பல நாட்களுக்கு புத்தம் புதிய மீனைப் போலவே காட்சியளிப்பதற்காக செத்த உடல்கள் அழுகாமல் இருப்பதற்குப் பயன்படுத்தப்படும் போமலின் என்ற இரசாயன சேர்வை பயன்படுத்தப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இன்று சிறப்பு வைத்திய நிபுணர்களாலேயே கண்டுபிடிக்க முடியாத புதுப்புது நோய்களுக்கு இவ்வாறு உணவுப் பொருட்களில் கலப்படம் செய்யப்படுவதே காரணம் என்று வைத்திய நிபுணர்கள் கவலை தெரிவிக்கின்றனர். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறக்கும் தட்டு

கே. பாலமுருகன்




நள்ளிரவு....

மொட்டை மாடியில் படுத்து வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் கிழவர் த்ரோன்!

வானத்தில் கண்சிமிட்டும் நட்சத்திரங்களைப் பார்த்து நட்புடன் புன்னகைத்தார். அவருக்கு எப்போதுமே விண்ணியல் மீது அளவில்லாத காதல் உண்டு.

எத்தனை பெரிய பிரபஞ்சம்... எத்தனை பெரிய சூரியன்கள்... அதைச் சுற்றும் கோடானுகோடி கிரகங்கள்... அதில் நம்மைப் போன்ற ஜீவராசிகள் வாழும் கிரகங்கள் நாலாயிரத்துக்கும் மேல் இருக்குமாமே... இறைவனே! உன்னுடைய படைப்புகளைப் புரிந்து கொள்கிற சக்தியைக் கொடுக்காவிட்டாலும் அதை-யெல்லாம் கற்பனை செய்து பார்க்கும் திறனையாவது கொடு!

எதை எதையோ நினைத்துக் கொண்டு படுத்திருந்தவரின் கண்கள் படபடத்தன. அது என்ன வானில்....? ஆச்சரியத்தோடு உற்றுப் பார்த்தார்.

வானில் ஒரு புள்ளிபோல சலனம் தோன்றி கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாகி, ஒரு வித்தியாசமான விண்கலமாகக் கச்சிதமாக த்ரோனின் மொட்டைமாடியில் வந்து இறங்கியது.

நடப்பதெல்லம் என்ன நிஜம்தானா அல்லது கனவா...?

த்ரோனின் உள்ளத்தில் திகிலும் த்ரில்லும் சம விகிதத்தில் பீரிட்டன. 'கீழே போய்விடலாமா?' என்று யோசித்தவர், 'என்ன தான் நடக்கிறது, பார்ப்போமே...' என்று அப்படியே கிடந்தார்.

அந்த விண்கலத்திலிருந்து விசித்திரமான உருவங்கள் இறங்கின. அப்பப்பா... என்ன பயங்கரம்...? இதுபோன்ற உரு வங்களை அவர் இதுவரை கற்பனை செய்துகூட பார்த்த தில்லை.

அந்த உருவங்கள் மெல்ல அவரை நோக்கி வந்தன. ஏதேதோ பேசின.

த்ரோன் கிழவருக்கு அவை அல்லது அவர்கள் பேசிய மொழி புரியவில்லை. 'அயல்கிரக ஜீவராசிகள் ஏதோ விநோத மாகச் சத்தமிடுகின்றன. அடுத்து என்ன செய்யப் போகிறதோ?' என்று எண்ணி, மிகவும் பயந்தவராக ஒடுங்கிப் போய்க் கிடந்தார்.

அவை அல்லது அவர்கள் ஆங்கிலத்தில் பேசியதன் சராம்சம் இதுதான்...

"பூமி என்ற கிரகத்திலிருந்து வருகிறோம். நாங்கள் மனிதர் கள் என்னும் ஜீவராசிகள். அதைப் போல உங்களைப் பற்றியும் உங்கள் கிரகத்தைப் பற்றியும் எங்களுக்கு விளக்கிச் சொல்ல முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மில்லேனிய ஒலிம்பிக்



மில்லேனிய ஆண்டில் நடைபெறவிருக்கும் பெரும் நிகழ்வுகளுள் ஒன்றாக ஒலிம்பிக் போட்டிகள் அமையவிருக்கின்றன. இந்த ஆண்டு செப்டெம்பர் 15ல் அவுஸ்திரேலிய நகரான சிட்னியில் கோலாகாலமாகத் துவங்கவிருக்கும் 27வது ஒலிம்பிக் போட்டிக்கான ஆரம்ப ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகிவிட்டன.

மிகப் பிரமாண்டமான மில்லேனியச் சாதனையாக இதை நடாத்துவதற்குத் தீர்மானித்திருக்கும் அவுஸ்திரேலிய அரசாங்கம், பல நூறு மில்லியன்களை அள்ளி வீசி ஒலிம்பிக் அரங்குகளை அழகு படுத்தியுள்ளது.

சுமார் 2000 பேர் வேலைக்கமர்த்தப்பட்டு கச்சிதமாக முடிக்கப்பட்ட மைதானங்கள் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு தயார் நிலையில் உள்ளன.

செம்டம்பர் 15ம் திகதி முதல் ஒக்டோபர் 1ம் திகதி வரை நடக்கவிருக்கும் போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் முன்னைய போட்டிகளைப் போலல்லாது இம்முறை ஒலிம்பிக் அரங்கோடு சேர்ந்துள்ள ஒலிம்பிக் கிராமத்திலிருந்தே போட்டிக்காகச் செல்வர்.

போட்டியாளர்கள் தங்குவதற்கென்றே அமைக்கப்பட்டுள்ள "ஒலிம்பிக் கிராமம்" முழுக்கவும் சூரிய வெளிச்சத்தில் இயங்கும் ஒரு மின்சாரக் கிராமமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. போட்டியாளர்கள் போட்டி நடக்குமிடத்துக்கு ஒன்றிரண்டு நிமிடங்களில் சென்று விடலாம். மைதானத்தை அண்டி அக்கிராமம் அமைக்கப்பட்டிருக்கிறது.

போட்டியில் பங்குபற்றவும், ஏற்பாட்டாளர்களாகவும் வரும் 15,000 பேர் இக்கிராமத்தில் தங்குவதற்கு முடியும்.

ஒலிம்பிக் பிரதான அரங்கு சிட்னியிலிருந்து 15 மைல்களுக்கு அப்பாலுள்ள ஹோம்பஷ்பே (Homebush Bay) இல் அமைந்துள்ளது. 110,000 பல்வர்ண இருக்கைகளைக் கொண்ட இவ்வரங்கு சுமார் 600 மில்லியன் டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

"அரீனா அரங்கு" 18,000 இருக்கைகளோடு அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வரங்கில் கூடைப்பந்து, கரப் பந்து, குத்துச்சண்டை, ஜூடோ, பாரம் தூக்குதல் போன்ற போட்டிகள் நடைபெறும்.

12,500 இருக்கைகளோடு நீச்சல் தடாகத்துக்குரிய அரங்கு அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் நான்கு இலட்சம் மக்கள் இருக்கும் சிட்னி நகர் மிகவும் பாதுகாப்பான நகரம் என பேர் பெற்றது.

இது இப்படியிருக்க, இதுவரையில் சுமார் 32 லட்சம் டிக்கட்டுகள் விற்கப்பட்டுவிட்டதாக ஒலிம்பிக் கமிட்டி கூறுகிறது. இன்னும் 20 லட்சம் டிக்கட்டுகள் விற்கப்பட வேண்டியிருக்கின்றனவாம்.

19 இலட்சம் டிக்கட்டுகள் அவுஸ்திரேலியாவில் விற்கப்பட்டிருக்கின்றன. அவுஸ்திரேலியாவுக்கு மட்டும் இன்னும் 50 லட்சம் டிக்கட்டுக்கள் தேவைப்படலாம் எனக் கூறப்படுகிறது.

ஒலிம்பிக் தீபம் எடுத்துக் கொண்டு ஓடும் நிகழ்ச்சி ஜூன் 8ம் திகதி ஆரம்பமானது. ஒலிம்பிக் தீபத்தை எடுத்துக்கொண்டு அவுஸ்திரேலியா முழுக்கவும் 1000 நகரங்களைக் கடந்து 100 நாட்கள் ஓட வேண்டும். இந்நிகழ்வில் 11,000 பேர் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் 2500 பேர் பாடசாலைச் சிறுவர்கள்.

1896 முதல் 1996 வரை நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்காவே அதி கூடுதலான பதக்கங்களைப் பெற்ற நாடு. அமெரிக்கா பெற்ற மொத்தப் பதக்கங்கள் 1998. இவற்றுள் 821 தங்கப் பதக்கங்களும் 629 வெள்ளிப் பதக்கங்களும், 548 வெண்கலப் பதக்கங்களும் அடங்கும். இரண்டாவது அதிகூடிய பதக்கங்களைப் பெற்றுள்ள நாடு ரஷ்யா. இது 395 தங்கப் பதக்கங்களையும், 319 வெள்ளிப் பதக்கங்களையும், 269 வெண்கலப்பதக்கங்களையும் பெற்று மொத்தமாக 1010 பதக்கங்களையும் பெற்றிருக்கிறது.



அவுஸ்திரேலியா பதக்கங்களைப் பெற்றுள்ள வரிசையில் 35 வது இடத்தில் இருக்கிறது. 26 போட்டிகளிலும் அவுஸ்திரேலியா பெற்றுள்ள பதக்கங்களின் எண்ணிக்கை 75 ஆகும்.

1984 முதல் 96 வரையான காலப்பகுதியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் சாம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுள் அமெரிக்காவைச் சேர்ந்த கார்ல் லூயிஸ், 100 மீற்றர், 200 மீற்றர், 4X100 போட்டிகளில் தங்கப் பதக்கங்களைப் பெற்று சாம்பியன் பட்டத்தோடு இருக்கிறார்.

அமெரிக்காவைச் சேர்ந்த எட்மோஸஸ், ஜேர்மனியைச் சேர்ந்த மைக்கல் க்ரொஸ், துருக்கியைச் சேர்ந்த நயிம் சுலைமன்கொலு, அமெரிக்காவின் மைக்கல் ஜோன்சன் போன்றவர்கள் பல்வேறு துறைகளிலும் பிரகாசித்து ஒலிம்பிக் சாம்பியன் பட்டத்தோடு இருப்பவர்கள்.

இம்முறை ரஷ்யாவிலிருந்து பங்குபற்றும் ஒலிம்பிக் வீரர்கள் தங்கப் பதக்கம் பெறும் பட்சத்தில் தங்கம் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் தலா 10,000 அமெரிக்க டாலர்களைப் பரிசாக வழங்கப் போவதாக ரஷ்யா அரசு அறிவித்துள்ளது. அமெரிக்காவை வீழ்த்துவதே ரஷ்யாவின் குறிக்கோளாக இருக்கிறது.

நமது நாட்டிலும் அவ்வாறான ஊக்குவிப்புக்களைக் கொடுத்தால் நமது வீரர்களும் முயற்சி செய்யாமலா இருப்பார்கள். கிரிக்கெட்டுக்கு மட்டும்தானா ஊக்குவிப்புகள் எல்லாம்?

ஒலிம்பிக் பற்றிய மேலும் பல சுவையான தகவல்களோடும் படங்களோடும் இனிவரும் இதழ்களில் சந்திப்போம். •

**- எஸ். எஃப். ஷாமிலா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயகன் போகும் இடம் நல்ல இடமாக இருக்கட்டும்...




உலக கிரிக்கட் விமரிசகர்களால் 'கப்டன் கூல்' என செல்லமாக அழைக்கப்பட்ட அனுபவமிக்க அணித் தலைவரும் சிறந்த துடுப்பாட்ட வீரருமான அர்ஜுன ரணதுங்க கிரிக்கெட் உலகிலிருந்து பிரியாவிடை பெற்றுவிட்டார்.

தாய்த் திருநாட்டின் புகழ் உலகெங்கும் பரவுவதற்கு காரணமாயிருந்தவர். உலகக் கிண்ணத்தை சுமந்து வந்தவர். திறமையான இளம் கிரிக்கெட் வீரர்களை ஊக்குவித்தவர். ஆளுமையும் சகலரையும் அரவணைத்துச் செல்லும் வசீகரத் தன்மையும் கொண்டிருந்தவர் என விமர்சகர்களால் புகழாரம் சூட்டப்பட்டவர். இன்று தனது உயரிய பணிக்கு, கிரிக்கெட் உலகுக்கு டாட்டா காட்டி விட்டார்.




இலங்கை கிரிக்கெட் அணியின் பல்வேறு வெற்றிகளுக்கும், சாதனைகளுக்கும் களம் அமைத்த எஸ். எஸ். சி. அரங்கில் அவர் பிரியாவிடை பெற்றார். தமது கிரிக்கெட் அணிக்கு உத்வேகத்தையும், ஊக்கத்தையும் வெற்றிகளையும் சாதனைகளையும் பெற்றுத்தந்த மகிழ்ச்சியிலும் பெருமிதத்துடனும் விடைபெறுகிறார் அர்ஜுன.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அனுபவமிக்க மூத்த கிரிக்கெட் வீரர் அவர். அலட்டிக் கொள்ளாத, வெற்றிகளின்போது இறுமாப்புக்கொள்ளாத அவரின் போக்கு அலாதியானது. எந்தச் சந்தர்ப்பத்திலும் அணி வீரர்களிலேயே கண்ணாக இருக்கும் அவர் மைதான ஒழுங்குகளை மேற்கொள்வதில் சிறந்து விளங்கினார்.

உலகக் கிண்ணத்தை இலங்கை அணி சுவீகரிப்பதற்குக் காலாக இருந்த இந்த நாயகன் உள்நாட்டு கிரிக்கெட் வளர்ச்சியில் பெரும் பங்காற்றினார். உள்நாட்டு, சர்வதேச ரசிகர்களின் மனதில் நீங்கா இடத்தைப் பெற்றார்.

வழிநடத்துவதில் தனிப்பட்ட முடிவுகளை எடுக்கப்போய் கட்டுப்பாட்டுச்சபையுடன் முரண்பட்ட நிலையில் அணித்தலைமையிலிருந்தும் அணியிலிருந்தும் நீக்கப்பட்டார்.

சபையின் முடிவையடுத்து மீண்டும் டெஸ்ட் களத்தில் பிரவேசித்து, பல்வேறு வெற்றிகளுக்கும் களமமைத்த நிலையில் பிரியாவிடை பெற்றுள்ளார்.

17-02-1982ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் மறக்கமுடியாத தினம். டெஸ்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தஸ்து கிடைக்கப்பெற்று கன்னி டெஸ்ட் இத்தினத்தில் பீ. சரவணமுத்து அரங்கில் இடம்பெற்றபோது, 18 வயது பாடசாலை மாணவனாக அணிக்குள் இடம்பிடித்து, முதல் டெஸ்ட்டிலேயே தனது முதலாவது அரைச் சதத்தையும் பூர்த்தி செய்து, எதிர்கால நாயக அந்தஸ்திற்கான கால்கோளை சிறப்பான முறையில் இட்டார்.

கன்னி டெஸ்ட்டில் பங்கேற்று 18 வருடங்கள் கழிந்த நிலையிலும், சிறப்பாகத் துடுப்பெடுத்தாடும் நமது கதாநாயகன் ஜுலை 19 ஆம் திகதி எடுத்த திடீர் முடிவு ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

கட்டுப்பாட்டுச்சபைக்கு கடிதமெழுதி தனது முடிவை அறிவித்த அவர் கடந்த 10 ஆம் திகதி கிரிக்கெட் போட்டிகளிலிருந்து நிரந்தரமாக விடைபெற்றார்.

1989-90 காலப்பகுதியில் ரஞ்சன் மடுகல்லவிடமிருந்து தலைமைப் பதவியை பொறுப்பேற்ற அர்ஜுன. இலங்கை சார்பாக அதிகூடிய ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் டெஸ்ட் போட்டிகளிலும் தலைமை தாங்கிப் பெருமை சேர்த்துள்ளார்.



தலைமையின் ஆரம்பத்தில் தொடர்ச்சியான தோல்விகள் அதன் பின் தலைமைக்கு எதிராகக் கிளம்பிய சவால்கள், அரசியல் தலையீடுகளால் 1993ம் ஆண்டு சார்ஜா கிரிக்கெட் தொடரின்போது தலைமைப் பதவியைத் துறந்தார்.

எனினும் அதன் பின் இலங்கை அணி எதிர்கொண்ட மோசமான தோல்விகள் பிழையான தலைமைத்துவம், சக வீரர்களின் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்ய வேண்டிய நிலையில் கட்டுப்பாட்டுச் சபையின் வேண்டுகோளின் பேரில் மீண்டும் அணித் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

தென்னாபிரிக்க அணியுடனான மூன்று டெஸ்ட் ஆட்டங்களையும் சேர்த்து இதுவரை 94 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ள அர்ஜுன ரணதுங்க, இவற்றுள் 56 போட்டிகளுக்குத் தலைமை தாங்கி 12 வெற்றிகளை ஈட்டியுள்ளார். 19 தோல்விகளைச் சந்தித்துள்ளார். டெஸ்ட் போட்டிகளில் ஐயாயிரத்துக்கும் அதிகமான ஓட்டங்களைக் குவித்துள்ள அர்ஜுனவின் துடுப்பாட்ட சராசரி 36 ஆகும்.

இவரின் தலைமையின் கீழ் 1995, 1996 காலப்பகுதியில் பாரிய வெற்றிகள் ஈட்டப்பட்டன. இது இலங்கை வரலாற்றின் பொற்காலம் என்றால் அது மிகையாகாது. 1995ம் ஆண்டு நியுஸிலாந்து சென்ற இலங்கை கிரிக்கெட் அணி அங்கு சிறந்த வெற்றிகளைச் சந்தித்தது. பின் பாகிஸ்தான் சென்றும் வெற்றிக்கொடி நாட்டியது. அதன் பின் உலகக் கிண்ணப்போட்டியில் பங்கேற்று தோல்வியுறாத அணியாக மாறி உலகக் கிண்ணத்தையும் வென்று புகழேணியின் உச்சிக்கே சென்றது. இதுவெல்லாம் அர்ஜுன ரணதுங்கவின் சீரிய தலைமைத்துவத்தால் கிடைக்கப்பெற்றதே.

டெஸ்ட் போட்டிகளில் இது வரை நான்கு சதங்களைப் பூர்த்திசெய்துள்ள அர்ஜுன அதிகூடிய ஓட்டங்களாக 135ஐப் பெற்றுள்ளார். இலங்கை அணிக்காக 269 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடியுள்ள அர்ஜுன 7456 ஓட்டங்களை மொத்தமாகப் பெற்றுள்ளார். அதிகூடிய ஓட்டங்களாக 130ஐப் பெற்றுள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் இவரது சராசரி 35.84 ஆகும். துடுப்பாட்டத்துக்காக ஆடுகளமிறங்கினால் ஒன்று, இரண்டு என ஓட்டங்களைக் குவித்து பவுண்டரிகள், சிக்ஸர்கள் என விளாசி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உச்சாணிக்கு இட்டுச் செல்வதில் அவர் வல்லவர். மைதானத்தில் பந்தை செலுத்திவிட்டு ஆடுகளத்தினுள் நடந்தே ஓட்டத்தைப் பூர்த்திசெய்வதில் அவர் தனி முத்திரை பதித்தார்.




இலங்கையணிக்காக 193 ஒருநாள் போட்டிகளுக்குத் தலைமை தாங்கியுள்ள அர்ஜுன 87 போட்டிகளில் வெற்றி கண்டுள்ளார்.

அத்தோடு பந்து வீச்சிலும் அவரது திறமை மெச்சத்தக்கது. 72 விக்கட்டுக்களை வீழ்த்தியுள்ள அவர், பந்து வீச்சாளர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் பந்து தடுப்பாளர்களைக் கையாளுவதிலும் கைதேர்ந்திருந்தார்.

இலங்கை கிரிக்கெட் அணியைப் பொறுத்தவரை பல்வேறு சாதனைகளுக்கு களமமைத்த இவர் பாகிஸ்தானுடனான அண்மைய டெஸ்ட் போட்டியின் போது 100வது டெஸ்ட் போட்டியில் பங்கேற்ற சாதனை நிகழ்த்தி சர்வதேசப் புகழை ஈட்டிக்கொண்டார்.

18 வயது பாடசாலை மாணவனாக டெஸ்ட் கிரிக்கெட் உலகில் பிரவேசித்த அர்ஜுன 36 வயது வரை போட்டிகளில் பங்கேற்று எந்தவித லஞ்ச ஊழல் விடயங்களிலும் சம்பந்தப்படாது நேர்மையற்ற குற்றமிழைக்கப்பட்டவர் என்ற பெயரையும் பெறாது சிறப்பாகவும் சீராகவும் தனது பணியை பங்களிப்பை வழங்கியுள்ளார்.

தூய்மையான கைகளுடன் அவர் ஓய்வு பெறுவது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் விடயமே.

**- ஸிராஜ் எம். சாஜஹான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிஸ்னா ஒரு வாரமாக ஸ்கூலுக்குப் போகவில்லை. எட்டாம் தரத்தில் அவள் படிக்கிறாள். இதற்கு மேல் பாடசாலை வாழ்க்கை தொடராது என்பதே அவளது எதிப்பார்ப்பு. அதற்கு அவள் 'பெரிய மனிசி'யாகிவிட்டது மட்டும் காரணமல்ல.

"பெரிய படிப்பு படிப்பிக்க எங்களுக்கிட்ட வசதீக்காமகள்" - உம்மா அவளிடம் இப்படிப் பல தடவை சொல்லிவிட்டாள்.

அவளும்தான் என்னவாம்... பெரிய படிப்பார்வம், திறமை-யென்று ஒன்றுமில்லை. எப்போது நின்றுவிடச் சந்தர்ப்பம் கிட்டுமென்றே எதிர்பார்த்திருந்தாள். சந்தர்ப்பம் அவளைத் தேடி வந்துவிட்டது போலும்.

அவள் படிப்பது எட்டு 'பீ' வகுப்பில். அந்த வகுப்பை 'மோட்டு' வகுப்பு என்றே சில பேர் சொல்வார்கள். ஆசிரியர்கள் விரும்பினால் வருவார்கள், வராவிட்டால் யாரும் குறை சொல்லவும் மாட்டார்கள்.

ஃபரீஸா... பாத்திமா... கம்ருன் இப்படி இந்த வருடத்தில் இடைநின்றபவர்கள் பலர். யாராவது இனி வரமாட்டார்களென்று உறுதியாகிவிட்டால் 'ஒரு கரச்சல் கொறஞ்ச' இப்படி சந்தோஷப்படும் சேர்மாரும் இல்லாமலில்லை.

"ரிஸ்னா ரிஸ்னா"

வெளியே கேட்ட குரல் நெருக்கமான குரலாக அவளுக்குப் பட்டது.

"ரிஸ்னா ஒண்ட கூட்டாளிமாரு வார" - உம்மா அதனை உறுதிப்படுத்தினாள்.

அன்று அவள் குளித்து.. புத்தாடையுடன் பௌடர் கமகமக்க நின்றது நல்லதாகப் போயிற்று.

ஓடி வந்து வெளியே பார்த்தாள் ரிஸ்னா.

வகுப்புச் சகபாடிகள் மலீனா... அதவியா... இஸ்ஸத்து ஆகியோர் பரிசுப் பொதியோடு வந்திருந்தனர்.

"உள்ளுக்கு வாங்கொடி"

எல்லோரையும் அழைத்துக்கொண்டு உள்ளே புகுந்தாள் ரிஸ்னா. பெரும்பாலும் அவ்வப்போது வந்து போனவர்கள் தான் அவர்கள்.

"வேருக்கியடி... வெட்டேல ஜாதியாக் காத்துப் படுகிய. ஜேம் மரத்தடீல இருந்துக் கொளோம்."

சிறிது நேரத்தின் பின் மலீனா எல்லோரையும் அழைத்துக் கொண்டு வெளியே வந்தாள். மர நிழலின் கீழ் நீள்பலகை இருக்கை வித்தியாசமாக இருந்தது எல்லோருக்கும். இடையிடையே ஜேம் பழங்களையும் அடித்து... சண்டை பிடித்துச் சாப்பிட்டார்கள்.

உம்மா கோப்பி வேறு பரிமாறினாள்.

"ஸ்கூலுக்கு வாராடீ..." இடையில் அதவியா ஒரு கேள்வியைப் போட்டாள்.

என்ன பதில் வருமென்று எல்லோரும் காதுகளைத் தீட்டிக்கொண்டனர்.

"நானென்டா உடுமெண்டு நம்பியல்ல" நம்பிக்கையீனத்தோடு சொன்னாள் ரிஸ்னா.

"நாங்க படிச்சி டீச்சர் வேலயா எடுக்கப்போற... வேண்டிய மட்டும் ஃபெக்டரீக்கி" இஸ்ஸத்து சிரித்தபடியே சொன்னாள்.

"ஏ... ஜேங்காயெல்லாம் பிச்சீக்கி..."

குர்ஆன் மதரஸாவிலிருந்து வந்ததும் வராததுமாக ரிஸ்னாவின் தம்பி, மரத்தை அண்ணாந்து பார்த்தபடி கத்தினான்.

"போ போ கோப்பியக் குடிச்சிட்டு வா" - தம்பியைச் சமாளித்து உள்ளே அனுப்பினாள் ரிஸ்னா.

"அந்தி படுகிய நாங்க பெய்த்திட்டு வாரடீ"

விடைபெறும் படலம் கலகலப்பாக அமைந்தது.

மீண்டும் வீட்டினுள்ளே போய் அமர்ந்துகொண்டாள் ரிஸ்னா. இந்த ஒரு வாரமாக வீட்டுக்குள் ஒதுங்கியிருந்த இருப்பல்ல அது. மனதுக்குள் ஒரு மெல்லிய சீற்றம் தலையெடுத்தது.

கூட்டாளிகளை வீட்டுக்குள் வைத்து உபசரிக்கும் அளவுக்கு வீடு இல்லையே என்று ங்கினாள். அவள் போய் வந்த வீடுகள் எத்தனை! அங்கெல்லாம் என்னென்ன வசதிகள். யாரிடம் சொல்லி அழலாம்?

இருபது தர இருபது அளவில் செங்கல் சுவர்... ஓலைக் கூரை, பின்சுவரோடு இணைத்து முற்றிலும் ஓலைக் குசுனி... உடைந்தும் உடையாமலும் நாலைந்து கதிரை... மேசை... கட்டில் இத்தியாதி.

பதினைந்து வருடத்துக்கு முன்பு வீட்டு வசதியற்ற நாற்பது பேருக்கு காணியெடுத்து தலைக்கு பதினைந்து பேர்ச் நிலம் ஒதுக்கிக் கொடுத்ததில் கிடைத்த இடம்தான் இது. அப்படியொரு மந்திரி இருந்ததால் அந்தக் குடும்பங்கள் இன்னும் வாழ்ந்து வருகின்றன. சில மாடி வீடாகவும் நிமிர்ந்துவிட்டன.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




"மஃரிபியாகீட்டு புள்ள லாம் பேத்து" வெளியே இருந்து உம்மாவின் குரல்.

உலகமே மின்சாரத்தில் மூழ்கிப்போனாலும் இன்னும் அந்த வீட்டை ஏனோ எட்டிப் பார்க்கவில்லை. ஏதோ நல்ல காலம் வீட்டு வேலியோடு மின் கம்பமொன்று பால் வெளிச்சத்தைப் பாய்ச்சிக் கொண்டிருந்தது.

லாம்புக்கு எண்ணெய் வார்த்து ஒளியேற்றி மேசையில் வைத்தாள் அவள். தம்பியின் நான்காம் தரப் பாடப்புத்தகங்கள் கொப்பிகளெல்லாம் அங்குமிங்குமாக அதே மேசையில்தான்.

"வாப்ப வார வாப்ப வார" விளையாடிக் கொண்டிருந்தவன் ஆரவாரமாக ஓடிவந்தான்.

பகடாச் சுருள் அவன் கைக்கு மாறியது. சின்னப் பிள்ளை போல் இப்பொழுது அவளால் சண்டை பிடிக்க முடியவில்லை. அவன் போடும் பங்கை ஏற்கவேண்டியதுதான்.

ஜாஸிர் நானா இளவயதிலேயே கல்யாணம் கட்டி இள வயதிலேயே 'கொமருகார'னாக மாறிவிட்டார். கொஞ்சம் புராஜல் பேர்வழி. எதையும் சேர்த்துவைக்க வேண்டுமென்று நினைப்பவனல்ல. லரீஃபாவும் என்னவாம். ஜாடிக்கேற்ற மூடிதான். உண்டு உடுத்தி வாழ்ந்தார்கள். ஒருவரையொருவர் விரும்பிக் கல்யாணம் செய்து இன்று வரை சந்தோஷமாக இருப்பதொன்றே போதாதா?

"இந்தாங்கொ"

ஒரு கையில் கோப்பியும் மறு கையில் தண்ணீருமாக வந்தாள் லரீஃபா.

இளைஞனாக இருந்தபோது பலதையும் பத்தையும் செய்து கடைசியில் கடதாசி பேக் வியாபாரியாகத் தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்டான் ஜாஸிர்.

வீடு வீடாகச் சென்று சீமெந்து வெற்றுப் பைகள் தேடிக்கொண்டு வருவான். காலப் போக்கில் வீட்டைத் தேடிப் பைகள் வரத்தொடங்கின. பின்னேரங்களில் பெண்பிள்ளைகள் வந்து ஒட்டு வேலைகள் செய்வார்கள். கவர்ச்சியான கூலி கொடுக்கத் தவறவில்லை. அப்படி வந்து பழகிய ஒருத்திதான் லரீஃபாவும்.

நூற்றுக்கணக்கில் கட்டுக் கட்டாக கடைகளுக்கு விநியோகிக்கத் தொடங்கினான். வியாபாரம் ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறக்கவும்தான் செய்தது. சொப்பிங் பேக் வந்ததும்தான் வந்தது. அவர் வீழ்ந்துவிடவில்லை. அதையும் ஒரு பகுதியாகச் சேர்த்துக்கொண்டு இன்று வரை சைக்கிள் வைத்து தொழிலை நடாத்தி வருகிறார்.

"இவ்வளவு காலத்துக்கும் ஒத்தருக்கிட்டேம் கை நீட்டல்ல. அதுபோதும் எனக்கு" இப்படி இடைக்கிடை பெருமை வேறு பேசிக்கொள்வான்.

"அப்படிச் சொல்லிச் சரி வாரல்ல... பொம்புளப் புள்ளயொண்டு பெருக்கிய... ஊடு வாசலக் கெட்டிக்கொளோணும்... இப்பிடிந்து எல்லாம் செய்யேலுமா" - லரீஃபா ஒரு நாள் இப்படிச் சொல்லிவிட்டாள்.

"இங்க பாருங்கொ... ஒங்கட வாப்ப ஊடுவாசல் கட்டி... சல்லி சாமன் சேத்தியா ஒங்களக் குடுத்த"

என்னதான் சொல்வது... அவள் வாயடைத்துப் போய்விட்டாள். சொல்லாமலும் இருக்க முடியாதே!

"ஒங்கட மகளச் சும்ம கொணுபொக ஒத்தனும் வாரல்ல. நீங்க சும்மெடுத்தது மெய்தான். இந்தக் காலத்துப் பொடியன்மாரு ஒங்களப் போலயா..." அவள் பட்டுக் கத்திரி மாதிரி பேசி நிறுத்தினாள்.

அவன் கலகலவென்று சிரித்தான். அவளும் கூடவே சிரித்தாள். ஒரு சந்தோஷப் பொழுதாக அது கழிந்தது. இப்படி எத்தனை பொழுதுகள்.

இன்று உண்மையிலேயே அவன் ஒரு 'கொமருகாரன்' தான். ஆனால் அதையொன்றும் அவன் பெரிதாக எடுத்ததாகத் தெரியவில்லை.

"ரிஸ்னா... இடியாப்பம் சுட்டு பருப்புக்கறீம் ஆக்கீக்கி... வாப்பக்கு போட்டு வெச்சிட்டு தம்பியக் கூட்டிக்கொண்டு தின்னுங்கொ"

ரிஸ்னா படிப்படியாகப் பழைய நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள். இனி ஸ்கூலுக்குப் போகாமல் விட்டால் பேர்பாதி வேலைகள் அவள் தலையில்தான்.

ரிஸ்னாவும் தம்பியும் குசுனிக்குள் கலகலத்தார்கள்.

"இங்க பாருங்கொ... ரிஸ்னாவ ஸ்கூலுக்கு அனுப்பியா இல்லயா?" கணவனின் அருகில் வந்தமர்ந்து இங்கிதமாகக் கேட்டாள் லரீஃபா.

வியப்போடு பார்த்தான் ஜாஸிர். அவனுக்கு அது ஒரு பிரச்சினையாகவே இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்க சும்ம கொழும்பவாண... அவள் போற மாதிரி பொகட்டும்."

அவள் எதிர்பார்க்கவே இல்லைதான். அவள் மட்டுமென்ன... இதைக் கேள்விப்படும் எவருமே நம்பமாட்டார்கள். அவர்களது வாழ்க்கைக் சூழல் அப்படி.

ரிஸ்னாவும் தம்பியும் சாப்பிட்டுவிட்டு வந்தார்கள். இனியென்ன வேலை? படுப்பதற்கு பாய்களைத் தேடிக்கொண்டிருந்தார்கள்.

"மகள் ஸ்கூலுக்குப். பொக பேக்க ரெடியாக்கி வெச்சிட்டுப் படு. வெளணக்கி ஒழும்பிக்கொண்டு கூத்தடாம"

உம்மாவின் கூற்று அவள் மனதில் மெல்லிய அதிர்வுகளைப் பாய்ச்சியது. என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறினாள்.

"சோதின எடுக்கம் காட்டீம் போ மகள். எனத்த சரி தெரீமாகியதானே... ம்... புள்ளகுட்டிக்கி நாலெழுத்து செல்லிக் குடுக்கவாலும் தெரிஞ்சீக் கோணேன்..."

வாப்பா ஒருவேளை மறுத்துப் பேசுவாரோ என்று எதிர்பார்த்தவளுக்கு பெரிய ஏமாற்றமாக இருந்தது.

"சரியும்மா"

ரிஸ்னா புத்தகம்.. கொப்பி... பேனை... என்று தேடித் தேடி பேக்கைத் தயார்படுத்தினாள். வகுப்புக் கூட்டாளிகளின் முகம்களையெல்லாம் நினைத்து நினைத்துப் பார்த்தாள். கூத்துக்கள்.. கிண்டல்கள்.. விளையாட்டுக்களை இரைமீட்டினாள். என்றும் அவை இனிப்பானவை தான். தன்னை அவள் மீள் தயாரிப்புச் செய்து கொண்டாள்.

வெளியே நாய்கள் குரைத்தன. ஆட்சி கைமாறும் நேரமல்லவா?

"ம்... தின்டிட்டு படுங்கினி" - என்றவாறு எழுந்தாள் லரீ.்பா.

00 00 00

காலை புலர்ந்தது.

சின்னவன் பேக்கரிக்குப் போய்ச் சுடச்சுடப் பாண் கொண்டுவந்துவிட்டான். லரீ.்பா தேங்காய்ச் சம்பல் போட்டு பிள்ளைகளின் சாப்பாட்டுப் பெட்டிகளைத் தயார்படுத்தினாள்.

ரிஸ்னா சிறு இடைவெளிக்குப் பின் புதிய மன உணர்வோடு தயாராகி நின்றாள். எப்பொழுதுமே வீட்டுக்கணித்தான ஒழுங்கைக்குள்ளால் வரும் வகுப்புப் பிள்ளைகளோடு சேர்ந்துதான் ஸ்கூலுக்குப் போவாள். இன்றும் அதற்காகத்தான் காத்திருந்தாள்.

வந்தேவிட்டார்கள். வந்தவர்கள் எதிர்பார்க்கவில்லை ரிஸ்னாவை. வேலி வரைக்கும் வந்து மகள் போவதை பார்த்து நின்றாள் லரீ.்பா. அவள் திரும்ப நினைத்தபோது பின்னால் வந்த கரீமா டீச்சரின் புன்சிரிப்பு அவளைத் தடுத்து நிறுத்தியது.

"ரிஸ்னா இன்டக்கா ஸ்கூலுக்குப் போற"

"ஓ டீச்சர்"

"அதுதான் கண்டொன எனக்கு செரியான சந்தோசம். இந்தக் காலத்தில சோதின எடுக்கம் காட்டீம் சரி புள்ளயள் படிக்காட்டி வேலில்லேன். ஸ்கூலுக்குப் போனா எத்தீன விஷயம் தெரீமாகியன்" - டீச்சரின் மகிழ்ச்சி வெளிப்பாடு.

நல்ல காரியமொன்று சாதித்துவிட்டது போன்ற பூரிப்பு லரீ.்பாவுக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் சிரிப்போடு நின்றாள்

"நான் வாரன்"

"நல்லம் டீச்சர்"

எட்டு மணியாகும்போது பிள்ளைகளெல்லாம் ஸ்கூலுக்குப் போய்ச் சேர்ந்துவிடுவார்கள். அப்பகுதியே அமைதிப் பிரதேசமாக மாறிவிடும். அதைத் தொடர்ந்து தொழில்களுக்கு ஆண்களெல்லாம் புறப்பட்டுவிட்டால், வீட்டுக் காரியங்களை பொம்புளைகள் அமைதியாகச் செய்ய ஆரம்பித்துவிடுவார்கள்.

மகளை அனுப்பிவிட்டு வீட்டுக்குள் வந்தபோது கணவன் இன்னுந்தான் கட்டிலே புரண்டுகொண்டிருந்தது. திடீரென்று அவளை வேறொரு உலகுக்குள் ஈர்த்தது.

வழமையாக சுபஹு தொழுதுவிட்டு வந்தால் சைக்கிளைத் தயார்படுத்தி... பெட்டிகளைக் கட்டி ஒழுங்குபடுத்துவதில் லயித்திருப்பான்.

"எனத்தியன் இண்டக்கி ரெஸ்டெடுக்கியா" - அவள் குதூகலத்தோடு கேட்டாள்.

"ம்... பத்து நாளா ரெஸ் டெடுத்தது போதவா"

அதற்குமேல் என்னதான் புரியவேண்டிக் கிடக்கிறது!

கட்டிலுக்கடியில் கவிழ்த்து வைத்திருந்த பிளாஸ்டிக் பேஸனை எடுத்து, அங்குமிங்குமாகச் சொருகியிருந்த பிள்ளைகளின் உடுப்புக்களை ஒவ்வொன்றாக அதிலே எடுத்துப் போட்டாள்

"பொடவ கொட... குளிக்கப் பொகோணும்" என்றாள் நளினமாக.

"ஓ... குளிக்கப் பொகோணுந்தானே"

எழுந்தவன் மடக்மடக்கென்று தண்ணீரை வார்த்துப் பருகினான். கதவண்டை வந்து அங்குமிங்குமாக வெளியே பார்த்துவிட்டு மெல்லக் கதவைப் பூட்டினான்.

தெரு விளக்கின் வெளிச்சம் இரவில் வீட்டுக்குள் பரவி நிற்கும். அதைவிட இப்போது இருட்டாக இருந்தது.

"லரீ.்பா..."
"ம்...."

"ரிஸ்னாவ ஸ்கூலுக்கு அனுப்பாம நிப்பாட்டினா.. இருவத்துநாலு மணித்தியாலமும் அவள் ஊட்டுக்குள்ளதானே நிப்பாள்"
"ம்..."
"நல்ல வசதியா காம்பரா காம்பரா கெட்டிப்போட்ட ஊடா இது"
"ம்..."
லரீ.்பாவுக்கு இப்பொழுது நூறு வீதமாக எல்லாம் புரிந்துவிட்டது.
"லரீ.்பா"
"ம்..."
அவள் அவனது கைக்குள் சுருண்டுபோய்க் கிடந்தாள். •

## அம்மா... அம்மா...

**சவரத்தின் பின்
குளிரச் செய்யும்
படிகாரமாய்**

**தொலைந்து போன
இளம் பிராயமாய்**

**சிட்டாட்டத்தின்
கோமாளியாய்**

**குருவி கொத்தும்
முதுகின் எருதாய்**

**கணவன் பிள்ளைக்காய்
குணம் மாறும் பச்சோந்தியாய்**

**நெருஞ்சாலையின்
'பஞ்சர்' கடையாய்**

**சிகரெட் முனையின்
ஃபில்டராய்**

**கருணைக் கொலைக்குத்
துணியும் மனமாய்**

**நினைவுகளின்
கரையாய்**

**என் தாய்!**

**- நாசர்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "கொலைக்கான நியாயங்களைச் சொல்ல எழுதுகிறவன் தேவையில்லை"

மனித உரிமைக்கு எப்போதும் இரண்டு பக்கங்கள் உண்டு. மனித உரிமையை மதிப்பது என்பது ஒரு புதிய அறவியல்பு கொண்ட சமூகத்தை உருவாக்குவதோடு தொடர்புள்ளது. மாற்றுக் கருத்தாளர்கள் மாற்று வாழ்க்கைப் போக்கு கொண்டோரை மட்டுமல்ல மிக முக்கியமாக கலைஞர்களையும் புத்திஜீவிகளையும் சகிப்புத் தன்மையுடன் அணுகுகின்ற ஒரு கலாசாரம் உருவாக வேண்டும். ஏனெனில் எந்தவிதமான சமரசமுமின்றி சார்புத் தன்மைகளை மீறி அவர்களால்தான் பேச முடிகிறது.

விடுதலையின் பெயரில் விடுதலை அமைப்புக்கள் மேற்கொள்கிற சித்திரவதைகளும் வெகுமக்கள் கொலைகளும் கலைஞர்களின், புத்திஜீவிகளின் மீதான வன்முறையும் நிறுத்தப்பட வேண்டும். இவையெல்லாம் சோசலிசத்தின் வீழ்ச்சியும் புரட்சிக்குப் பின்னான சமூகங்களும் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கும் பாடங்கள்....

புதிய சமூகத்தை உருவாக்கப் புறப்பட்ட கருத்தியல்கள் சித்திரவதையும் மனித உரிமை மீறல்களும் அதிகார வர்க்கங்களும் கொண்ட சமூகங்களாக ஆகியிருப்பதை வரலாறு நிரூபித்திருக்கிறது....

மேலும் வெகுமக்கள் மீதான வன்முறைக்கும் நிராதரவான மக்கள் மீதான அரசுக் கொலைகளுக்கும் எதிராகப் போராடப் புறப்பட்ட இயக்கங்களே அம்மக்கள் மீது அதே மனித உரிமை மீறல்களைத் திணிப்பது விடுதலையின் பாற்பட்டதில்லை.

மரணதண்டனை எதிர்ப்பில் உள்ள தார்மீக அம்சங்கள் அனைத்து மனிதர்க்கும் பொதுவானவை. மிக மோசமான பாலியல் பலாத்காரம் மேற்கொள்கிறவனுக்கும் குழந்தைக் கொலைகளை மேற்கொள்கிறவனுக்கும் நாம் உயிர்வாழ்தலின் மகத்துவம் குறித்துப் பேச முடியுமானால் ஏன் ஒரு கலைஞனுக்கும் அரசியல் விமர்சகனுக்கும் மாற்றுக் கருத்தாளனுக்கும் அதை மறுக்க வேண்டும்? அவன் மீது ஏன் மரணத்தையும் வன்முறைகளையும் சுமத்த வேண்டும்? எதிரியென்று நினைக்கிறவர்களின் வயதான எல்லைப்புறத் தாய்மார்களையும் பெண்களையும் குழந்தைகளையும் ஏன் வெட்டிக் குவிக்க வேண்டும்? வர்க்க எதிரியை ஏன் கண்டதுண்டமாக வெட்டிக் கறியாக்கி வெறியாட்டமாட வேண்டும்?

சில புரட்சிகர அமைப்பைச் சார்ந்தவர்கள் தாம் சமத்துவமற்ற இந்தச் சமூக அமைப்பை மாற்றுவதற்குப் போராடிக் கொண்டிருப்பதால் எக்காரணம் கொண்டும் தங்கள் மீது மரண தண்டனை விதிக்கப் படக் கூடாது என்று வாதிடுகிறார்கள். இவர்களது இயக்கங்கள் பலப் பல. அத்தோடு வேறு வேறு நோக்கங்களின் பொருட்டு இவர்கள் செயல்படுகிறார்கள். இன்னும் இவர்கள் மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களையும் வேற்றுக் குழுக்களைச் சார்ந்தவர்களையும் கொலை செய்கிறார்கள்....

ஸ்பெயின் சக்கரவர்த்தி பிராங்கோவுக்கு எதிராக குடியரசின் விடுதலைக்காக உலகமெங்குமிருந்து கலைஞர்களும் எழுத்தாளர்களும் போராடச் சென்றார்கள். வியட்நாமிய யுத்தத்திற்கெதிராக உலக மனசாட்சியைத் தட்டி எழுப்புவதில் கலைஞர்களும் அறிவுஜீவிகளும் மாணவர்களும் நின்றார்கள். இலத்தீனமெரிக்கப் புரட்சியில் பங்கேற்கப் படிப்பாளிகளும் பெண்களும் அங்கு சென்று போராடினார்கள். விடுதலை இயங்கங்களின் ஆதரவு அமைப்புக்களை உலகெங்கும் கட்டினார்கள். ஆனால் இன்று புரட்சிகளையும் புரட்சி இயக்கங்களையும் ஆதரிப்பதில் ஏன் மனித உரிமையாளர்களும் அறிவுஜீவிகளும் கலைஞர்களும் பின்வாங்குகிறார்கள்? சார்பு நிலைப்பாடு எடுக்கத் தயங்குகிறார்கள் என்பது இடதுசாரிகளும் புரட்சியாளர்களும் கேட்டுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான கேள்வியாகும். இன்றும் போல்பொட்டையும் ஸ்டாலினது கொலைகளையும் அங்கீகரிப்பவர்கள், கவிதை பேசுவதும் ஜனநாயகம் பேசுவதும் நமது சூழலைப் பீடித்திருக்கும் அவலம். தமிழகத்திலும் இத்தகைய நோக்குடன் மரண தண்டனை எதிர்ப்பை அரசியல் தந்திரோபாயமாகப் பார்க்கும் எழுத்தாளர்களை நோக்கி மிக நியாயமான கேள்விகளை முன்வைக்கிறார் மனுஷ்யபுத்திரன்.

"சில சிந்தனையாளர்கள் மரண தண்டனையை அரசமைப்பின் வன்முறையாக இனங்கண்ட அதே சமயத்தில் அரசின் வன்முறைக்கெதிராக இயங்கும் போராளிகளின் வன்முறையைத் தவிர்க்க முடியாததாகவும் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதாகவும் முழு மனத்துடன் ஆதரித்ததைப் பார்க்க முடிந்தது. மரண தண்டனைக்கு எதிரான கருத்து என்பது மனிதர்களைக் கொல்வது பற்றிய அடிப்படைக் கேள்விகளை எழுப்புவதற்குப் பதில் சில கொலைகளை ஆதரிப்பதும் சில கொலைகளை எதிர்ப்பதுமான ஒரு நிலைப்பாடாக இருப்பது இந்த இயக்கத்தையே அர்த்தமிழக்கச் செய்துவிடும். உலகெங்கிலும் உள்ள சக்தி வாய்ந்த விடுதலை அமைப்புகள் திட்டமிட்ட வகையில் நிகழ்த்தி வந்திருக்கும் படுகொலைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் எண்ணற்ற சான்றுகள் உள்ளன. அவை அரச பயங்கரவாதத்திற்கு எந்த விதத்திலும் குறையாதவை. கருத்து முரண்பாடு கொண்டவர்களையும் அரசியல் எதிரிகளையும் இந்த இயக்கங்கள் தீர்த்துக்கட்டியிருக்கின்றன."

இதற்கான சாட்சியங்கள் வரலாறு நெடுகிலும் இருக்கிறது. ரஷ்யா முதல் கியூபா உள்ளடங்கி குர்திஸ்தான் இன்றைய ஈழப் போராட்டம் வரை அப்பாவிப் பொதுமக்கள் மீதான, மாற்றுக் கருத்தாளர்கள் மீதான படுகொலைகள் தொடர்ந்து நடந்துதான் வருகிறது....

மனுஷ்யபுத்திரன் சொல்வது போல் எழுதுகிறவன் இன்று கொலைகளைக் காத்து நிற்கிறவன் அல்ல. கொலைக்கான நியாயங்களைச் சொல்ல எழுதுகிறவன் தேவையில்லை. அதைக் கவனிக்க அரசுகளின், கட்சிகளின், இயங்கங்களின் பிரசார வெளியீட்டுப் பிரிவுகள் இருக்கின்றன. எழுதுகிறவனின் பொறுப்புணர்ச்சி மனிதனின் நேச மனம் சார்ந்தது. வெறுப்பை வெளியிட அவன் தேவையில்லை. ஏற்கனவேயே அதன் துர்நாற்றம் எங்குமெங்கும் நிரம்பி வழிகிறது.

5000 குர்திஸ் மக்களை ஒரே இரவில் விஷவாயு செலுத்தி படுகொலை செய்தான் ஒரு நாட்டின் தலைவன். அவனது பெயர் ஸத்தாம் ஹுசைன். அவனும் தனது நாட்டு இறையாண்மை பற்றித்தான் பேசினான். நாட்டுக்காகவே தான் இக்கொலைகளைச் செய்தேன் என்றான்....

## 'இன்டர்நெட்' திண்ணையிலிருந்து...

மூன்றாம் உலகின் இன்றைய படைப்பாளிகளின் முன்னுள்ள பிரச்சினை நம் சமூகங்களின் மிகப் பெரிய பிரச்சினையாகிவிட்ட அரசியல் வன்முறை! மேற்கில் வாழும் படைப்பாளியின் சுதந்திரம், அவனது எழுத்துக்கள் அச்சில் வைக்கப்படும் சுதந்திரம் தொடர்பானது. சில அறவியல் கோட்பாட்டுப் பிரச்சினைகள் தொடர்பானது. நமது சமூகங்கள் போன்ற கொந்தளிப்பான சமூகங்களில் வாழும் எழுத்தாளனின் சுதந்திரமானது அவனது உடலின் அழிவுக்கு வரும் அச்சுறுத்தல் தொடர்பானது. ருத் ஸ்லாவோ எனும் தென் ஆபிரிக்க கம்யூனிஸ்ட் பெண்மணி, கனாபானி எனும் பாலஸ்தீன புரட்சியாளர் போன்றோர் அவர்களது விமர்சனங்களுக்காகவே கொல்லப்பட்டவர்கள். இலங்கையிலும் போராளிகளால் கடத்திச் செல்லப்பட்ட பெண்கவி செல்வியின் நிலை என்னவென்று அவரது உறவினர்களும், அவரை நேசிப்பவர்களும் அடுத்தகட்ட வாழ்வுபற்றி யோசிக்க முடியாது மனோரீதியிலான சித்திரவதைக்குட்பட்டிருக்கிறார்கள்.

படைப்பாளிகளின் உடலின் அழிவு குறித்த அரசியல், விடுதலை அரசியலின் தார்மீகப் பிரச்சினைகள் எதிர்கால சமூகத்தின் அறவியல் அடிப்படைகள் போன்றவை குறித்த கேள்விகளை எழுப்புகிறது. அரச வன்முறைக்கு எதிராகப் போராடும் அமைப்புகளின் உள் வன்முறை குறித்து, மக்கள் மீதான ஆதிக்கம் குறித்து சுயவிமர்சன உணர்வு கொள்ள வேண்டிய காலத்தில் நாம் வாழ்கிறோம். புரட்சி குறித்த விமர்சனத்தை புரட்சிக்கு வெளியிலிருந்து செய்கிறவர்களைக் கண்டிக்கும் நாம் புரட்சிக்குள்ளும் மனிதவுரிமைகள், ஜனநாயகபூர்வமான கருத்தாடல்கள், சித்திரவதைத் தவிர்ப்பு போன்றவை குறித்தும் அக்கறைப்பட வேண்டும்.

- யமுனா ராஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைகளை வெல்லப் பயில்வோம்



வயதாகிவிட்டால் எம்மில் பலர் தளர்ந்து விடுகிறோம். இதற்குப் பிரதான காரணம் எமது உடல் தளர்வடைவதல்ல. மாறாக, எமது சிந்தனையும் கற்பனைகளுமே எம்மை பலஹீனமானவர்களாகவும், வயதானவர்களாகவும் வாழவைக்கிறது.

உங்கள உடல் உங்களுக்கு வயதின் அளவுக்கு வயதடைய வேண்டிய அவசியமில்லை. இந்தக் குறிப்புகள் உங்களை திடமானவர்களாகவும் செயற்பாடு மிக்கவர்களாகவும் ஆக்கி, உங்கள் உண்மை வயதை விட இளையவர் போல் தோன்ற வைக்க உதவும்.

தகுந்த காலக்கிரமமான உடற்பயிற்சி தொகுதியைத் தெரிந்து தினமும் செய்யுங்கள். அப்போது நீங்கள் உண்மை வயதைவிட குறைந்தவர்களாகவும் இளமையானவர்களாகவும் உணர்வீர்கள்.

சுறுசுறுப்பாக இருப்பது, துரிதமாக வேலை செய்வது என்பனவும் உடலின் சக்தித் தேவைக்கான எரிதற் செயற்பாட்டைத் தூண்டி உங்கள் தேவைக்கான கலோரிப் பெறுமானங்களை வெளிக்கொணரும்.

ஆனால் உடற்பயிற்சியோ, சமிபாட்டு வீதத்தை அதிகரிக்கிறது. பயிற்சி நேரத்தில் மட்டுமல்ல. அதன் பின்னான சில மணித்தியாலங்களுக்கு இதை நீடிக்கச் செய்கிறது. உடற்பயிற்சியே உடலின் சமிபாட்டு ஆற்றலை வலுப்படுத்தவும் உடலைக் கச்சிதமாகப் பேணவும் உதவக்கூடிய ஒரே வழி.

அதைவிட உடற்பயிற்சி என்புகளின் உறுதியை அதிகரிக்கிறது. இதயம், நுரையீரல் போன்ற அத்தியாவசிய உறுப்புக்களின் செயற்பாட்டுத் திறனை அதிகரிக்கிறது. தோலின் மெருகைக் கூட்டுகிறது. நீங்கள் எவ்வளவு வயதானவராக இருந்தாலும், உங்கள் உடலின் சத்துப் பொருட்களை உள்வாங்கும் ஆற்றலை அதிகரிக்கச் செய்கிறது.

நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஒருவர் கூட, உடற்பயிற்சி செய்து வந்தால், இருபது வயது கரண வீரர் ஒருவரைவிட அதிக புள்ளிகளைப் பெற முடியும். உலகில் தொண்ணூற்று ஒன்பது சதவீதமானவர்கள் தமது ஆற்றலை உணராதவர்களாகவே வாழ்கிறார்கள். ஆதலால் உங்களால், நீங்கள் முதுமையடைவதைப் பின்னோக்கிச் செயற்படவைத்து காலப்போக்கில் உங்களை நல்ல நிலைக்கு மீளச் செய்ய முடியும்.

ஒருபோதும் மனந்தளராதீர்கள். அல்லது விரக்தியடையாதீர்கள். 40 அல்லது 50 வயதில் உங்களை வயதானவராகவும், எந்தப் பயிற்சியும் செய்வதற்கு முடியாதபடி உங்கள் உடல் மிக விறைத்துப் போய் விட்டதாகவும் உணர்வீர்கள். இங்கு முக்கியமான விடயம் என்னவென்றால் உங்கள் உடலின் சகல பலஹீனங்களையும் குறைபாடுகளையும் நீங்களே முழு மனதோடு ஏற்றுக்கொள்ளாவிட்டால் உங்களால் எதையுமே கற்க முடியாது. உங்களுக்கு சில விடயங்களில் ஆற்றல் உள்ளதென்பதையும் சில விடயங்களில் ஆற்றல் மட்டமாகவே உள்ளதென்பதையும் நீங்களாகவே புரிந்துகொள்ள வேண்டும். அதற்கேற்ப உங்கள் அற்றலை வளர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். "ஒவ்வொருவனும் தான் தாண்ட வேண்டிய உடற் குறைபாடுகளைத் தன்னிடம் கொண்டிருக்கவே செய்கிறான்."

உங்களில் பலர் குங்ஃபூ கதாநாயகனாக, இலட்சிய வீரனாக புரூஸ் லீயை மனதில் வைத்திருக்கக் கூடும். புரூஸ் லீ இத்தகைய பேராற்றலுக்கான தன்மைகளை இயற்கையிலேயே கொண்டிருந்தவராகவே அநேகர் எண்ணுகின்றனர்.



நான் ஒரு சிலர் மட்டும் அறிந்துள்ள, அவருக்கிருந்த சில குறைபாடுகளுக்கும் மத்தியில் அவற்றை மேவி, அக்குறைபாடுகளையே கூட தன் ஆற்றலுக்குக் காரணிகளாக மாற்றியமைத்துக் கொண்டே அவர் இத்தகைய குங்ஃபூ மாவீரராகத் தன்னைத் தானே உருவாக்கிக் கொண்டார் என்பதை நீங்கள் அறிந்திருப்பது நல்லதெனக் கருதுகிறேன்.

உங்களுக்குத் தெரிந்திருக்காது, புரூஸ்லீயின் வலது கால் இடதுகாலை விட ஒரு அங்குலம் குள்ளமானது. இதனால் உள்ள அசௌகரியத்தை லீ தனது குங்ஃபூ ஆற்றலுக்குப் பாதகமாகக் கருதவில்லை.

மாறாக அவர் இக்குறைபாட்டை நிவர்த்திக்கக்கூடிய மிக உசிதமான கால்நிலைகளை வகுப்பதில் அதிக கவனம் செலுத்தினார். அதனால்தான் நாம் யாவரும் திரைகளில் கண்டு பிரமித்த சாகசங்கள் அவரிடமிருந்து பிறந்தன.

அவரது நிலைகளில் எப்போதும் தனது (நீளமான) இடதுகாலை முன்னே வைத்திருப்பதை யாரும் அவதானித்திருந்தால் அதன் காரணம் இப்போது புரியும்.

தனது வலது கால் குள்ளமென அவர் கண்டபோது, சில வகைப்பட்ட கால் உதைகளில் (*Kicks*) அது அவருக்குச் சாதகமாக இருப்பதை உணர்ந்தார் ஏனெனில் சமனற்ற இக்கால் ஊன்றுதல்கள், தனது உடல் வலுவை ஒருபுறமாக பாய்ச்சக் கூடிய வசதியை அவருக்கு அளித்தன. அவர் அதனால் இக்குறைபாட்டை தனக்கு அனுகூலமாக்கிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியாத மற்றொரு பாதகமான குறைபாடு அவரது கண்பார்வை.

புரூஸ் லீ எப்போதும் வில்லைக் கண்ணாடிகளை (Contact lenses) கண்ணுட் பொருத்தியிருப்பதை நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள். அவரது சிறு பிராயம் முதல் அவருக்கு குறும் பார்வைக் கோளாறு இருந்து வந்தது. அதனால் அவருக்கு கண்ணாடியின்றி சற்றுத் தொலைவிலுள்ள எதிராளியைத் தெளிவாகப் பார்க்க முடியாது.

அதனாலேயே அவர் தனது அடிப்படைக் குங்:.பூ முறையாக வின் சுன் (Win-chun) குங்:.பூவைத் தேர்ந்தெடுத்தார். அது ஒரு குறுந்தூரச் சண்டை முறை.

அவர் தன்னை எல்லைப்படுத்திய காரணிகளை சவாலாக ஏற்றுக்கொண்டு அவற்றின் மீது தனது ஆளுமையை வளர்த்துக் கொண்டார்.



அதைத்தான் நீங்கள் அவரிடமிருந்து பயில வேண்டும். அவரை எண்ணிப் பிரமிப்பதை விடுத்து நீங்கள் 40 அல்லது 50 வயதிலிருக்கும் போது உங்களை, உங்களது முன்னைய 20 அல்லது 30 வயது இளமைத் தோற்றத்துடன் ஒப்பிட்டுக் கவலைப்படுவதை முதலில் நிறுத்துங்கள்.

கடந்தகால நினைவுகள் ஒரு மாயத் தோற்றம் மட்டுமே. நீங்கள் நிகழ்காலத்தில் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் எப்படி இப்போது இருக்கிறீர்களோ அப்படியே உங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

உங்கள் வயது முதிர்ச்சியாலும் உடலின் வளைந்துகொடுக்கும் தன்மையில் ஏற்பட்டுள்ள கடினத்தாலும் நீங்கள் இழந்த விடயங்களை நீங்கள் ஈட்டிக்கொண்ட அறிவாலும் தொடர்ச்சியான பயிற்சியாலும் ஈடுகட்டிக்கொள்ள வேண்டும்.

நாம் எமது பலங்களை அறிந்து அவற்றை விருத்தி செய்யும் போது அவை எமது பலஹீனங்களை எடையிழக்கச் செய்து எமது சுமைகளை நீக்கிவிடும்.

குங்:.பூ பள்ளியில் கற்பிக்கப்படும் முதலாவது பாடங்களில் ஒன்று, மனம்தான் எமது எல்லாக் காரியங்களிலும் உள்ள பலம் வாய்ந்த காரணி என்பதே. பெருமளவுக்கு உடல் வலு தேவைப்படும் சில பயிற்சிகளில்கூட மனமே பிரதான-மான பலம்.

"மனமென்பது ஒரு வளமான காடு. நீங்கள் விரும்பும் எதையும் அது வளர்க்கும் - அது அழகிய பூக்களாக இருக்கலாம். அல்லது களைகளாகவும் இருக்கலாம். நாம் வளர்ப்பது ஆரோக்கியமான சிந்தனைகளா அல்லது எதிர்மறையான சிந்தனைகளா என்பதைப் பொறுத்து எமது வெற்றி தங்கியுள்ளது.

எதிர்மறையான சிந்தனைகள் வளர்ந்தால் க[illegible]



மற்றையவற்றை மூடிவிடும்.

உங்கள் மனதுள் எதிர்மறை எண்ணங்கள் புகவிடாதீர்கள். அவைகள் களைகள். அவை உங்கள் மன உறுதியைச் சிதைத்துவிடும்.

இவ் எதிர்மறை எண்ணங்களிலிருந்து எப்படி விடுபடுவது என்று சிந்திக்கிறீர்களா?

நீங்கள் எப்போதும் தோல்வியை எதிர்பார்த்திராது வெற்றியை எதிர்பாருங்கள். என்னால் இதைச் செய்ய முடியாதென்று எண்ணுவதை விடுத்து முடியும் என்று எண்ணுங்கள். எதிர்மறை எண்ணங்களை நீங்களே உற்சாகப்படுத்தி வந்தாலே அவை உங்களை ஆட்சி செய்யும். அவற்றை உதாசீனப்படுத்துங்கள். எதிர்மறையான எண்ணங்கள் யாவற்றையும் உங்கள் ஆளுகைக்குக் கீழ் கொண்டு வாருங்கள். உங்களை அவை ஆள விட்டுவிடாதீர்கள்.

இதே வேளை பயிற்சி, மனத்திடம் என்பவற்றைப் போல அடுத்த முக்கியமான ஒரு விட[illegible] உணவு ஒழுக்கம்.

ஆம்! பயிற்சியில் ஒழுக்கம் கடைப்பிடிக்கப்படுவதைப் போல உணவிலும் ஒழுக்கம் ஒன்றை நாம் கடைப்பிடிக்க வேண்டும். ஆரோக்கியத்துக்காகவே நாம் உணவு உட்கொள்கிறோம்.

ஆனால் தவறான உணவு ஒழுக்கம் ஆரோக்கியத்தை தருவதற்குப் பதிலாக சிதைத்து விடும் என்பதை அநேகர் உணர்வதில்லை.

குடி, புகைத்தல், போதை வஸ்துப் பாவனை போன்ற பழக்கங்களும் ஆரோக்கியச் சீர்கேட்டுக்கு மேலும் காரணியாக அமைகின்றன.

விலை மலிவான உணவோ அல்லது விலையுயர்ந்த உணவோ என்பது முக்கியமல்ல. நிறைவானதும் அளவானதுமான உணவே அவசியம். அதுவும் காலக்கிரமத்தில் அமைவதும் அவசியம்.

காலை உணவைப் பலர் அலட்சியமாக எண்ணித் தட்டிக்கழிப்பதுண்டு. இது மகா தவறு. மாறாக அதை ஆரோக்கியமான உணவாக மாற்றுங்கள்.

பலர் இரவு உணவை அதிகமாக உட்கொள்வதுண்டு. அதுவும் தவறு. இரவில் குறைவாக உண்ணுங்கள்.

குறைந்தது ஒரு நாளைக்கு ஆறு முதல் எட்டு கோப்பை நீர் அருந்துங்கள். நீர் மேலதிகமான உடற் கொழுப்பைச் சமிபாடடைவதற்கு உதவும். பசியைக் கட்டுப்படுத்தும்.

போதுமான நீர் அருந்துவதால், உடல் வெளியேற்றாது தேக்கி வைத்திருக்கும் திரவக் கழிவுகளை வெளியேற்றும்படியான சமிக்ஞையை நீங்கள் உடலுக்கு வழங்குகிறீர்கள். இல்லையேல் நீங்கள் வெளியே எவ்வளவு சுத்தமாக இருந்தாலும் உங்கள் உள்ளுடல் அசுத்தமான திரவத்திலேயே ஊற விடப்பட்டபடி இருக்கும்.

**அன்புடன்,**
**பில்லி வொங்**
**தமிழில் : பாஸ்கரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமா: நிஜமும் புனைவும்

## ஷங்கரின் முதல்வன் படத்தை முன்வைத்து



....ஆவலைத் தணியவிடாமல் தக்க வைக்கும் ஒரு நேர்த்தியான நாடகவடிவக் கட்டமைப்பு *(Well made play struture)* கொண்ட திரைக்கதை,

கண்களுக்கு விருந்து படைக்கும் வண்ண மாற்றங்கள் நிரம்பிய காட்சியமைப்பு,

உடலை அசைத்துத் தாளம்போடவும் நடனமிடவும் தூண்டும் இசையமைப்பு, முகத்திலறையும் வன்முறைக் காட்சிகளின் கோர்வை...

என்ற விதிகளுக்குள் இயங்கி வெற்றி பெற்றுள்ள ஷங்கரின் 5 படங்களில் காதலனும் ஜீன்ஸ்"ம் ஒருவகையான படங்கள். காதல், மோதல், கல்யாணம் என்று குடும்பப் பரப்பில் இயங்கியவை.

ஆனால் ஜென்டில்மேன், இந்தியன், முதல்வன் என்ற மூன்றிலும் காதல், மோதல், கல்யாணம் என்பன இருந்தாலும் அவை சமூகப்பரப்பைத் தளமாகக் கொண்டவை. இவற்றின் நாயகர்களுக்குக் காதலைவிட கண்முன்னே நடக்கும் சமூக அநியாயங்கள் முதலில் களையப்பட வேண்டும்.

இந்தியன் தாத்தாவிற்கு லஞ்சம் வாங்கும் பியூன், கிளார்க், ஆர். டி. ஓ., போக்குவரத்துக் காவலர், அரசு மருத்துவமனை டாக்டர், தவறாக பெர்மிட் வழங்கிய தன் மகன் உட்பட அனைவரையும் கொலை செய்வது முக்கியம்.

ஜென்டில் மேன் கதாநாயகனுக்கு திறமை மதிக்கப்பட வேண்டும் எனச் சொல்வது முக்கியம். திறமைக்கு வாய்ப்பளிக்காமல், இட ஒதுக்கீடு காரணமாக ஒதுக்கப்பட்டால் அத்திறமையான இளைஞர்கள் வன்முறையாளர்களாக - சட்டம் ஒழுங்கை மதிக்காதவர்களாக மாறிப் போவார்கள் எனச் சொல்வது முக்கியம்.





முதல்வன் பட நாயகனுக்கு இன்றைய அரசாங்கத்தால் கண்டுகொள்ளப்படாத அப்பாவி மக்கள் முக்கியம். சட்டம், ஒழுங்கை மதிக்காத சாதிச் சங்கங்களும் தொழிலாளர்களும் அடக்கப்பட வேண்டியது முக்கியம்.

இந்த 'முக்கியங்கள்' தான் காதலனும் ஜீன்ஸ்"ம் பெறாத சமூகப்பொறுப்புள்ள



படங்கள் என்ற பிம்பத்தை ஜென்டில்மேன், இந்தியன், முதல்வன் ஆகியவற்றுக்குப் பெற்றுத் தருகின்றன. ஷங்கரின் படங்களில் சமூகம் சார்ந்த செய்தி - மெஸேஜ் - இருப்பதாகப் பத்திரிகைகளை எழுத வைக்கின்றன.

'சமூகப் பொறுப்புள்ள படங்களின் இயக்குநர் ஷங்கர்' என்ற வாக்கியம் ஷங்கருக்குப் பொருத்தம் உடையதா? ஷங்கரின் முதன்மையான நோக்கம் அதுதானா?

இந்த வினாக்களுக்கான விடைகள், ஷங்கரின் படங்களைத் திரையரங்கில் பார்க்கும் பார்வையாளனின் இருப்பு நிலையை உணரும் பொழுது கிடைக்கக் கூடும்.

ஒரு கலைப்படைப்பில் ஈடுபடுகிறவன் தனது படைப்புகளுக்கான ஏதாவது கோட்பாட்டைக் கொண்டிருப்பான். அதன் மூலம் தனது பார்வையாளனை - வாசகனை - தனது முடிவு நோக்கிப் பயணம் செய்ய வைப்பான்.

ஆனால் வியாபாரியோ எதையாவது செய்து - நல்லதையும் பொல்லாததையும் கலந்து - இலாபம் ஈட்ட விரும்புவான்.

அவனது சரக்கில் நிஜங்களும் நிஜம் போல்வனவும் கலந்து நிற்கும். பெற்றுச் செல்பவன் எது நிஜம், நிஜம் போல்வன எவை எனக் கண்டுணர முடியாமல் திணறடிப்பதில் வியாபாரிகளின் திறமை தங்கியிருக்கிறது என்பன வியாபார உலகின் தந்திரங்கள்.

அருகேயுள்ள படத்தில் தங்கையை இறுகக் கட்டிப் பிடித்தபடி இருக்கும் பிரபல நட்சத்திரம் யாரென்று தெரிகிறதா? தெரியாதவர்கள் 45ம் பக்கத்திற்கு வாருங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்வன் படத்தில் அரங்கநாதன் நிஜம். அவனது கட்சி அரசியல்வாதிகளும் அவனை எதிர்க்கும் எதிர்க் கட்சி அரசியல்வாதிகளும் நிஜமானவர்கள். சட்டம் ஒழுக்குக்குக் கட்டுப்பட மறுத்து, சாதி ஓட்டுகளை இழுத்துப் பேசும் டிரைவர்கள் நிஜம். இவர்களால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதும் வதைபடுவதும் நிஜங்கள்.

ஆனால் இவற்றிற்கெதிராக நிறுத்தப்படும் 'ஒருநாள் முதல்வர்' புகழேந்தி ஒரு புனைவு. அல்லது கற்பனை. அந்த ஒரு நாளில் அதிகாரிகளும் பணியாளர்களும் இடைநீக்கம் செய்யப்படுவது கற்பனை. ஊழல் அதிகாரிகள், அமைச்சர்கள் தொடங்கி முதல்வர் வரை கைதாவது கற்பனை.

புகழேந்தியின காதலி (தேன்மொழி) நிஜம். அவனது அப்பா நிஜம். அம்மா நிஜம். அரசாங்க வேலைக்காரனுக்குத்தான் தனது மகளைக் கல்யாணம் பண்ணித் தருவேன் எனச் சொல்லும் மாமனார் - தேன்மொழியின் அப்பாவும் கூட நிஜம்தான்.

ஆனால் தேன்மொழியோடு கம்மாங் காட்டில் இருப்பவன் இந்தியாவின் பல மாநிலங்களின் எழில்கொஞ்சும் பிரதேசங்களில் ஆடிப் பாடும் காட்சிகள் புனைவு. அவர்களிருவரையும் சுற்றி நிற்கும் சோளக் கொல்லைப் பொம்மைகள், மண்பானைக் குவியல்கள், பரமபதப் பாம்புகள் என எல்லாம் புனைவுகள். அதுவும் கம்பியூட்டர் கிராபிக்ஸ் சார்ந்த அதீதப் புனைவுகளின் பின்னணியில் புகழேந்தியும் தேன்மொழியும் கட்டுப்பாடுகள் அற்றவர்களாகப் ஒட்டிக்கொள்வதும் தொட்டுக் கொள்வதும் நிஜமும் அல்ல. புனைவுமல்ல. போதை. உடலுறவு சார்ந்த மறைவுகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதால் கிடைக்கும் போதை.


தந்தையுடன் அபிஷேக்

மும்பையிலிருந்து ஒரு 'தேவதை' என நாசரினால் கொண்டுவரப்பட்டவர் கீர்த்தி ரெட்டி. தமிழில் 'இனியவளே', 'நினைவிருக்கும் வரை', 'நந்தினி' போன்ற பல படங்களில் நடித்தாலும் அவ்வளவாகப் பிரகாசிக்க முடியாமல் போனவர். தமிழ்த் திரையுலகின் நடைமுறைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அதிகம் பிரச்சினைக்கு உள்ளான நடிகையாகவும் இருந்தார். சமீபத்தில் 'வானவில்' படத்தில் நடிக்கும் வாய்ப்பையும் நழுவவிட்டார். கொஞ்சகாலம் தெலுங்குப் படவுலகம் கைகொடுத்தது. பிறகு அங்கும் முடியாமல் போன நிலையில் மீண்டும் மும்பைக்கே வாபஸாகிவிட்டார். அங்கு மேற்கொண்ட கடும் பிரயத்தனத்திற்குப் பலன் கிடைத்திருக்கிறது. அமிதாப் பச்சனின் மகன் அபிஷேக் பச்சனோடு ஒரு படத்தில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது அம்மணிக்கு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாதவன்

## அங்கிங்கு பொறுக்கியவை

☞ ஜெயாசீல் விளம்பரப்படங்களிலிருந்து (Kracker விளம்பரம் பார்த்திருப்பீர்கள்.) மலையாளம், பிறகு தமிழுக்கு வந்திருப்பவர். பெங்களூர்வாசி. தமிழ் புரிகிறது. அடுத்த படத்தில் சொந்தக்குரலில் பேசும் தீர்மானத்திலிருக்கிறார். 'பெண்ணின் மனதைத் தொட்டு' நன்றாகப் போகிறது. அடுத்து வரவிருக்கும் படம் 'சாமுராய்'.

☞ 'அலைபாயுதே' மாதவனின் அடுத்துவரும் படங்கள். கே. பாலச்சந்தரின் கவிதாலயாவுக்காக வஸந்த் இயக்கும் 'ஒரு காதல் கதை', ராஜீவ் மேனனின் உதவியாளர் கௌதம் வாசுதேவ் இயக்கும் 'மின்னலே' மற்றும் அன்பாலயா பிரபாகரன் தயாரிக்கும் அடுத்த படத்திலும் ஒப்பந்தமாகியிருக்கிறார்.

☞ தேவாவின் மகன் ஸ்ரீகாந்த் இசையமைக்க வருகிறார். இயக்குனர் கஸ்தூரிராஜாவின் மகனும் இயக்குனராகிறார்.

☞ 'பதினாறு வயதினிலே' என்ற பெயரில் இசை அல்பம் ஒன்றை வெளியிட்டிருக்கிறார் பாரதிராஜாவின் மகன் மனோஜ். இவருடன் பாடி நடித்திருப்பவர் மீனா. அடுத்த அல்பம் 'காதல் ஓவியம்' என்ற பெயரில் வரவிருக்கிறதாம்.

☞ கமலின் 'தெனாலி' படத்தில் ஒரு சின்ன ரோலில் நடிக்கிறார் மீனா.

பெண்ணின் அருகே நிற்பதையே அனுமதிக்காத சமூகத்தில் உலவும் பார்வையாளனுக்கு, இளம் பெண்ணின் இடுப்பு மடிப்புகளிலும் தொப்புள் குழியிலும் ஊதி விளையாடும் காட்சிகளும், இரண்டு மார்புகளுக்கிடையில் எழுதிப் பழகுவதும் நிச்சயம் நிஜம் சார்ந்தன அல்ல. அவை புனைவு சார்ந்தன என்று கூறுவதைவிட போதையூட்டுவன என்றே சொல்லலாம். இதே தளத்தில் இடம்பெறுவனதான் ரத்தம் சிதறும் சண்டைக்காட்சிகளும்.

இப்படி நிஜங்களையும் புனைவுகளையும் சரிவிகிதத்தில் கலந்து தரும் ஷங்கரின் திரைப்படக் கட்டமைப்பில் வில்லத்தனங்கள் நிஜங்களாகவும் நாயகத்தனங்கள் புனைவுகளாகவும் இருப்பது கவனிக்க வேண்டிய ஒன்று.

இப்படியான நிஜங்களையும் புனைவுகளையும் திரையரங்கில் காணும் பார்வையாளனும் ஒருவித இரட்டைநிலையில் இருப்பவனாக மாற்றப்படும் சாத்தியக்கூறுகள் உண்டு.

முதல்வன் படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் பார்வையாளன், மகிழ்ச்சியூட்டும் ஒரு புனைவுக் கதையைக் கண்டு மகிழ்பவனாக இருக்கும் அதே நேரத்தில், ஜனநாயகத்தில் தவறாக வாக்களித்த அல்லது வாக்களிக்க மறந்த வாக்காளனாகவும் இருக்க வைக்கப்படுகிறான். வாக்காளன் - பார்வையாளன் என்ற இரட்டை நிலையில் தனது இருப்பு நிலை வைக்கப்படும்பொழுது, படத்தோடு ஒன்றுவதும் விலகுவதுமான மனநிலையும் அவனுக்குள் வந்துவிடுகிறது. இந்த இரட்டை மனநிலையில் படம் முன் வைக்கும் தீர்வுகளை எப்படி எதிர்கொள்வான்?



சினிமா

ஒன்றுபட்டுவிட்ட நிலையில் அம்முடிவுகளை ஏற்பவனாக இருப்பான். விலகிய நிலையில் இல்லை, இது சாத்தியமில்லை என்று உணர்பவனாகக் குழம்புவான்.

இந்தக் குழப்பத்தோடு திரையரங்கைவிட்டு வெளியே வந்து முடிவுகளற்ற மனிதனாகவே உலவுவான். அவனது சிந்தனைக்கான கேள்விகளைக் கூட எழுப்பாமல் அனுப்பும் ஷங்கரின் நோக்கம் கூட அதுதான். அத்தோடு அந்தப் பார்வையாளனிடமிருந்து பணத்தை வசூலித்துவிடுவதும், தொடர்ந்து தனது பார்வையாளனாக மாற்றுவதும் கூட அவரது நோக்கம்தான்.

இந்த நோக்கத்தை ஷங்கர் தனி ஆளாய் நின்று சாதிக்கிறார் - நிறைவேற்றுகிறார் என்று சொல்லிவிட முடியாது. தனது முந்தைய பாடல்களின் இசையையே திரும்பவும் மாற்றிப் போட்டால் கூட உடலைத் துள்ள வைக்கும் இசைக் கோலங்களை எழுப்பும் ஏ. ஆர். ரகுமான் உடன் இருக்கிறார். அத்துள்ளல் இசைக்குள் தேன் தமிழ் வார்த்தைகளைச் சிதற வைக்கும் கவிப்பேரரசு வைரமுத்து இருக்கிறார். கம்பியூட்டர் திரைக்குள் கனவுலகைக் கட்டியெழுப்பும் வெங்கி இருக்கிறார்.

இவர்களுக்கெல்லாம் மேலாக வெகுஜனத் தமிழ் வாசகர்களின் நாடித் துடிப்பை முழுதும் உணர்ந்த பாலகுமாரன், சுஜாதா போன்ற எழுத்துலக ஜாம்பவான்களும் இருக்கிறார்கள். சுஜாதாவிடம் கேட்டால் அகப்பாடல் மரபிலிருந்து ஆண்டாளின் விரகதாபம் வரை மட்டுமே சொல்லித் தருவார் என்பதில்லை. ஐரோப்பிய நான்கு அங்க நாடகங்களின் கட்டமைப்பு குறித்து ஒரு நாள் முழுவதும் உதாரணங்களோடு வகுப்பெடுப்பார்.

இவ்வளவு ரதகஜதுரகபதாதிகளோடும் யுத்தம் தொடங்கும் ஷங்கர், வியாபார வெற்றி அடையாமல் போனால்தான் ஆச்சரியம்.

**- அ. ராமசாமி (காலச்சுவடு-28.)**

'விரும்புகிறேன்' படத்தில் பிரசாந்துக்கு ஜோடியாக அறிமுகமாகிறார் ஸ்நேகா. பெரும்பாலும் தங்கள் படத்துக்கான நாயகிகளை மும்பையிலிருந்தும், விளம்பரப் படங்களிலிருந்தும், ஏஜெண்டுகளிடமிருந்தும் பிடித்து வருவார்கள். ஸ்நேகாவை போட்டி ஒன்று வைத்துப் பிடித்திருக்கிறார் இயக்குனர் சுசி கணேசன். குமுதம் இதழில் கதாநாயகிக்கான போட்டியை அறிவித்து, விண்ணப்பித்திருந்த சுமார் 2000 பேருக்குள்ளிருந்து ஸ்நேகாவைத் தெரிவு செய்திருக்கிறார். இயற்பெயர் சுகாசினி ராஜாராமன். இயக்குனர் சுசி கணேசன் மணிரத்னத்தின் உதவியாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஷமீரா

'சிட்டிஷன்' படத்தில் முதல்முறையாக மேக்கப், டோப்பாவெல்லாம் போட்டுக் கொள்கிறார் அஜீத். இந்தப் படம் தன்னுடைய சினிமா வாழ்க்கையில் ஒரு மைல் கல்லாக அமையும் என்கிறார். தாய் மொழி ஹிந்தியாகவும், தந்தை மொழி மலையாளமாகவும் இருந்தும் சென்னையிலேயே வளர்ந்த அஜீத்துக்கு தமிழ்தான் நன்கு பேசத் தெரிந்த மொழி! எதையும் வெளிப்படையாகப் பேசுபவர் என்று பேர் பெற்றிருக்கும் அஜீத், நடிப்பிலும் அரிதாரமின்றி வருவதையே தன் வழக்கமாக வைத்திருந்தார். சிட்டிஷன் கதை மிகப் புதுசாக இருந்ததால் தன் வழக்கத்தை விட்டுக் கொடுத்திருக்கிறார்.

ஹீரோயின் ஷமீரா ரெட்டி. மும்பை வருகை. இவருக்கு அப்பா தெலுங்கு, அம்மா கன்னடம். பேசும் மொழி ஹிந்தி! மும்பையில் பங்கஜ் உதாஸின் இசை அல்பத்தில் நடித்துக்கொண்டிருந்தவர், தமிழ் ரசிகர்களைக் கலக்க வருகிறார். இந்தப் புயலின் ஷமீரா என்ற பெயருக்கு அர்த்தம் தென்றலாம்... அடடா!



ஹே ராம் படத்திற்காக வேறு எது எதற்கெல்லாமோ விருது கிடைக்கும் என்று நம்பியிருந்த கமலுக்கு ஏமாற்றமே கிடைத்திருக்கிறது. ஒரு ஆறுதல், மனைவி சரிகாவுக்கு படத்தில் அந்தக் காலத்துக்குரிய ஆடையலங்காரங்களைக் கவனித்துக் கொண்டதற்காக விருது கிடைத்திருப்பது. சரிகா முன்னாள் பிரபல ஹிந்தித் திரைநடிகை. எத்தனையோ படங்கள் நடித்திருந்தும் கிடைக்காத விருது, அவரது வேறொரு திறமைக்காக வந்திருக்கிறது. மகள் சுருதிஹாசனை நடிக்க அனுமதிப்பீர்களா என்று கேட்டதற்கு, "நான் நடித்த காலத்தில் நிறைய தவறுகளை விட்டுவிட்டேன். அந்தத் தவறுகள் என் மகளுக்கு நேரக் கூடாது. அவள் சிறந்த பாடகியாக வரவேண்டும் என்பதே என் விருப்பம்" என்று பதிலளித்திருக்கிறார்.



சரிகா (நடித்த காலத்தில்)

Fanta மற்றும் Fairever விளம்பரங்களில் வரும் ரிச்சா, இயக்குனர் சரணின் அடுத்த படமான 'அல்லி அர்ஜுனா'வில் நடிக்கிறார். மும்பை இறக்குமதியான இந்த ரிச்சா அறிமுகமாவது, கிராமத்திலிருந்து வந்து கலக்கிய இயக்குனர் பாரதிராஜாவின் மகன் மனோஜுக்கு ஜோடியாக.



ரிச்சா

## இவர்தான் அவர்!





தங்கை தனிஷாவை அணைத்தபடி காணப்படுபவர் கஜோல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயற்று

# ஹோமியோபதி நிறை - குறைகள்

**லண்டன் ஹோமியோபதி நிபுணர் நஹோமஜாருடனான உரையாடல்.**



**ஹோமியோபதி மருந்துகள் குணமளிக்க நீண்ட காலம் ஆகிறது என்று புகார் உண்டு. அது உண்மையா?**

அப்படியெல்லாம் இல்லை. இது ஒரு தவறான எண்ணம். கடுமையான நோய்களிலும் அறிகுறிகள் உடனடியாக மறையத் தொடங்கி மிகக் குறைந்த காலத்திலேயே நோய் குணமடையவும் செய்கிறது. ஆனால் 15 - 20 ஆண்டுகளாகத் தொடரும் நாட்பட்ட நோய்கள் கொஞ்சம் நீண்டகாலம் எடுக்கத்தான் செய்யும். ஏனெனில் இவ்வளவு நீண்ட காலத்திற்குப் பிறகு நோய்கள் ஆழமாக வேரோடிப் போய் விடுவதோடு இவை பரம்பரை நோய்களாகவும் இருப்பதால் குணப்படுத்தக் கடினமாகிறது. நாட்பட்ட நோயான மூச்சுக்குழல் ஆஸ்த்துமாவாக இருந்தாலும் 5 ஆண்டுகள் மருத்துவத்தில் குணமடைகிறது. இந்நோய் பொதுவாக குணமடைவதேயில்லை. குறிப்பாக பரம்பரை வழி வந்ததாக இருக்கும் நிலையில்.

**ஹோமியோபதி மருந்துகள் கெடுதலற்றவை என்பது ஒரு பொதுவான நம்பிக்கை. பல ஹோமியோபதி மருத்துவர்களும் ஹோமியோபதி மருந்துகள் பக்கவிளைவுகள் அற்றவை என்று கூறுகின்றனர். இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

இதுவும் தவறான எண்ணம்தான். விளைவுகளை உண்டாக்கத் தவறுமானால் அவை மருந்துகளே அல்ல. ஒவ்வொரு மருந்தும் உடலில் விளைவையும் எதிர் விளைவையும் உண்டாக்குகின்றன. தகுதியுள்ள ஹோமியோபதி மருத்துவரின் வழிகாட்டுதலின்படி சில நாட்களுக்குச் சரியான அளவுகளில் உபயோகித்தால் ஹோமியோபதி வீரிய மருந்துகளால் உடனடியாக பக்க விளைவுகளோ திசு மாற்றங்களோ இல்லாமல் போகக்கூடும். ஆனால் நீண்ட நாள் ஒரு கட்டுப்பாடின்றி மருந்துகள் எடுப்பதால் உடலில் மருந்துக்கு அடிமைப்படும் தன்மை உண்டாகும் என்பதில் ஐயமில்லை. இதில் நம்பிக்கையற்ற யார் வேண்டுமானாலும் சோதித்துப் பார்த்துக்கொள்ளலாம்.

**ஹோமியோபதி மருத்துவத்தில் ஆய்வு கூடப் பரிசோதனைகள் செய்யப்பட வேண்டியது உள்ளதா?**

ஆம். உள்ளது. நோயாளி ஒருவர் நீரிழிவு உடையவர் என்றால் (அவர் இனிப்பு உண்பதை நாம் கட்டுப்படுத்த வேண்டியிருக்கிறது. சிறுநீரகக் கோளாறுக்கு உப்பு உட்கொள்வதையும் மஞ்சள் காமாலைக்கு கொழுப்பு உட்கொள்வதையும் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. இப்படியே பிறவும் ஆய்வு கூட பரிசோதனையின்றி நீரிழிவு எந்த அளவு உள்ளது, அதை எப்படிக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வது என்றெல்லாம் நம்மால் எப்படி அறிய முடியும்? ஆய்வுகூடப் பரிசோதனைகள், உடற் பயிற்சி, நோய்க்கூறு அடிப்படையில் மருந்துத் தேர்வு - குறிப்பாக குணப்படுத்த அரிதான கேஸ்கள் போன்றவற்றைத் தீர்மானிக்கவும் துணை நிற்கும். மருத்துவத்தினால் ஏற்படும் முன்னேற்றத்தைப் புரிந்துகொள்ள ஆய்வு கூடப் பரிசோதனைகள் துணை செய்கின்றன.

**ஹோமியோபதி மருந்துகள் பாக்டீரியாக்களையோ, வைரஸ்களையோ கொல்லுமா?**

ஹோமியோபதி மருந்துகளால் தொற்று நோய்கள் குணமடைவதில்லை என்று பொதுவாக எண்ணம் உள்ளது. ஆனால் இது முழுவதும் உண்மையல்ல. டைபாய்டு, காலரா, டீ-கோலை, நிமோனியா, தொற்றும் தன்மையுள்ள ஹெபடைட்டிஸ் இன்ன பிற யாவும் ஹோமியோபதி மருந்துகளால் குணப்படுத்தக் கூடியவையே. தொடக்கத்தில் நமது நாட்டில் காலரா மருத்துவத்தில் ஹோமியோபதி நல்ல பெயர் பெற்றது.

ஹோமியோபதி மருந்துகள் சோதனைக் குழாயில் (Invitro) பாக்டீரியாக்களையோ, வைரஸ்களையோ கொல்வதில்லை என்பது உண்மையே. ஏனெனில் நமது மருந்துகள் உடலியல் அல்லது வேதியியல் ரீதியாக செயல்படுபவையல்ல. மாறாக ஒருவகை ஊக்குவிக்கும் வழியில் செயல்படுகின்றன. ஆற்றல் மிக்க மருந்துகள் நரம்பு முனைகளைத் தொட்டு, நோய்க்குக் காரணமான கூறுகளுக்கு எதிராகச் செயல்படுமாறு உடல் முழுவதையும் தூண்டுகின்றன. இதன் விளைவாக தனிப்பட்ட மற்றும் பொதுவான நோய் எதிர்ப்புக்கூறுகள் உருவாகி, நோய்க் கூறுகளை எதிர்த்து செயல்படுவதால் நோயாளி நலமடைகிறார். இதை எந்தத் தொற்று நோயிலும் சோதித்து சரிபார்த்துக்கொள்ளலாம்.

**ஹோமியோபதியில் தடுப்பு மருந்துகள் எதுவும் இல்லையா?**

உண்டு. எமது முற்கால ஹோமியோ மருத்துவர்கள் பரிந்துரைத்தபடியும் உலகம் முழுவதும் புதிதாக பல மருத்துவர்களின் கண்டுபிடிப்புகளையொட்டியும் எல்லா வகையான தொற்று நோய்களுக்கும் பல தடுப்பு மருந்துகள் இருக்கின்றன. இதைச் சரி பார்த்துக்கொள்ள புள்ளி விபரங்கள் சரிவர கைவசமில்லை. மேலும் இவ்விஷயத்தில் பெருமளவிலான நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் இல்லை. இத்திட்டத்தை நடத்த அரசாங்க உதவியும் ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது.

ஆனால் கொள்ளை நோய் தாக்கிய காலத்தில் பாஸ்பரோஸ் என்ற ஹோமியோபதி தடுப்பு மருந்து இந்தியாவெங்கும் இலட்சக்கணக்கான மக்களுக்கு வழங்கப்பட்டது. கண் நோய் பரவிய காலத்திலும் யூப்ரேசியா எனப்பட்ட தடுப்பு மருந்து பெங்களூர் ஹோமியோபதி மருத்துவமனை ஒன்றில் ஆயிரக்கணக்கானோருக்கு கொடுக்கப்பட்டது.

**ஹோமியோபதியில் கருத்தடை மாத்திரைகள் உண்டா?**

ஹோமியோபதியின் வீரிய மருந்துகள் உடல் - மனம் இரண்டின் மீதும் செயல்படுபவை. அவற்றை நீண்டகாலம் பயன்படுத்துவது செயற்கையான மருந்து நோய்க்கு வழிவகுக்கக்கூடும். எனவே மாதவிடாய் சுழற்சியை மாற்றி கருவுறுதலைத் தடுக்கக் கட்டாய மருந்துகள், அதே சமயம் அதைப் பயன்படுத்துவோரை நாள்பட்ட நோயாளியாக அல்லது மன அளவில் பிறழ்ச்சி உடையவராக மாற்றக்கூடும்.

எனவே ஹோமியோ கருத்தடை மாத்திரைகளை அறிமுகப்படுத்துவதில் ஒருசில முயற்சிகளே நடைபெற்றுள்ளன. ஆனால் இப்பொழுது ஹோமியோ மருத்துவர்கள் இதை மனதிற்கொண்டு ஆய்வு செய்து வருகிறார்கள். சிலருக்கு வெற்றியும் கிடைத்துள்ளது எனப் படித்திருக்கிறேன்.

**ஹோமியோபதி மருந்துகள் கருச்சிதைவு உண்டாக்குவதின் மூலம் தாய்மையுறுவதை நிறுத்தக்கூடுமா?**

அநேகமாக இல்லை எனலாம். ஹோமியோபதி அடிப்படைகளை மீறி மருந்துகளைக் கொடுத்தாலன்றி இது சாத்தியமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**✉ தாய்மையுற்ற நிலையிலும் ஹோமியோபதி மருத்துவத்தைத் தொடரலாமா?**

✍ தொடரலாம். கருவுற்ற நிலையிலும் நோய்களை குணமாக்க ஹோமியோபதி மருத்துவம் செய்யலாம்.

கருவுற்ற நிலையில் ஹோர்மோன்களின் செயற்பாடு பெருகுவதால் எல்லா நோயறிகுறிகளும் வெளிப்படையாகத் தெரிகின்றன. தாய்க்கு ஏற்ற மருந்தை தேர்ந்தெடுப்பது எளிது. வயிற்றில் வளரும் சிசுவும் பரம்பரை நோய்களின் பிடியிலிருந்து விடுபட முடியும்.

கருவுற்றதால் ஏற்படும் சிக்கல்கள், குழந்தை தவறான நிலையில் இருப்பது அல்லது கருப்பை மந்த நிலை போன்றவைகளை தாய்மைக்கால நெடுகிலும் தாய்க்கு வெற்றிகரமாக மருத்துவம் தரமுடியும்.

**✉ ஹோமியோபதி மருத்துவர்கள் நோய் வரலாற்றை அறிய அதிக நேரம் எடுத்துக் கொள்கிறார்கள். நோயாளிகளுக்குப் பிடிக்காத பல கேள்விகளைக் கேட்கிறார்கள். குறிப்பாக நேரம் அற்ற நோயாளிகள் விஷயத்தில் என்று புகார் உள்ளது. இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

✍ அது உண்மைதான். முக்கியமான நோய்கள் பலவற்றிற்குக் குடும்பப் பின்னணி உள்ளதா, நோயாளியின் கடந்தகால வாழ்விலும் தனிப்பட்ட முறையிலும் நோயுடன் என்ன தொடர்பு என்பவைகளையெல்லாம் ஆராய்ந்து, பிறகே நோயின் காரணம் என்ன எனபதையும் அதன் அடிப்படையையும் நோயாளியிடம் உறுதிசெய்ய வேண்டியுள்ளது.

நோயாளியைப் பற்றிய விரிவான தகவல் மதிப்பீடின்றி, நோயாளிக்கு ஏற்ற சரியான மருந்தைத் தெரிந்தெடுக்க முடியாது. குறிப்பாக நாட்பட்ட நோய்கள் விஷயத்தில், தீவிரத் தாக்குடைய நோய்களில் இதுபோன்ற நோய் வரலாறு பொதுவாகத் தேவையில்லை.

இவ்விஷயத்தில் நோயாளிகள் தாமாக முன்வந்து மருத்துவருடன் உடனுழைக்க வேண்டும். மருத்துவரைப் பார்த்துச் செல்ல அடிக்கடி வந்தாலும், முதல் முறை பார்க்க வந்த போது இருந்த சிக்கல்கள் ஒவ்வொன்றும் அதிகரிக்கிறதா, குறைகிறதா என்ற மாற்றங்களை அறிந்து உறுதி செய்ய குறிப்பிடத்தகுந்த நேரம் செலவாகும்.

**✉ ஹோமியோபதிக்கு ஏதேனும் வரையறைகள் உள்ளனவா?**

✍ ஆம். உண்டு. ஒவ்வொரு மருத்துவ அறிவியலுக்கும் உரிய வரையறைகள் (எல்லை) உண்டு. அதற்கு ஹோமியோபதியும் விதிவிலக்கல்ல. மரபு வழிவரும் நோய்களுக்கும் பிறவி ஊனங்களுக்கும் நிவாரணம் கிடையாது. இவை ஓரளவுக்குச் சரிசெய்யப்படலாம். கைமீறிப் போய்விட்ட அல்லது பின்திரும்பச் செய்ய இயலாத சில மாற்றங்களுடன் கூடிய நோய்களுக்குப் பொதுவாக நிவாரணம் இல்லை. (எ. கா) விழித்தசைகளில் குறைபாடு, கல்லீரல் சிதைவு மிக மோசமடைந்த நிலை, கேடடைந்த கீல்வாத மூட்டு வீக்கம் (ருமட்டாய்டு ஆர்த்ரைட்டிஸ்) முற்றிய புற்றுநோய் மற்றும் பிற உணவு வைட்டமின்கள் போன்ற உடலியல் பற்றாக் குறைகளை ஹோமியோபதி ஓரளவே சரிசெய்யும்.

விபத்து, நஞ்சு அருந்திவிடல், அறுவை சிகிச்சையின்றி முடியாது என்னும் நிலையிலுள்ளவர்களுக்கு ஹோமியோபதி சிறிதளவே பயன் தருகிறது. அல்லது ஒன்றுமே செய்ய முடியாமலும் போகலாம். நோய்க்கான காரணங்கள் தொடர்கின்ற நிலையில் ஹோமியோபதியால் கிடைக்கும் நன்மை ஒரு எல்லைக்குட்பட்டதாகவே இருக்கும்.

**✉ ஹோமியோபதி அறிவியல்பூர்வமானதா என்பது பற்றி எப்போதுமே சில ஐயங்கள் இருந்து வருகின்றன. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

✍ ஹோமியோபதி மருந்துகளின் வீரியத் தன்மையை நிரூபிக்கும் பரிசோதனை முறை எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்கிற நிலையில் ஹோமியோபதி அறிவியல் பூர்வமானதா என்ற கேள்வி எழுவதில் வியப்பு இல்லை. ஆனால் இதை வைத்து உண்மைகளை மறைத்துவிட முடியாது.

ஹோமியோபதி மருந்துகள் 30-வது அல்லது அதிகமான வீரியத்தில் தரப்படும்போது, உடல்நலமுடைய மனிதனிடம் வெளிப்படையான மாற்றங்களை - இயல்புக்கு மாறான உணர்வுகள், செயல்பாடுகள் - என உண்டாக்குகின்றன. இது நிரூபிக்கப்பட்ட உண்மை. யார் வேண்டுமானாலும் இதை சரிபார்த்துக் கொள்ளலாம். அதைப் போலவே, மேற்கண்ட வீரியங்களிலுள்ள, ஹோமியோபதி மருந்துகள் பல்வேறு நோய்களால் துன்புறும் ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்குப் பலனளித்துள்ளது.

ஒரு ஹோமியோபதி மருந்து எவ்வாறு செயல்படுகின்றது என்பது நிபுணர்களுக்குக் கூட இன்னமும் தெளிவாகவில்லை. ஆனால் இது அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்படுகிற நாள் வெகு தொலைவில் இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட ஆய்வு ஒன்று ஹோமியோபதியின் அறிவியல்பூர்வமான நிலையை நிரூபிப்பதாக இருந்தது.

இந்த ஆய்வின் சுருக்கம் பிரிட்டிஷ் மெடிக்கல் சஞ்சிகையில் வெளியிடப்பட்டது. இந்த ஆய்வை செய்தவர்கள் ஹோமியோபதி மருத்துவர்கள் அல்ல. மருத்துவ பேராசிரியர்கள். *(Clinical Trials of British Medoical Journal Feb. 9, 1991)*

- நன்றி : ஹெல்த்

## அம்மா... அம்மா...



**பெண்ணுடன் சிநேகம் கொண்டால்
காதறுந்து போகும் என்றாய்**

**தவறுகள் செய்தால் சாமி
கண்களைக் குத்தும் என்றாய்**

**தின்பதற் கேதும் கேட்டால்
வயிற்றுக்குக் கெடுதல் என்றாய்**

**ஒருமுறைத் தவிட்டுக்காக
வாங்கினேன் உன்னை என்றாய்**

**எத்தனை பொய்கள் முன்பு
என்னிடம் சொன்னாய் அம்மா**

**அத்தனை பொய்கள் முன்பு
சொன்ன நீ எதனாலின்று
பொய்களை நிறுத்திக் கொண்டாய்**

**தவறுமேல் தவறு செய்யும்
ஆற்றல் போய் விட்டதென்றா?
எனக்கினி பொய்கள் தேவை
இல்லையென் றெண்ணினாயா?**

**அல்லது வயதானோர்க்குத்
தகுந்ததாய்ப் பொய்கள் சொல்லும்
பொறுப்பினி அரசாங்கத்தைச்
சார்ந்ததாய்க் கருதினாயா?**

**தாய்ப்பாலை நிறுத்தல் போலத்
தாய்ப்பொய்யை நிறுத்தலாமா?**

**உன் பிள்ளை உன்னை விட்டால்
வேறெங்கு பெறுவான் பொய்கள்?**

**- ஞானக்கூத்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### தங்கத் தாமரை

குழந்தை இலக்கியம்

*செ. யோகநாதன்*

*விலை : ரூபா 100*

குழந்தை இலக்கியம் ஒரு மொழியின் படைப்புத் துறையில் மிக முக்கியமான பிரிவு. மக்களின் பண்பாட்டு வளர்ச்சியில் குழந்தைகளின் மன ஆளுமையே முக்கியமானது. இன்னும் சொன்னால் நல்ல மனிதனுக்கான விதை, குழந்தைப் பருவத்திலேயே போடப்படுகின்றது. இந்த விதையை செழுமை வாய்ந்ததாக ஆக்குவது குழந்தைகளின் அறிவே. இந்த ஆற்றலை அவர்களுக்கு, அளிக்கப்படுகின்ற கல்வியும், இலக்கியங்களுமே கொடுக்கின்றன.

இப்போது தமிழிலே குழந்தைகளுக்கான இதழ் என்று எதுவுமே வெளியாவதில்லை. வார சஞ்சிகைகளின் இணைப்புகளாக குழந்தைப் பக்கங்கள் வருகின்றன. இவற்றில் பல, வண்ணங்களைப் பூசி பக்கங்களை நிரப்புகின்றன. நூல்களின் வெளியீடோ இதை விட மோசமாக உள்ளது. இந்தச் சூழலிலேதான் குழந்தை இலக்கியத்தில் நன்கு பரிச்சயம் கொண்ட செ. யோகநாதனின் 'தங்கத்தாமரை' வெளியாகியுள்ளது.

குழந்தை இலக்கிய உலகின் சிறந்த ஓவியரான ஆர்த்தர் ராக்கிம், ட்ராஸ்கி மருது, கிட்டான் ஆகியோர் தங்கள் ஓவியங்களால் நூலை அலங்கரிக்கின்றார்கள். குழந்தைகள், தமது கற்பனைக் கண்களால் இந்த ஓவியங்களை மேலும் மேலும் விசாலப்படுத்துவார்கள். சிறந்த ஓவியங்களின் வல்லமை இதுதான். இன்றைய குழந்தைகளின் மனோநிலை, சொல்வளம் என்பவற்றை நன்கு அறிந்தவர் செ. யோகநாதன் என்பதை அவரின் ஒவ்வொரு கதைகளும் உறுதி செய்கின்றன.

இன்றைய குழந்தை இலக்கியம், பாட்டோடும் கதையோடும் ஆக்கப்படுகிறது. இந்த முறையையே செ.யோகநாதனும் சிறப்பாகக் கையாண்டிருக்கிறார். கதையைச் சொல்லிக் கொண்டே குழந்தைகள் ஓசைநயத்தோடு இப்புத்தகத்தின் உதவியோடு பாடி மகிழ்வார்கள்.

ஒழுக்க நெறி, அறிவியல் செய்தி என்பன தொகுதியின் கதைகளில் பொதிந்து, குழந்தைகளின் படிப்பு ஆர்வத்தினைத் தூண்டுகின்றன.

ட்ராஸ்கி மருதுவின் அட்டைப்படம் அருமை. சிறந்த பதிப்பு.

**வெளியீட்டாளர்:**
**அட்மிரல் பப்ளிஷர்ஸ்,**
***403-1/1,* காலி வீதி, வெள்ளத்தை.**

### என் வசந்தம் வராமலே போய்விட்டது




*அஸ்வகோஸ்*

*விலை : ரூபா 20*

இன்றைய வாழ்க்கையின் கிழிசல்களுக்கும், முற்றிலுமாகச் சிதறுண்டு போன இலங்கைத் தமிழன் மனதுக்கும் மற்றுமொரு உதாரணமாக அஸ்வகோஸ் தன் படைப்புகளுடு மலர்ந்திருக்கிறார். 'யாரோ எதற்கோ பலியாகி விட்டவர்கள் நாம்' என்று அடையாளக் குழப்பத்தையும், அவலங்களையே நக்கும் இருப்பின் ஓலத்தையும், உதிரும் பூக்களிடையே விரியும் மொட்டினையும் பேசுகின்ற சிறியதும் பெரியதுமான 29 கவிதைகளைக் கொண்டிருக்கின்றது இந்நூல்.

'பிரம்மத்தின் பின்னின்று அம்பெய்து கொன்றவன் நீயென, / நீட்டிய கையை உதறி இம்சித்து, / களவெடுத்து கூச்சமின்றி முகம் கொண்டவனென / காவியங்கள் உனைத் துதிக்கின்றன! / நீயுரைத்த பொய் என்னுள் இருந்தது. / உன் பாடல் என்னுள் வளர்ந்தது. / நீயோ நான் சந்திக்க விரும்பாதவரையெல்லாம் / அணியணியாய் என்னிடம் அனுப்பி வைத்தாய், / கொல்லப்படுவதற்காய்!'

குரூரமாய்த் திரிந்து போயிருக்கிறது வாழ்க்கை! யாரை நோவதென்று தேடுகின்றன கவிதைகள்.

**வெளியீடு :** மணிமேகலைப் பிரசுரம், சென்னை 17.

### பாதை தெரியாத பயணம் (நாவல்)




*திக்குவல்லை கமால்*

*விலை : ரூபா 200*

தமிழ்ப்படைப்புகளில் இளந்தலைமுறையின் வாழ்வு, ஏக்கம், உணர்வுகள் என்பன பற்றி விபரிக்கும் ஆக்கங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. திக்குவல்லை கமாலின் இந்த நாவல் இன்றைய தலைமுறை பற்றிய யதார்த்த பூர்வமான - குறிப்பிடத்தக்க படைப்பு.

ரஷிதா என்ற யுவதியின் மூலம் மாணவ சமுதாயத்தின் வாழ்வினை ஆசிரியர் காண்பிக்கிறார். திக்குவல்லை என்ற சிறு பிரதேசமே கதையின் தளம். பிரதேச வழக்கு, மண் மணங்கமழும் உரைநடை என்பன மனதை அள்ளும் விதத்திலே உள்ளன.

நாவலில் பின்னோக்கிச் செல்லும் உத்தியினைச் சிறப்பாகவே கையாண்டு வாசகர்களின் ஆர்வத்தைத் தூண்டி இருக்கின்றார்.

பாத்திரப் படைப்பில் மிக நுணுக்கம் காட்டப்பட்டுள்ளது. நாவலைப் படித்து முடித்த பின்னர் பாத்திரங்கள் நமது வாழ்க்கையில் தொடர்புள்ளவர்களாக மாறிப்போய்விடுகிறார்கள்.

அழகிய பதிப்பு. கலாபூஷணம் ஏ. இக்பாலின் முன்னுரையோடு நாவல் வெளியாகியுள்ளது.

### கடற்காற்று (நாவல்)




*அங்கையன் கயிலாயநாதன்*

*விலை : ரூபா 130*

கடல் வாழ்வைப் பற்றி தமிழிலே எழுதப்பட்ட முதலாவது நாவல் 'கடற்காற்று'. 'அங்கையன்' கயிலாசநாதனின் இந்த நாவல் பல்கலைக்கழகப் பரிசினைப் பெற்றது. இப்போ வாசிக்கின்ற போதும் நேற்றே எழுதப்பட்டது போல வாசகர்களை வசப்படுத்துகிறது. ஒரு கடலோரக் கிராமம். அங்குள்ள மக்களின் பல்வேறு விதமான மனோபாவங்கள், அவர்களின் நம்பிக்கை, நிராசை என்பனவற்றை கவித்துவ நடையில் சொல்லியுள்ளார் 'அங்கையன்'.

கதையின் நாயகி, நாவலில் வலுப்பெற்ற பாத்திரமாக உருவாக்கப்பட்டிருக்கிறார். அவளின் இயக்கம் மற்றவர்களை இயக்கித் துலங்க வைக்கிறது. சூழலினைப் பற்றிய சொற்சித்திரம் நம்மை கடல்வாழ்வுக்கு மானசீகமாகவே அழைத்துச் செல்கின்றது.

**வெளியீடு :** எம். டி. குணசேன, 217, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-11.

**நூலாய்வு : மாணிக்கவாசகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினகரன்

தினකරන් THINAKARAN

உங்கள் தினகரன் பல்வேறு பயன்மிக்க அம்சங்களைத்
தாங்கி வெளிவருகின்றன.
அதிகளவு செய்திகள், சமகால விடயதானங்கள்,
அர்த்தபுஷ்டியான கட்டுரைகள்...
தமிழ் பேசும் தேசியக் குரலான தினகரன்
வாசகர்களுக்கு புதிய தரிசனங்களைத் தருவதில்
தொடர்ந்து முன்னணியில் நிற்கின்றது.
வாசிப்புக் கலாசாரத்தை வளர்த்தெடுப்போம்.
நிறைவுபெற்ற மனிதர்களாய் வாழ்ந்திடுவோம்.
தினகரன் நாளிதழ் எதிர்கால நல்லுறவைச் செப்பனிடும்
சிற்பிகளான சிறார்களின்
கல்வி வளர்ச்சியை மேம்படுத்துகின்றது.
க. பொ. த. சாதாரண தர மற்றும் உயர்தர வகுப்பு
மாணவர்களுக்கான
பாடங்களும் பரீட்சை வழிகாட்டிகளும்
புலமை சார்ந்த ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்டு
வழங்கப்படுகின்றது.
உலக நிகழ்வுகளை இலகுவில் தமிழில் உடனுக்குடன்
வாசகர்களுக்கு வழங்குகின்றது.
சகல சமயத்தினரினதும் ஆன்மீக உணர்வினை ஊட்டு
வளர்க்கின்றது.
அறிவுக்கு விருந்தளிக்கும் உன்னத கட்டுரைகள்
அகக்கண்களைத் திறக்கச்செய்கின்றன.
சகல லேக் ஹவுஸ் முகவர்களிடமும்,
புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுது

## சந்தா விபரம்

### உள்நாட்டு சந்தா
### (ரூபாவில்)

| | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|
| நேரடி விநியோகம் கொழும்பு நகருக்குள்) | 360.00 | 180.00 | 90.00 |
| தபால்மூல விநியோகம் | 552.00 | 276.00 | 138.00 |

### வெளிநாட்டு சந்தா
### (அமெரிக்க டாலரில்)

| நாடு | | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|---|
| இந்தியா | $ | 10.00 | 5.00 | 3.00 |
| பாகிஸ்தான் | $ | 10.00 | 5.00 | 3.00 |
| மாலைதீவு | $ | 10.00 | 5.00 | 3.00 |
| சிங்கப்பூர் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| மத்திய கிழக்கு | $ | 12.00 | 6.00 | 3.00 |
| ஹொங்கொங் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| இங்கிலாந்து | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அவுஸ்ரேலியா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| ரஷ்யா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அமெரிக்கா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| கனடா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| மேற்கிந்தியா | $ | 16.50 | 8.25 | 4.25 |

**காசோலைகள், அனுப்பப்பட வேண்டிய பெயர்:**
The Associated Newspapers of Ceylon Ltd.

**முகவரி:**

Marketing Manager,
The Associated Newspapers of Ceylon Ltd.
P.o. Box 1198,
Lake House,
Colombo, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org